DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyragu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

TEAM SMART
REAL ESTATE PROFESSIONALS
VARATHAN ANUSHAN
THIRU GOBIRAJ
416.219.3333

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
Canadian Media Circulation Audit
$1.00
416-752-1524 www.uthayannews.ca
உதயம் 1408 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday March 31, 2023

# கனடிய மத்திய அரசின் 2023 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் மக்கள் நலன் சார்ந்த பல முதலீடுகள் அறிவிக்கப்பெற்றுள்ளன

## பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரியின் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கை



கனடிய மத்திய அரசின் 2023 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் மக்கள் நலன் சார்ந்த பல முதலீடுகள் அறிவிக்கப்பெற்றுள்ளன என ஸ்காபுறோ ரூஜ் பார்க் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரியின் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பெற்றுள்ளது. அதன் விபரங்கள் பின்வருமாறு:

2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் கனேடியர்களுக்குப் பணவீக்க நிவாரணமாகப் புதிய, இலக்குவைத்த உதவிகளை அரசு அறிமுகம் செய்கிறது. பணவீக்கத்தை அதிகரிப்பதைத் தவிர்ப்பதற்காக இந்தப் புதிய உதவிகள் கவனத்துடன் உருவாக்கப்பட்டுள்ளன.

(உள்ளே தொடர்ச்சி 13ம் பக்கத்தில்)

# RE/MAX Community Realty Inc நிறுவனத்தின் வருடாந்த விற்பனை விருதுகள் வழங்கும் சிறப்பாக நடைபெற்றது

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் இரண்டு விற்பனை முகவர் நிறுவனங்களை நடத்திவரும் திரு ரஜீவ் கோணேஸ்வரன் தலைமையிலான **RE/MAX Community Realty Inc** நிறுவனம் தனது வருடாந்த விற்பனை விருதுகள் வழங்கும் விழாவை கடந்த 24-03-2023 அன்று வெள்ளிக்கிழமை ஸ்காபுறோ கொன்வென்சன் விழா மண்டபத்தில் சிறப்பாக நடத்தியது. இங்கே உள்ளே படங்களில் வெற்றி பெற்ற முகவர்களை நிறுவனத்தின் தலைவர் ரஜீவ் கோணேஸ்வரன் கௌரவிப்பதைக் காணலாம்.





(உள்ளே தொடர்ச்சி 7ம் பக்கத்தில்)

JENITA AREVIN
BROKER
DOWNTOWN SPECIALIST
416.320.3201
JENITA@AREVIN.CA
ROYAL LEPAGE IGNITE REALTY, BROKERAGE

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள் பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ALL IN 1
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

Sri Nadarajasundram
Real Estate Broker
RE/MAX ACE
416-276-6666 srinada21@gmail.com

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222
905-794-4404
online service: www.remitbee.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

CANADIAN HOME APPRAISALS INC.
FOR RESIDENTIAL & COMMERCIAL
SK BALES, CRA, MVA, FRI, CRES
CHAI
Bus: (416) 438-2200
Cell: (416) 801-3219
Website: www.chainc.ca
Email: skbales@hotmail.com
Ottawa Branch - Bus: (343) 698-8004


MILA
லோரன்ஸ் அவனியு & மிட்லான்ட் அவனியு ஸ்காபுறோவில்
உங்களுக்கான மனைகளை விரைவில் நாடுங்கள்...
வரையறுக்கப்பட்ட நிரை மனைகள் ஆரம்ப விலை $ 1.29 மில்லியன்
தனி மனைகளின் ஆரம்ப விலை 1.76மில்லியன் முதலீட்டிற்கான அரிய வாய்ப்பு..
EXTENDED DEPOSIT STRUCTURE:
• TOTAL $150,000 FOR TOWNHOMES
• TOTAL $180,000 FOR DETACHED HOMES
CAPPED DEVELOPMENT CHARGES
• $8,000 PLUS HST FOR TOWNHOMES
• $10,000 PLUS HST FOR DETACHED HOMES
ASSIGNMENT AVAILABLE*
$10,000 DECOR CREDIT FOR DETACHED HOMES
$5,000 DECOR CREDIT & KITHEN APPLIANCE PACKAGE FOR TOWNHOMES
GET 1OZ GOLD BAR ON EVERY PURCHASE*
KESHAV GOYAL, BROKER OF RECORD
CONTACT SALES : 647-901-3800
SALES@MILATOWNSVIPACCESS.CA
LOMBARD
GROUP REAL ESTATE INC., BROKERAGE


தமிழீழத்தின் இசை வேந்தன்
வர்ண.ராமேஸ்வரன் நினைவரங்கத்தில்
உங்கள் அபிமான ஈழநாடு பத்திரிகையின்
30வது ஆண்டு விழா
தமிழக - கனடிய பிரபல பக்கவாத்தியக் கலைஞர்களுடன்
கலைமாமணி
ராஜேஸ் வைத்தியா
வழங்கும்
இசைச் சங்கமம் 2023
APRIL 23, 2023 @ 6PM
CHINESE CULTURAL CENTRE
5183 SHEPPARD AVE. EAST
SCARBOROUGH
அன்பளிப்பு
VVIP $200
VIP $100
$50
விழா சரியாக மாலை 6:00 மணிக்கு ஆரம்பமாகும்
தொடர்புகளுக்கு: ஈழநாடு பரமேஸ் 416-841-9600

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

Canada

We acknowledge the financial support of the Government of Canada

உதயன் கதிரோட்டம்

# தமிழர்களுக்கு சாதகமாக இருந்த அரசியல் சூழ்நிலையை பாழாக்கிய இருவர்:

## ஒருவர் மற்றவருக்கு காலநிலை ஆலோசகராம்?

தமிழ் மக்கள் சார்ந்த அரசியல் விடயங்களில் நீண்ட காலமாக கூட்டாகவும் தனியாகவும் பாதிப்புக்களையும் இழப்புக்களையும் ஏற்படுத்திய இருவர் தற்போது மாங்கனித் தீவு என்ற அழகிய தேசத்தை மேலும் பாதாளத்தில் தள்ளி விட ஒன்றாக இணைந்துள்ளார்களாம். அதிலும் ஒருவர் 'எதிலும் அநியாயம் விளைவிப்பதையே வழக்கமாகக் கொண்டுள்ள இருவரில் ஒருவர் மற்றவருக்கு காலநிலை ஆலோசகராம்?.

தமிழ் மக்கள் எதிர்பார்த்து நின்ற எதிர்காலத்திற்குரிய சாதகமான சூழ்நிலை தோன்றத் தொடங்கிய காலப்பகுதியில் 'சமாதானம்' என்ற பதாகையோடு நாட்டுக்கு உள்ளும் வெளியிலும் மேற்கொண்ட அநியாயமான செயற்பாடுகளால் முப்படை கொண்ட ஒரு சிறுநாடு நாட்டின் இருப்பை தகர்த்தவர்களில் இந்த இருவர் முக்கியமானவர்கள். தங்கள் நாளைய விடிவு பற்றி மக்கள் கண்ட கனவுகள் சிதைந்து போக காரணமாக விளங்கியவர்களில் முக்கியமானவர்களில் இருவர் தற்போது அந்த தீவிற்குள் நாற்புறமும் பாதுகாப்பு சிப்பாய்கள் பவனி வர வடக்கு மண்ணில் விச விதைகளை தூவுவதற்காய் அடிக்கடி வந்து போகின்றார்கள்.

அந்த அழகிய தீவை அரசியல் என்ற போர்வையில் சுரண்டுவதற்கும் சீரழிப்பதற்கும் காரணமாக அமைந்த ஆட்சிகளில் மாறி மாறி அமர்ந்திருந்த அந்த மூன்றெழுத்து அரசியல்வாதியும் நோர்வேயிலிருந்து அடிக்கடி இலங்கைக்கும் வெளிநாடுகள் பலவற்றுக்கும் பறந்து பறந்து அப்போது தமிழ் மக்கள் பக்கம் நிலவிய சாதகமான அரசியல் மற்றும் படைப் பலத்தை சிறிது சிறிதாக பாழாக்கிய மற்றொரு மூன்றெழுத்து அரசியல்வாதி இப்போது தன் சகாவோடு தலைநகரில் சஞ்சரித்து வருகின்றார்.

எம் மக்கள் விரும்பிய எதிர்கால அரசியல் மாற்றத்தையும் விடிவையும் அடைந்து விடக்கூடிய சாதனமாக அரசியல் சூழ்நிலை நிலவிய காலத்தில் அதை கூட்டாகத் தகர்த்தெறியும் வகையில் உள்நாட்டிலும் மேற்குலத்திலும் செயற்பட்ட இந்த இருவர் கால நிலை மாற்றம் தொடர்பான நிகழ்ச்சி நிரலோடு எம் மண்ணில் மேற்கொள்ளும் விஜயங்களை எந்த வகையான மேலதிக பாதிப்புக்களைக் கொண்டு வரவுள்ள என்பதை எமது தமிழ் அரசியல்வாதிகள் கவனித்துக் கொள்ள வேண்டும் என்பதை எமது இவ்வாரத்தின் வேண்டுகோளாக உள்ளது. நேற்று முன்தினம் மன்னாரில் அந்த வெளிநாட்டு மூன்றெழுத்து 'நரி' மேற்கொண்ட பயணத்தில் தமிழ் பேசும் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரும் கலந்து கொண்டுள்ளார். மதம் சார்ந்த ஒரு நிகழ்வாக வெளிக்காட்டப்பட்டுள்ள அந்த நிகழ்வின் மூலம் இந்த மூன்றெழுத்து நபர் எமது மக்களுக்கு எதைத் தரவுள்ளார் என்பதில் வெளிப்படைத் தன்மை இருந்ததா என்பது ஒரு கேள்வியாக அமைய வேண்டும்!

மணமகன் தேவை

கனடா **Toronto** இல் கணக்காளராக பணியாற்றும் 30 வயதுடைய **5'1"** உயரமுள்ள கத்தோலிக்க பெண்ணுக்கு பொருத்தமான மணமகனை பெற்றோர் தேடுகின்றனர்.

தொடர்புகளுக்கு:
94 (77) 603 4886

Oshawa வில் தங்கும் இடம் தேவை

**Oshawa** நகரில் **Durham College** இல் மே மாதம் 2023 முதல் கற்கும் தமிழ் மாணவி அங்கு தங்கும் இடம் தேடுகிறார்.
குடும்பத்துடனோ அல்லது மாணவிகளுடனோ சேர்ந்து இருப்பது விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு: அருணா
1 519 222 5191

மணமகள் தேவை

தனியார் IT Freelancer ஆக பணிபுரியும் 34 வயதுடையவரும் 5'6" உயரமுள்ளவருமான (இலங்கை) கொழும்பில் வசிக்கும் கத்தோலிக்க மணமகனுக்கு பொருத்தமான மணமகளை பெற்றோர் தேடுகின்றனர்.

தொடர்புகளுக்கு:
94(77)6034886

HELP WANTED

Immediately we need an experienced line cook and dishwasher for a Mediterranean restaurant in Toronto Beaches area.
Fully time/ Part time day and evening shifts available.
Please call
**647-783-3112 or 416-913-3361**

# மசோதா 104: தமிழின அழிப்பு அறிவூட்டல் வாரச் சட்டம் 2021ஐ பாதுகாப்போம்




தமிழின அழிப்பு மறுத்தலையும் திரிபுபடுத்தலையும் எதிர்ப்போம்! கனடியத் தமிழர் தேசிய அவை, கனடியத் தமிழ் இளையோர் அமைப்பு கனடாத் தமிழ்க் கல்லூரி ஆகிய அமைப்புக்கள் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிப்பு.

ஒன்ராறியோ சட்டப் பேரவையால் மே 2021இல் நிறைவேற்றப்பட்ட மசோதா 104: தமிழின அழிப்பு அறிவூட்டல் வாரச் சட்டம் 2021, அரசியலமைப்பிற்கு முரணானதெனத் தமிழின அழிப்பு மறுப்பாளர்களால் மீண்டும் ஒரு முறை சட்ட நடவடிக்கைக்கு உள்ளாக்கப் பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டிலும் மே 18ஆம் நாளன்று முடிவடையும் ஏழு நாட்களும் தமிழின அழிப்பு அறிவூட்டல் வாரம் என இச்சட்டம் பிரகடனப் படுத்துகின்றது. இந்த வாரத்தில் ஒன்ராறியோ வாழ் மக்கள் தமிழின அழிப்பு பற்றியும் உலக வரலாற்றில நிகழ்ந்தேறியுள்ள மற்றைய இன அழிப்புக்கள் பற்றியும் கற்பதோடு அவை பற்றிய விழிப்புணர்வையும் ஊக்குவிப்பர்.

ஸ்காபுரோ-றூஜ் பார்க் தொகுதியின் ஒன்ராறியோ மாகாண நாடாளுமன்ற உறுப்பினரான விஜய் தணிகாசலம் அவர்களால் மசோதா 104 ஏப்பிரல் 30, 2019இல் முன்மொழியப்பட்டது. அன்று தொட்டு இம் மசோதாவானது பல இடையூறுகளை எதிர்கொண்டுள்ளது. தமிழின அழிப்பை நடத்திய சிறீலங்கா அரசு பல வழிகளிலும் இதை தடுப்பதற்கு இடையூறுகளை ஏற்படுத்தி வந்துள்ளது. இந்த இடையூறுகளுக்கு மத்தியிலும் இன அழிப்பிலிருந்து மீண்டவர்கள், மாணவர்கள், இன அழிப்பால் பாதிக்கப்பட்ட குடும்பங்கள் உட்படத் தமிழ் மக்கள் அனைவரும் பொறுமையுடன் மூன்று ஆண்டுகளாக இம்மசோதாவிற்கு ஆதரவாக போராடி வந்துள்ளனர். இம்மசோதாவானது மூன்றாம் வாசிப்பை அடுத்து அனைத்துக் கட்சிகளின் அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களின் முழு ஆதரவுடன் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டு, மே 12, 2022இல் ஒன்ராறியோ மாகணத்தின் சட்டமாக ஆக்கப்பட்டது.

தமிழின அழிப்பையும், அதனால் வரலாற்று ரீதியாக ஏற்பட்ட மன உளைச்சல் மற்றும் தலைமுறைகளுக்கு இடையேயான தாக்கம் ஆகியவற்றை மசோதா 104 ஒப்புக்கொள்வதால், அது நிறைவேற்றப்பட்ட போது அனைவரினதும் பேராதரவைப் பெற்றது. மேலும், சிறீலங்காவில் தமிழ் மக்களுக்கெதிராகத் தொடர்ந்தும் நடந்தேறிவரும் இன அழிப்பு விடயத்தில் கொள்கையளவிலும் நியாயத்தின்பாலும் இச்சட்டம் அமைந்ததோடு வருங்காலங்களில் இதுபோன்ற கொடுமைகளைத் தடுப்பதுபற்றி அறிவூட்டுவதாகவும் அமைந்துள்ளது. இவ்வாறாக தமக்கு நடந்தவற்றை மற்றவர்களும் உணர்ந்து கொள்ளுதல் மற்றும் ஒப்புக் கொள்ளுதல் என்பது பாதிக்கப்பட்டவர்களுக்கு மன ஆறுதலை ஏற்படுத்தும். தமிழின அழிப்பாலும் பிற இன அழிப்புக்களாலும் ஏற்பட்ட பேரதிர்ச்சியிலிருந்து மீழ்வதற்கு இன அழிப்பு பற்றிய கல்வியில் கவனம் செலுத்துவதற்கென வெளிப்படையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட ஓர் காலம் சட்டமாக்கப்பட்டமை தமிழின அழிப்பு மற்றும் பிற இன அழிப்புக்களாலும் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்வர்கள் பரிகாரம் பெறும் பயணத்திற்கு உதவும்.

இச்சட்டம் நிறைவேற்றப்பட்டதன் சிறிது காலத்தின் பின்னர் தமிழின அழிப்பு மறுப்பாளர்கள், மசோதா 104க்கு எதிராகச் அரசியலமைப்புச் சவால் ஒன்றைத் தொடுத்தனர். அந்நியத் தலையீட்டோடு தமிழின அழிப்பை மறுப்பதற்கும் அதனைத் திரிபுபடுத்துவதற்குமான பரப்புரை மேற்கொள்ளப்பட்டது. மேலும், மசோதா 104க்கு எதிர்பைத் தெரிவிக்கும் பொருட்டு சிறீலங்காவின் வெளிநாட்டு அமைச்சர் கனேடியத் தூது வரையும் சந்தித்தார்.

மசோதா 104ஐப் பாதுகாக்கவும் தமிழின அழிப்பை மறுப்பவர்களை எதிர்த்து நடவடிக்கை எடுக்கவும் 60க்கும் மேற்பட்ட அமைப்புக்களின் ஆதரவுடன் கனடியத் தமிழர் தேசிய அவை **(NCCT)**, கனடியத் தமிழ் இளையோர் அமைப்பு **(CTYA)** மற்றும் கனடாத் தமிழ்க் கல்லூரி **(CTA)** கூட்டாக இடையீட்டாளர்களாகத் தமதுபக்க நியாயத்தை நீதி மன்றத்தில் சமர்ப்பிக்க முன்வந்து செயல்பட்டனர். மசோதா 104இன் முக்கியத்துவத்தைச் சட்டரீதியில் இடையிட்டு வாதிடுவதற்கு **Goldblatt Partners** எனும் சட்ட நிறுவனத்தை தமிழ் கனேடிய சமூகம் அமர்த்தி உள்ளது.

மசோதா 104: தமிழின அழிப்பு கல்விவாரச் சட்டம் 2021, ஜுன் 28, 2022இல் ஒன்ராறியோ உயர் நீதிமன்றத்தால் உறுதிப்படுத்தப்பட்டது. மதிப்புக்குரிய நீதிபதி ஜெ.ரி. அக்பர் அலி அவர்கள் மசோதா 104 ஆனது சட்டரீதியானது எனத் தீர்ப்பளித்து தமிழின அழிப்பு மறுப்பாளர்களால் தொடரப்பட்ட வழக்கை தள்ளுபடி செய்தார்.

எனினும், மசோதா 104 பற்றிய நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து தமிழின அழிப்பு மறுப்பாளர்கள் ஒன்ராறியோ மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் மீண்டும் மேல்முறையீடு செய்துள்ளனர்.

இன அழிப்பு புரிவோர் அதனை எப்போதும் மறுப்பார்கள் என்பதனை வரலாறு எமக்கு மீண்டும் மீண்டும் புகட்டி வருகின்றது. தமிழின அழிப்பு மறுப்பாளர்கள், மசோதா 104ஐக் குறிவைத்து அதை இல்லாமல் செய்ய மீண்டும் மீண்டும் வேண்டுமென்றே முயற்ச்சிப்பது, அவர்கள் தமிழின அழிப்பால் பாதிக்கப்பட்டவர்களை மௌனமாக்குவதற்கு முனைப்போடு செயற்படுகின்றார்கள் என்பதனைக் எடுத்துக் காட்டுகின்றது.

மசோதா 104 நிறைவேற்றப்பட்டமை உலகெங்கணும் பரந்து வாழ்கின்ற தமிழ் மக்களுக்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். இந்த மசோதா 104ஐ ஆதரித்து இடையீடர்களாக வாதாட நாம் எடுத்துள்ள முயற்சிக்கு வேண்டிய வழக்குச் செலவுக்கு நிதியுதவி வழங்குமாறு அனைவரிடமும் வேண்டி நிற்கின்றோம். நிதியுதவி வழங்க தயவுசெய்து **https://www.gofundme.com/f/defend-bill-104** என்ற இணையத்தை அணுகவும். இந்த வருடம் மே 31ம் திகதிக்கு முதல் 100,000 டொலர்களைத் திரட்டுவதே எமது இலக்கு.

தமிழின அழிப்பு பற்றிய கல்வியைப் புகட்டுவதற்காக முதன் முதலாக உருவாக்கப்பட்டுள்ள மசோதா 104 ஐ ஆதரித்து அதனைப் பாதுகாக்க நாம் அனைவரும் ஒன்றுபடுவோம்.

இன அழிப்பில் இருக்கும் 10 படிநிலைகளில் அதனை மறுத்தலே கடைசி படிநிலையாகும். இந்த படி நிலையானது பொதுவாக இன அழிப்பு நடந்து கொண்டிருக்கும் போதும், அது நடந்து முடிந்த பின்பும் தொடர்வதை அவதானிக்கலாம். அத்தோடு எதிர்காலத்தில் கூட மீண்டும் ஒருமுறை இந்த குறிப்பிட்ட மக்களுக்கு எதிரான, ஒரு இன அழிப்பு நடைபெறலாம் என்பதை எடுத்துக் காட்ட வல்ல சிறந்த குறிகாட்டியாகவும் இந்த படிமுறை உள்ளது.

தமிழின அழிப்பு மறுத்தலையும் திரிபுபடுத்தலையும் எதிர்ப்போம்!

இவ்வாறு மேற்படி 3 கனடிய அமைப்புக்கள் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பெற்றுள்ளது.



# மன்னார் — நானாட்டான் பிரதேசத்தில் மண் ஏற்றிச் செல்லும் கனரக வாகனங்களால் வீதிகள் சேதம்

இலங்கை செய்திகள்
Sri Lanka News

## போக்குவரத்துக்கு சிரமப்படும் கிராம மக்கள்

(27-03-2023)

மன்னார் - நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள மடுக்கதை கிராமத்தில் அகழப்படும் மண் ஸ்திரத்தன்மை அற்ற வீதிகளூடாக கனரக வாகனங்களில் ஏற்றிச் செல்வதால் வீதிகள், சிறிய பாலங்கள், சேதமடைந்து போக்குவரத்துக்கு உதவாவாமல் அவ்வழியாக செல்லும் பாடசாலை மாணவர்கள், பெண்கள், சிறுவர்கள், முதியவர்கள், நோயாளிகள், என பலரும் பாதிக்கப்பட்டுள்ளதாக மடுக்கரை மற்றும் இராசமடு கிராம மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

மேலும் பல வருடங்களாக அபிவிருத்தி எதுவும் காணாத குறித்த வீதி தற்போது புதிதாக அமைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் போதே இவ்வாறு ஒரு நாளைக்கு அளவு கணக்கில்லாத வாறு கனரக வாகனங்கள் அதிக பாரத்துடன் சென்றால் புதிய வீதி தாங்குமா? என மக்கள் கேள்வி எழுப்பியுள்ளார்கள்.

மேலும் மண் ஏற்றிச் செல்ல அனுமதி வழங்கப்பட்டது ஒரு பாதை. ஆனால் அவர்கள் அந்த பாதை ஊடாக செல்வதற்கு அப்பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்ததால் அவர்கள் மடுக்கரை இராசமடு பாதையை சேதப்படுத்துவதாக தெரிவிக்கின்றார்கள்.

மேலும் இவ்வாறு பொருளாதார நெருக்கடியான நேரத்தில் அரசாங்கம் வீதிகளை அபிவிருத்தி செய்து கொண்டு போக மறுபுறம் அதே அரச அதிகாரிகள் முறையற்ற அனுமதிப் பத்திரங்களால் வீதிகளை நாசப்படுத்தி கொண்டிருக்கிறார்கள்.

குறித்த அதிகாரிகள் ஓய்வு பெற்று அல்லது மாற்றலாகிச் சென்று விடுவார்கள். ஆனால் சேதப்படுத்தப்பட்டு குண்றும் குழியுமான வீதிகளுடன் அவஸ்தைப் படப் போவது மக்கள். இதை அதிகாரிகள் புரிந்து கொள்ள வேண்டும் என அந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் குறித்த வீதிகளினால் கனரக வாகனங்கள் மண் ஏற்றிச் செல்வது தொடர்பாக உரிய அதிகாரிகளுக்கு தெரிவித்தும் அதிகாரிகள் மண் மாபியாக்கள் பக்கம் சார்ந்து நின்று தவறுகளை நியாயப் படுத்துகிறார்களே தவிர பொது மக்களுக்கு ஆதரவாக பேச மறுக்கிறார்கள் என மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

அத்துடன் குறித்த பாதைகளூடாக மண் ஏற்றிச் செல்பவர்களுக்கும் பொது மக்களுக்கும் ஏதேனும் கைகலப்புகள் பிரச்சனைகள் ஏற்பட்டால் உரிய அதிகாரிகளே பொறுப்பேற்க வேண்டும் என்றார்கள்.

அத்துடன் 5 வருடங்கள் ஆட்சி செய்த நானாட்டான் பிரதேச சபை பிரதேச சபை அரசியல் நிர்வாகத்தினர் ஒவ்வொரு வீதிகளிலும் எவ்வளவு பாரம் ஏற்றிச் செல்ல வேண்டும் என்ற அறிவித்தல் பலகைகள் எதுவும் அமைக்கவில்லை.

வீதிகள் ஒவ்வொன்றும் பிரதேச சபைக்கு சொந்தமானதாக இருக்கலாம், நீர்ப்பாசனம், விவசாயத் திணைக்களம், வீதி அபிவிருத்தி அதிகார சபை, அல்லது திணைக்களத்திற்கு சொந்தமானதாக இருக்கலாம், அது எமக்குத் தேவையில்லை இவை பொது மக்களின் பயன்பாட்டுக்காக அமைக்கப்பட்ட வீதிகள்.





அதை பாதுகாப்பது ஒவ்வொரு அரச அதிகாரிகளின் கடமை. எனவே குறித்த வீதிகள் ஊடாக கனரக வாகனங்கள் மண் ஏற்றிச் செல்வதை உடனடியாக தடுத்து நிறுத்தி பொதுமக்களுக்காக வீதிகளை பாதுகாப்பதற்கு அதிகாரிகள் முன்வர வேண்டும். குறிப்பாக நானாட்டட்டான் பிரதேச செயலாளர், மன்னார் மாவட்டச் செயலாளர், மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் அவர்கள் இந்த விடயத்தில் கரிசனை கொண்டு பொதுமக்களுக்கு சார்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள்.

# வவுனியா — நெடுங்கேணி வெடுக்குநாறி ஆதி லிங்கேஸ்வரர் ஆலயம் நொருக்கப்பட்ட சம்பவம் தொல்பொருள் திணைக்களத்தின் உதவியுடன் இடம்பெற்றுள்ளது



## வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன்

- மன்னார் நிருபர் (28-03-2023)

வவுனியா - நெடுங்கேணி வெடுக்குநாறி மலையிலிருந்து ஆதி லிங்கேஸ்வரர் ஆலயம் அடித்து நொருக்கப்பட்ட சம்பவம் தொல்பொருள் திணைக்களத்தின் உதவியுடன் இடம்பெற்றுள்ளதாகவும் குறித்த சம்பவத்தை வன்மையாக கண்டிப்பதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில் செவ்வாய்கிழமை (28) இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த மூன்று வருடங்களாக வவுனியா மாவட்டத்தில் வவுனியா வடக்கு பிரதேச செயலகத்திற்குட்பட்ட வவுனியா - நெடுங்கேணி வெடுக்குநாறி மலையிலிருந்து ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்திற்கு பக்தர்கள் செல்வதையும், திருவிழாக்கள் செய்வதையும் தொல்பொருள் திணைக்களம் ஊடாக பொலிஸார் தடை விதித்து இருந்தனர்.

கடந்த 2 வருடங்களுக்கு மேலாக இங்கு திருவிழா செய்ய முடியாமல் இருந்த சூழ்நிலையை நீதிமன்றம் வழங்கியிருந்தது.

அதன் அடிப்படையில் தற்போது மூன்று தினங்களுக்கு முன்பு வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வர ஆலயத்தில் இருக்கும் அனைத்து விக்கினங்களும் உடைத்து எரியப்பட்டுள்ளது. குறித்த நடவடிக்கையானது படைத்தரப்பினரால் இடம் பெற்றுள்ளதாக அறிகின்றேன்.

தொல்பொருள் திணைக்களத்தில் உதவியுடன் வெடுக்குநாறி மலையை பௌத்த மயமாக்கி, அதனை விகாரையாக்குவதற்காக அவர்கள் தொடர்ச்சியாக இரண்டு வருடங்களுக்கு மேல் முயற்சி செய்து வந்தார்கள்.

குறித்த சம்பவத்தை வன்மையாக கண்டிக்கின்றேன்.

அதே போல் வடக்கு - கிழக்கில் இருக்கும் தமிழர்களின் மத கலாச்சார அடையாளங்களை அழித்து மிக தீவிரமாக பௌத்த மயமாக்க நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றது.

குறித்த செயல்பாடுகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். தொல்பொருள் திணைக்களம் தொடர்ச்சியாக வடக்கு கிழக்கில் பல்வேறு இடங்களில் குறித்த செயல்பாட்டை முன்னெடுத்து வருகின்றது.

வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வர ஆலயம் தாக்கப்பட்டு உடைக்கப்பட்டமைக்கு எதிராக எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு வவுனியா கந்தசாமி ஆலயம் முன்பாக ஆர்ப்பாட்டம் ஆரம்பித்து வவுனியா மாவட்டச் செயலகத்தை வந்தடைய உள்ளது.

குறித்த ஆர்ப்பாட்டத்திற்கு மக்கள் ஆதரவு வழங்க வேண்டும் என கேட்டுக் கொள்வதோடு, தொடர்ச்சியாக தொல்பொருள் திணைக்களம் பௌத்த மயமாக்கலுக்கு ஆதரவாக வடக்கு கிழக்கில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. எனவும் அவர் தெரிவித்தார்.

# பின்தங்கிய குடும்ப ங்களைச் சார்ந்த மாணவர்களின் நலன் கருதி உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையில் திறன் வகுப்பறை ஆரம்பித்து வைப்பு

உடுவில் பிரதேசத்திலுள்ள மிகவும் பின்தங்கிய குடும்பங்களை சேர்ந்த மாணவர்கள் பயிலும் பாடசாலையாகிய உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலையில் திறன் வகுப்பறையொன்று அனைத்துலக மருத்துவ நல அமைப்பு (IMHO-USA) மற்றும் இரட்ணம் பவுண்டேசன் (Ratnam Foundation-UK) நிதி அனுசரணையில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

68 மாணவர்களுடன் தரம் ஒன்று தொடக்கம் தரம் பதினொன்று வரையான வகுப்புக்களுடன் இயங்கும் இப்பாடசாலை மாணவர்களை வசதிகளுடன் கூடிய பாடசாலைகளில் பயிலும் ஏனைய மாணவர்களை ஒத்த வகையிலான கற்றல் செயற்பாடுகளில் ஈடுபடுத்தும் நோக்குடன் இவ்வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி இரு அமைப்புக்களும் திறன் பலகைகளை இவ்வாறான பல பாடசாலைகளுக்கு வழங்கி வருவது மட்டுமல்லாது அக்குறித்த பாடசாலை ஆசிரியர்களை சிறந்த வளவாளர்களைக் கொண்டு பயிற்றுவிக்கும் அளப்பரிய செயற்பாடுகளையும் செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



சென்ற பங்குனி 22 ஆம் திகதி இப்பாடசாலையில் இத் திறன் வகுப்பறை அனைத்துலக மருத்துவ நல அமைப்பின் இலங்கைக்கான வதிவிட பணிப்பாளர் திரு. சு. கிருஷ்ணகுமார் பிரசின்னத்தில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் வலிகாமம் கல்வி வலயத்தின் சார்பில் கணித பாட ஆசிரிய ஆலோசகர் திரு. ஆதித்தன் அவர்கள் மட்டுமல்லாது சில பெற்றோர்களும் கலந்து சிறப்பித்திருந்தார்கள்.





இவ் ஆரம்ப வைபவத்தில் இப்பாடசாலை ஆசிரியர்களின் மாதிரி வகுப்பறைச் செயற்பாடுகள் இமமாணவர்கள்பால் அவர்களினது நேசத்தை வெளிப்படுத்தியது.

இதற்கான பாராட்டுக்களும் நன்றிகளும் விழாவில் கலந்து கொண்ட அனைவராலும் அதிபருக்கும் குறித்த ஆசிரியர்களுக்கும் தெரிவிக்க பட்டமை சிறப்பாக குறிப்பிட வேண்டிய அம்சமாக உள்ளது.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு இலவச அரிசி பொதி வழங்கி வைப்பு

- மன்னார் நிருபர் (26-03-2023)

2022/23 பெரும்போகத்தில் “அரசாங்கத்தின் நெல் கொள்வனவு மற்றும் நெல் கையிருப்பு அகற்றல்” நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் குறைந்த வருமானம் பெறுவோருக்கு இலவசமாக அரிசி வழங்கும் நிகழ்ச்சி திட்டம் ஞாயிற்றுக்கிழமை (26) காலை மன்னாரில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அரசாங்கத்தின் மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் இன்று நாடெங்கும் உத்தியோகபூர்வமாக காலை 10:30 மணிக்கு ஜனாதிபதியால் ஆரம்பித்து வைக்கப்பட்ட அதே வேளை நாட்டின் சகல மாவட்டங்களிலும் மாவட்ட மட்டத்திலான இந்த நிகழ்வு இடம்பெற்றது.







மன்னார் மாவட்டத்தின் முதல் நிகழ்வாக நானாட்டான் பிரதேசத்தில் பரிகாரி கண்டல் கிராம அலுவலர் பிரிவில் உள்ள சிறுக்கண்டல் கிராமத்தில் கிராம அலுவலர் தலைமையில் இடம்பெற்றது.

அதன் போது மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ஏ.ஸ்ரான்லி டிமேல், மாவட்ட உதவி அரசாங்க அதிபர், மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர், நானாட்டான் பிரதேச செயலாளர், நானாட்டான் உதவிப் பிரதேச செயலாளர், திட்டமிடல் பணிப்பாளர், சமுர்த்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டு தெரிவுசெய்யப்பட்ட வருமானம் குறைந்த பயணாளிகளுக்கு அரிசி பொதிகளை வழங்கி வைத்தனர்.

# நெடுந்தீவு பிரதேசத்தில் பெண்கள் மத்தியில் சுய தொழில் முயற்சியை ஊக்குவிக்கும் வகையில் சவர்க்காரம் மற்றும் சலவைத்தூள் சார்ந்த உற்பத்தி சார் பயிற்சி வழங்கி வைப்பு

- மன்னார் நிருபர் (26-03-2023)

நெடுந்தீவு பிரதேசத்தில் உள்ள பெண்கள் மத்தியில் சுய தொழில் முயற்சியை ஊக்குவிக்கும் வகையில் தெரிவு செய்யப்பட்ட ஒரு தொகுதி பெண்களுக்கு மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் ஏற்பாட்டில் சவர்க்காரம் மற்றும் சலவைத்தூள் சார்ந்த உற்பத்தி சார் பயிற்சி நெறி சனிக்கிழமை (25) நெடுந்தீவு பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

மெசிடோ நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ தலைமையில் இடம்பெற்ற குறித்த தொழில் பயிற்சியில் நெடுந்தீவு பிரதேச செயலாளர் சத்திய சோதி, இலங்கை கைத்தொழில் சபையின் மன்னார் மாவட்ட உதவி பணிப்பாளர்









ஜே.எம்.ஏ.லெம்பேட, மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணியாளர்கள், தீவக பெண்கள் வலையமைப்பின் பிரதிநிதிகள் உள்ளடங்களாக தெரிவு செய்யப்பட்ட பெண்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது சவர்க்காரம் மற்றும் சலவைத்தூள் உற்பத்தி சார் பயிற்சி வழங்க்கபட்டதோடு இறுதியில் பொருட்களும் உற்பத்தி செய்யப்பட்டது.

பயிற்சியாளர்களினால் உற்பத்தி செய்யப்பட்ட சுய தொழில் உற்பத்தி பொருட்கள் வருகை தந்த பிரமுகர்களுக்கும் வழங்கி வைக்கப்பட்டது.

MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
⇒ Private Mortgage (No Income Verification)
⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinicanada.com



உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.
Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker
Cell : 416-624-4843
எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

இலங்கை செய்திகள் Sri Lanka News

# மன்னாரில் சிறப்பாக இடம்பெற்ற இளம் இசை, வாத்திய கலைஞர்களுக்கான பயிற்சி பட்டறை



- மன்னார் நிருபர் (26-03-2023)

மன்னார் மாவட்டத்தில் உள்ள இளம் இசைக் கலைஞர்கள் மற்றும் இளம் வாத்திய கலைஞர்களுக்கான பயிற்சி பட்டறை சனிக்கிழமை (25) மன்னார் மாவட்டச் செயலகத்தின் ஜெயிக்கா மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது.

மன்னார் மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் உள்ள சிறந்த இளம் கலைஞர்கள் வாத்திய கலைஞர்கள் மற்றும் கூத்துக் கலைஞர்கள் குறித்த பயிற்சி பட்டறையில் கலந்து கொண்டுள்ளனர்.

குறித்து பயிற்சி பட்டறையை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ஏ.ஸ்ரான்லி டிமெல் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார்.

வடக்கு மாகாண ஆளுநரின் விசேட பணிப்பில், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் இந்து பண்பாட்டு நிதியம் என்பவற்றின் அனுசரணையில் வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் குறித்த பயிற்சி பட்டறையை ஒழுங்கு படுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.





# புதிய பயங்கரவாத சட்டத்தை தோற்கடிப்பதில் ஒன்றிணையுமாறு எதிர்க்கட்சிகளிடம் கோரிக்கை

(27-03-2023)

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் நிபந்தனைகளை அமுல்படுத்தும் போது, அரசாங்கத்தின் கொள்கைகளை எதிர்ப்பவர்களை ஒடுக்கும் நோக்கில் நீதி அமைச்சர் முன்மொழிந்துள்ள "பயங்கரவாத எதிர்ப்பு" சட்டமூலத்தை நிறைவேற்ற அனுமதிக்க வேண்டாமென நாட்டின் தொழிற்சங்கத் தலைமை எதிர்க்கட்சியினரை கேட்டுக்கொண்டுள்ளது.

"இந்த வரைபு வரைபாகவே தோற்கடிக்கப்பட வேண்டும்."

கொழும்பில் வார இறுதியில் ஊடகவியலாளர் சந்திப்பொன்றை நடத்திய இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின், மக்களின் பட்டினிப் பிரச்சினைக்குத் தீர்வை வழங்கத் தவறிய அரசாங்கம் புதிய சட்டத்தின் மூலம் போராட்டங்களை ஒடுக்க தயாராகி வருவதாக வலியுறுத்தியுள்ளார்.

2023ஆம் ஆண்டு மார்ச் 16 ஆம் திகதி அமைச்சரவையில் அங்கீகரிக்கப்பட்ட மறுநாள் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் ஒரு மாதத்திற்கு முன்னர் வன்முறைத் தடுப்புச் சட்டமாக அரசாங்கத்தால் சமர்ப்பிக்கப்பட்டதாக சிரேஷ்ட தொழிற்சங்கத் தலைவர் மேலும் வலியுறுத்தினார்.

"2023.02.20 கொண்டுவரப்பட்ட சட்டம் வன்முறை தடுப்புச் சட்டம். வன்முறை என்ற பெயரில் வரும் போராட்டங்களை ஒடுக்குவதே இதன் நோக்கம்."

தொழில்சார் போராட்டங்களை நசுக்குவது மாத்திரமன்றி மேலும் பல ஆபத்தான அம்சங்கள் இந்த சட்டமூலத்தில் உள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள ஆசிரியர் சங்கத் தலைவர், ஊடகங்களை ஒடுக்கவும் இது பயன்படும் என எச்சரித்துள்ளார்.

"தொழிற்சங்க நடவடிக்கை என வைத்துக் கொள்வோம். அந்தச் செயலை பயங்கரவாதமாகப் பதிவு செய்தால், மறுபுறம் அதனை பிரச்சாரம் செய்வது, ஊடகங்களில் அவற்றை வெளியிடுவது அனைத்துமே தண்டிக்கப்படும்."

நாட்டில் இதுவரையில் நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் பிரகாரம் சந்தேகநபர் ஒருவரை மூன்று மாத காலத்திற்கு தடுப்புக் காவலில் வைக்க ஜனாதிபதி கையொப்பமிட வேண்டும் என சுட்டிக்காட்டிய, சிரேஷ்ட தொழிற்சங்கத் தலைவர் ஆனால் புதிய சட்டத்தின் மூலம் அந்த அதிகாரம் ஒரு பிரதி பொலிஸ்மா அதிபர் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த சட்டமூலத்தில் அபாயகரமான தன்மை குறித்து ஜோசப் ஸ்டாலின் அளித்த விளக்கத்தை கீழே உள்ள வீடியோவில் காணலாம்.



இலங்கை செய்திகள் Sri Lanka News

# சிறப்பாக இடம்பெற்ற மடு வலய மட்ட கால்கோள் விழா

- மன்னார் நிருபர் (28-03-2023)

மடு வலயக்கல்வி அலுவலக வலயமட்ட கால்கோள் விழா செவ்வாய்க்கிழமை (28) காலை 11 மணி அளவில் மன்- கள்ளியடி அ.த.க. பாடசாலையில் இடம் பெற்றுள்ளது.





இதன் போது 2023 ஆம் ஆண்டிற்கான தரம் ஒன்றில் கல்வி கற்க உள்ள மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

மடு கல்வி வலயத்திற்குட்பட்ட இலுப்பைக்கடவை தமிழ் மகா வித்தியாலயம், கள்ளியடி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, அந்தோனியார் புரம் தமிழ் கலவன் பாடசாலை, கூராய் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்கள் கலந்து கொண்டதோடு, வருகை தந்த மாணவர்களின் வரவேற்பு இடம்பெற்றுள்ளது.

குறித்த நிகழ்வில் ஆரம்பக் கல்வி உதவி கல்வி பணிப்பாளர் செல்ரன் யூடிற், மடு வலயக்கல்வி பணிப்பாளர் ஏ.சி. வெலன்ரைன், மடு பிரதி கல்வி பணிப்பாளர் திருமதி. வாசுகி சுதாகர் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

# மன்னார் மாவட்ட விவசாயிகளுக்கு அடிக்கட்டு உரம் பகிர்ந்தளிப்பு

(27-03-2023)

யு.எஸ்.ஏ.ஐ.டி (U.S.A.I.D) நிறுவனம் இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கிய அடிக்கட்டு உரம் இன்றைய தினம் மன்னார் மாவட்ட விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்கும் நிகழ்வு மன்னார் உயிலங்குளம் கமநல சேவைகள் நிலையத்தில் திங்கட்கிழமை (27) காலை 10 மணியளவில் மன்னார் கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் அன்ரனி மரின் குமார் தலைமையில் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ஏ.ஸ்ரான்லி டிமெல் விருந்தினராக கலந்து கொண்டார்.





குறித்த உரமானது விவசாயிகளுக்கு ஆரம்ப கட்டமாக பகிர்ந்தளிக்க பட்டுள்ளது.

நீர்பாசன நீர் மூலம் விவசாயம் மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு 1 ஏக்கருக்கு 22 கிலோ உரமும், மழையை நம்பி விவசாயம் மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு 1 ஏக்கருக்கு 10 கிலோ உரமும் இவ்வாறு வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இதன் போது மன்னார் மாவட்டத்திற்கு 1244.9 மெற்றிக் தொன் அடிக்கட்டு உரம் வழங்கப்பட்டுள்ளது.

குறித்த உரம் 17 ஆயிரத்து 868 விவசாயிகளுக்கு, 21 ஆயிரத்து 621 கெக்டெயர் விவசாயச செய்கையை மேற்கொள்ள பகிர்ந்தளிக்கப்பட உள்ளது.

முதல் கட்டமாக உயிலங்குளம் கமநல சேவை நிலைய பதிவைக் கொண்ட விவசாயிகளுக்கு வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வில் விவசாய திணைக்கள அதிகாரிகள்,விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள்,விவசாயிகள் என பலர் கலந்து கொண்டனர்.

விவசாயிகள் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன் தமத உரங்களை பெற்றுக்கொள்ளுமாறு மன்னார் கமநல அபிவிருத்தி திணைக்கள உதவி ஆணையாளர் அன்ரனி மரின்குமார் விவசாயிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

# ரணில் விக்கிரமசிங்கவின் "அகால" ஆலோசகர்எரிக் சோல்ஹேம் மன்னார் விஜயம்

- மன்னார் நிருபர் (30.03.2023)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சர்வதேச கால நிலை ஆலோசகர் எரிக்சோல்ஹேம் வியாழக்கிழமை (30) மன்னார் மாவட்டத்திற்கான விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

மன்னார் தலைமன்னார் பகுதிக்கு விஜயம் மேற்கொண்ட எரிக்சோல்ஹேம் தலைமன்னார் விஜயத்தின் பின் மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ அவர்களுடன் மன்னார் ஆயர் இல்லத்தில் சிநேக பூர்வ கலந்துரையாடல் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

அதனை தொடர்ந்து மதியம் 3 மணியளவில் மன்னார் செபஸ்ரியார் பேராலயத்தில் அமைந்துள்ள மறைந்த முன்னால் மன்னார் மறைமாவட்ட ஆஜர் இராஜப்பு ஜோசப் ஆண்டகை அவர்களின் நினைவிடத்திற்கு வருகை தந்து அஞ்சலி செலுத்தினார்.

அதனை தொடர்ந்து மன்னார் மறை மாவட்ட ஆயர் இல்லத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மறைந்த மன்னார் மறை மாவட்ட முன்னால் ஆயர் இராஜப்பு ஜோசப் ஆண்டகை அவர்களின் நினைவு நாள் பேருரை நிகழ்விலும் கலந்து கொண்டு உரையாற்றியிருந்தார்.

குறித்த நினைவுநாள் நிகழ்வில் எரிக்சோல்ஹேம், மன்னார் மறை மாவட்ட



ஆயர் இம்மானுவேல் பெர்னாடோ ஆண்டகை, திருகோணமலை மறைமாவட்ட ஆயர் கிறிஸ்ரியன் நோயல் இம்மானுவேல் ஆண்டகை, மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஸ்ரான்லி டிமேல், வன்னி பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சால்ஸ்நிர்மலநாதன் உட்பட்ட அரச திணைக்களின் தலைவர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

கனடிய செய்திகள் Canadian News

## RE/MAX Community Realty Inc., hosted it's Annual Award Ceremony in Scarborough, on last Friday, 24th of March. The President and Broker of Record, Mr Rajeefe Koneshwaran presented the Awards to the successful Agents and Brokers.

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் இரண்டு விற்பனை முகவர் நிறுவனங்களை நடத்திவரும் திரு. ரஜீவ் கோணேஸ்வரன் தலைமையிலான RE/MAX Community Realty Inc நிறுவனம் தனது வருடாந்த விற்பனை விருதுகள் வழங்கும் விழாவை கடந்த 24-03-2023 அன்று வெள்ளிக்கிழமை ஸ்காபுறோ கொன்வென்சன் விழா மண்டபத்தில் சிறப்பாக நடத்தியது.

நூற்றுக்கணக்கான விற்பனை முகவர்கள் மற்றும் பிரதிநிதிகள் கலந்து கொண்ட இந்த விற்பனை விருதுகள் வழங்கும் விழாவில் அழைக்கப்பெற்ற விருந்தினர்கள் பலர் கலந்து கொண்டனர்.










சிறந்த விற்பனை பிரதிநிதிகளுக்கான விருது நன்கு அறியப்பெற்றவர்களான சாண் தயாபரன். சிங்கராஜா. சஞ்சீவன். ஆனந்தன் உட்பட பலர் பெற்றுக் கொண்டனர். அன்றைய தினம் ஏராளமான விற்பனை பிரதிநிதிகள் தங்கள் குடும்பத்தினரோடு கலந்து கொண்டமை இங்கு குறிப்பிடத்தக்கது.

**- Arjne LJI**

இந்தியா செய்திகள்
India News

# தமிழ்நாட்டு பொலிஸ் நிலையங்களில் இளைஞர்களின் பல்லை பிடுங்கிய ஏஎஸ்பி — டிஜிபி எடுத்த அதிரடி முடிவு!



திருநெல்வேலியில் குற்றச் சம்பவங்களில் ஈடுபடும் இளைஞர்களை காவல் நிலையம் அழைத்துச் சென்று பற்களை பிடுங்கி கொடுமைப்படுத்திய கூடுதல் காவல் கண்காணிப்பாளரிடம் அதிகாரிகள் விசாரணை நடத்தி வருகின்றனர். திருநெல்வேலி மாவட்ட காவல் துறையில் அம்பாசமுத்திரம் கூடுதல் காவல் கண்காணிப்பாளராக இருப்பவர், பல்பீர் சிங். இவர் சார்பு ஆய்வாளராகப் பொறுப்பேற்ற பிறகு அம்பாசமுத்திரம் பகுதியில் சின்ன சின்ன குற்றங்களில் ஈடுபடும் இளைஞர்களை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று அந்த இளைஞர்களின் பற்களை, கட்டிங் பிளேடு கொண்டு பிடுங்கி, கொடூரமான தண்டனை வழங்கி வருவதாக பாதிக்கப்பட்டவர்களிடம் இருந்து பரபரப்பான குற்றச்சாட்டு எழுந்துள்ளது. அம்பாசமுத்திரம், கல்லிடைக்குறிச்சி, பாப்பாக்குடி போன்ற காவல் நிலையத்துக்குட்பட்ட பகுதியில் சுமார் பத்துக்கும் மேற்பட்ட இளைஞர்களின் பற்களை பிடுங்கியதாகவும் கூறப்படுகிறது. இந்நிலையில் கடந்த மூன்று தினங்களுக்கு முன்பு ஜமீன் சிங்கம்பட்டியைச் சேர்ந்த சூர்யா என்ற நபர், அந்தப் பகுதியில் சிசிடிவி கேமராவை உடைத்து பிரச்னை செய்ததாகவும் கூறப்படுகிறது. இதனையறிந்த பல்பீர் சிங், உடனடியாக இளைஞர் சூர்யாவை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றார்.

அங்கு வைத்து அவரது பற்களை துடிதுடிக்கப் பிடுங்கி எடுத்துள்ளதாக கூறப்படுகிறது. அதே பகுதியைச் சேர்ந்த மூன்று இளைஞர்கள் தற்போது சிறிய பிரச்னை செய்ததாகக் கூறி அவர்களது பற்களையும் உடைத்து தற்போது அந்த மூன்று பேரும் பாளையங்கோட்டை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும், சில இளைஞர்களின் பற்களை உடைத்து அவரது வாயில் ஜல்லிக்கற்களை போட்டு கொடுமைப்படுத்துவதாகவும் கூறப்படுகிறது.

இது குறித்து பாதிக்கப்பட்ட நபர்கள் கூறும்போது, "ஒரு சின்ன வழக்கிற்காக அம்பாசமுத்திரம் காவல் துறையினர் எங்களை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர். அப்போது ஏஎஸ்பி தனது கையில் கையுறை அணிந்துகொண்டும், டிராக் பேண்ட் அணிந்தும் அங்கு வந்தார். எங்கள் வாய்க்குள் ஜல்லிக்கற்களை போட்டு கொடூரமாக அடித்தார்.

மேலும், கற்களை வைத்து பல்லை உடைத்தார். எனது அண்ணனுக்கு சமீபத்தில் தான் திருமணம் நடைபெற்றது. அவரது ஆண் உறுப்பை நசுக்கி கொடுமைப்படுத்தினார். எனது அண்ணன் தற்போது படுத்த படுக்கையாக உணவு சாப்பிட முடியாமல் தவித்து வருகிறார். எங்களுக்கு நடந்ததைப் போன்று வேறு யாருக்கும் நடக்கக்கூடாது" என தெரிவித்தனர். இதையடுத்து இச்சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த நெல்லை மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன் உத்தரவிட்டார். மேலும், விசாரணை அதிகாரியாக சேரன்மகாதேவி சார்ஆட்சியர் நியமிக்கப்பட்டார்.

இந்த நிலையில் பற்களை பிடுங்கிய விவகாரத்தில் அம்பாசமுத்திரம் கூடுதல் காவல் கண்காணிப்பாளர் பல்பீர் சிங்கை கட்டாய காத்திருப்போர் பட்டியலுக்கு மாற்றி, டிஜிபி சைலேந்திரபாபு உத்தரவிட்டார். தொடர்ந்து அவரிடம் விசாரணை அதிகாரி விரைவில் விசாரணை நடத்துவார் எனக் கூறப்படுகிறது.

# தமிழ்நாட்டுக் கவிஞர் நந்தவனம் சந்திரசேகரனது இலக்கியப்பணிக்கு திருகோணமலையில் வழங்கப்பட்ட "கலைக்கேசரி" விருது



தமிழ்நாட்டில் 26 ஆண்டுகளாக கலை இலக்கியப் பணியும், பத்திரிக்கைப் பணியும் தொடர்ச்சியாக செய்துவரும் திருச்சி இனிய கந்தவனம் சஞ்சிகை ஆசிரியர் நந்தவனம் சந்திரசேகரனினுக்கு திருகோணமலை "வாசல்" "இலக்கியவட்டம் கலைக்கேசரி" விருது வழங்கி கௌரவித்துள்ளது. திருகோணமலை மாநகராட்சி மன்ற பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நடந்த வாசல் கவிதைக்கான சஞ்சிகை வெளியிட்டு விழாவில் திருகோணமலை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சூ. பார்த்திபன் விருதினை நந்தவனம் சந்திரசேகரனுக்கு வழங்கினார் வாசல் சஞ்சிகை பிரதம ஆசிரியர் திருச்செந்தூரன் விழா அனைத்து ஏற்பாடுகளைச் சிறப்பாக செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# உத்தரப் பிரதேசத்தின் மூன்று மாடி வீட்டையே பண்ணையாக மாற்றி விவசாயம் — லட்சக்கணக்கில் வருமானம்



முட்டைகோஸ், கத்தரிக்காய், பச்சை மிளகாய், வெந்தயம், பச்சை கொத்தமல்லி போன்ற காய்கறிகள் வயலில் விளைந்திருப்பதை நாம் ஆச்சரியமாக பார்க்க மாட்டோம்.

சிலர் வீட்டு தோட்டத்தில், தொட்டியில் இத்தகைய காய்கறிகளை சிறிய அளவில் வளர்ப்பதும் உண்டு.

ஆனால், உத்தரப் பிரதேசத்தின் பரேலி நகரத்தைச் சேர்ந்த ராம்வீர் சிங் தனது மூன்று மாடி வீட்டில் வித்தியாசமான முறையில் காய்கறிகள், பழங்கள் போன்றவற்றை வளர்த்து வருகிறார். அவரது குடும்பத்தினர் இதன் மூலம் லட்சக்கணக்கான வருமானம் பெறுகின்றனர் என்பதை கேட்கும்போது உங்களுக்கு ஆச்சரியமாக கூட இருக்கக் கூடும். ஆனால், அதுதான் உண்மை. வீட்டுக்குள் செய்யப்படும் இந்த விவசாய முறையில் மற்றொரு அச்சரியமும் உள்ளது. நீரை மட்டுமே சார்ந்து செய்யப்படும் இந்த விவசாயத்துக்கு மண் தேவையில்லை. ஹைட்ரோபோனிக் எனப்படும் இந்த விவசாய முறை இந்தியாவுக்கு புதியது.

தூரத்தில் இருந்து பார்க்குபோது மற்ற வீடுகளை விட ராம்வீர் சிங்கின் வீடு பசுமை போர்த்தியது போன்று தனித்து காணப்படுகிறது. வீட்டின் ஒவ்வொரு மாடியிலும் விதவிதமான காய்கறிகளின் கொடிகள் பிளாஸ்டிக் குழாய்களில் வளர்வது தெரிகிறது. வீட்டின் ஒவ்வொரு தளத்திலும், வெளியிலும், பிற இடங்களிலும் தடிமனான பிளாஸ்டிக் குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளன. இந்த குழாய்கள் வெளிப்புற சுவர்களுக்கு இணையாக வைக்கப்படுகின்றன, அவை எல்லா நேரங்களிலும் தண்ணீரால் நிரப்பப்படுகின்றன. காய்கறி விதைகள் பிளாஸ்டிக் வாளிகள் போன்ற சிறிய கூடைகளில் தேங்காய் பட்டை மற்றும் மலைகளில் இருந்து கொண்டு வரப்பட்ட ஒரு வகையான பாசியுடன் வைக்கப்படுகின்றன. இதற்குப் பிறகு, குழாயின் துளையில் வாளி வைக்கப்படுகிறது, அங்கு விதைகள் தண்ணீரில் மூழ்கிய பின் முளைக்கத் தொடங்கும். மூன்று நான்கு வாரங்களில் காய்கறிகள் கிடைக்க ஆரம்பிக்கும்.

ராம்வீர் சிங் ஊடகவியலாளராக பணியாற்றி வருகிறார். அதே நேரத்தில் வித்தியாசமாக எதாவது செய்ய வேண்டும் என்று அவர் விரும்பினார். துபாயில் விவசாய கண்காட்சி ஒன்றில் பங்கேற்க ராம்வீர் சிங்கிற்கு ஹைட்ரோபோனிக் குறித்து தெரியவந்தது. தாய்லாந்துக்கு சென்று இது குறித்து மேலும் அறிந்துகொண்டதாக அவர் கூறுகிறார். இந்தியாவில் இதுபோன்ற முறையில் காய்கறி விளைவிக்கப்படுவது இல்லை. ஆனால், ஐரோப்பிய நாடுகளில் ஹைட்ரோபோனிக் முறை பிரபலமானது. இந்த முறை குறித்து இணையத்திலும் பிற இடங்களிலும் அறிந்ததைகொண்டு சோதனை முயற்சியாக தனது வீட்டிலேயே சிறு பகுதியை ஒதுக்கி ஹைட்ரோபோனிக் விவசாயத்தை அவர் தொடங்கியிருக்கிறார்.



அதில் அவருக்கு வெற்றி கிடைத்ததும், மொத்த வீட்டையும் பண்ணையாக மாற்ற அவர் முடிவு செய்துள்ளார்.

கத்தரிக்காய், முட்டைக்கோஸ், மிளகாய், கொத்தமல்லி, வெந்தயம், ப்ரோக்கோலி மற்றும் பல காய்கறிகள் ரன்பீரின் வீட்டில் வளர்க்கப்படுகின்றன. குழாய்க்குள் இருக்கும் தண்ணீரில் இவை வளர்கின்றன. இவற்றுக்கு மண் தேவையில்லை. இந்த வகை விவசாயத்தில், தண்ணீரும் மிகக் குறைந்த அளவிலேயே பயன்படுத்தப்படுகிறது.

"இந்த வகை விவசாயத்துக்கு தொடக்கத்தில் தண்ணீர் குழாய்கள் அமைப்பதற்கு செலவு ஆகும். அதன் பின்னர், காய்கறி விளைவிப்பதற்கான செலவு குறையும்." என்று அவர் கூறுகிறார். காய்கறிகளை பூச்சிகளிடம் இருந்து பாதுகாக்க வீட்டின் கூரையில் பாலித்தின் கவர்களை பயன்படுத்துவதாகவும் காய்கறி, பழங்களை அணில், குரங்குகளிடம் இருந்து பாதுகாக்க வீட்டை சுற்றை வலை அமைத்துள்ளதாகவும் ராம்வீர் சிங் தெரிவித்தார்.

இந்த முறை விவசாயத்தில் காய்கறிகளை பராமறிக்க அதிக கவனம் தேவை என்பதால், நாம் பயன்படுத்தும் சாதாரண காய்கறிகளை விட இவற்றின் விலை அதிகம் என்கிறார் ராம்வீர் சிங். காய்கறிகள் ஒரு கட்டுப்படுத்தப்பட்ட வெப்பநிலையில் சுத்தமான நீரில் வளர்வதால் மிகவும் பசுமையாக இருப்பதோடு, மற்ற காய்கறிகளை விட இவற்றின் தரம் மிக அதிகம் என்றும் அவர் கூறுகிறார். உறுப்பினர் சேர்க்கை மூலம் இந்த காய்கறிகளை பரோலியில் அவர் விற்பனை செய்து வருகிறார். இந்த காய்கறிகளை வாங்க மக்கள் குறிப்பிட்ட நாளில் அவரது வீட்டிற்கு வருகிறார்கள்.

பெரிய ஹோட்டல்களில் கூட சில நேரங்களில் ராம்வீர் சிங்கின் வீட்டில் வளர்க்கப்படும் காய்கறிகள் விநியோகிக்கப்படுகின்றன.

இந்த தனித்துவமான விவசாய முறை மூலம் ஆண்டுக்கு பல லட்சம் ரூபாய் சம்பாதிப்பதாக கூறும் ராம்வீர் சிங், ஹைட்ரோபோனிக் முறையை பயன்படுத்தி பெரிய அளவில் விவசாயம் செய்யவும் திட்டமிட்டுள்ளார். ஹைட்ரோபோனிக் விவசாயம் மீது மக்களின் ஆர்வம் அதிகரித்து வருகிறது என்றும் ராம்வீர் சிங் பிபிசியிடம் தெரிவித்தார்.

"ஆண்டு முழுவதும் வேளாண்மை அறிவியல் மாணவர்கள், விவசாயிகள் ஆகியோர் என் வீட்டுக்கு வந்த இந்த விவசாய முறை குறித்து கேட்டு அறிந்துகொள்கின்றனர். சமீபத்தில் இந்த விவசாய முறை தொடர்பாக பயிற்சி மையம் ஒன்றையும் தொடங்கியுள்ளேன்" என்று அவர் குறிப்பிட்டார்.

இவரின் தனித்துவமிக்க விவசாயத்தின் புகழ் தற்போது எங்கும் பரவி வருகிறது. காய்கறிக் கொடிகள் சூழ்ந்திருக்கும் இவரின் வீட்டைக் காண ஊரின் வெகு தொலைவில் இருந்து மக்கள் வருகிறார்கள்.

Vasantha Nadarajan - Scarborough

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மீனவ பெண்கள் குழுக்களுக்கு கருவாடு பதனிடுவதற்காக நிதி உதவி வழங்கி வைப்பு





- மன்னார் நிருபர் (29-03-2023)

மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மெசிடோ நிறுவனத்தின் மீனவ பெண்கள் குழுக்களுக்கு செவ்வாய்க்கிழமை (28) மாலை கருவாடு பதனிடுவதற்காக 50 ஆயிரம் ரூபாய் பணம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

சௌத்பார் மற்றும் ஓலைத்தொடுவாய் கிராமங்களைச் சேர்ந்த இரு மீனவ பெண்கள் குழுக்களுக்கு இவ்வாறு கருவாடு பதனிடுவதற்காக தலா 50 ஆயிரம் ரூபாய் வீதம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இதன் போது கருவாடு பதனிடுதல் தொடர்பான திட்டமிடல் கருத்தமர்வு ஓய்வு பெற்ற மன்னார் மாவட்ட முன்னாள் கடற்றொழில் பணிப்பாளர் மெராண்டா அவர்களினால் முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவன பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

மன்னார் மாவட்டத்தில் 7 மீனவ பெண்கள் குழுக்களுக்கு இவ்வாறு உதவித் திட்டம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பாடசாலை மாணவர்கள் இடைவிலகல் தொடர்பான சிறப்பு விழிப்புணர்வு அமர்வு





- மன்னார் நிருபர் (29-03-2023)

Chrysalis நிறுவனத்தின் Transform திட்ட நிதி உதவியுடன் செவ்வாய்க்கிழமை (28) மடு கல்வி வலய முள்ளிக்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மற்றும் இரணையிலுப்பைக்குளம் ஆகிய பாடசாலைகளில் பெண் தலைவர்கள் முன்னெடுக்கும் செயல் திட்டம் இடம் பெற்றது.

“பாடசாலை மாணவர்களின் வரவை மேம்படுத்தல்” தொடர்பான ஆலோசனை மற்றும் மாணவர்கள் கல்வியை ஊக்குவிக்கும் விடயங்களை அரச அதிகாரிகள் மூலம் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ஊாசலளயடளை நிறுவன அணி தலைவர் ஜோகான்சன் கலந்து கொண்டார்.

மேலும் இந்த பகுதியில் பாடசாலை இடைவிலகல் ஏற்படவும் மாணவர்கள் கல்வி நிலை பாதிக்கப்பட்ட சரியான போக்குவரத்து வசதிகள் இல்லாமையே அதிக காரணமாக காணப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்

Thana Manickavasagar
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

# சிதைக்கப்பட்ட ஒரு சிவனாலயமும் தமிழ் தேசியச் சூழலும்



**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

வவுனியா வெடுக்குநாறி மலையில் வழிபாட்டுருக்கள் சிதைக்கப்பட்டமை திட்டவட்டமாக பண்பாட்டுப் படுகொலைதான். ஆனால் அந்த தீமைக்குள் ஒரு நன்மை உண்டு. அச்சம்பவம் தமிழ் மக்களை உணர்ச்சிகரமான ஒரு புள்ளியில் ஒன்று திரட்டியுள்ளது. இதுதொடர்பாக சைவ மகாசபை ஒழுங்குபடுத்திய எதிர்ப்பில் ஒரு கிறிஸ்தவ மதகுரு காணப்பட்டார். கத்தோலிக்க திருச்சபையின் நீதிக்கும் நல்லிணக்கத்துக்குமான அமைப்பு அது தொடர்பாக ஓர் அறிக்கையும் வெளியிட்டிருக்கிறது. இவை யாவும் ஓர் ஒடுக்கு முறைக்கு எதிராக தமிழ் மக்கள் மத்தியில் உள்ள மதப் பிரிவுகள் ஒன்றாக இணைந்தமையைக் காட்டுகின்றது. இது வெட்டுக்குநாறிமலையில் தமிழ் மக்களுக்கு நிகழ்ந்த தீமைக்குள் விளைந்த ஒரு நன்மை.

அண்மை நாட்களாக தமிழ் மக்கள் மத்தியில் மதரீதியான அகமுரண்பாடுகளைத் தூண்டும் நோக்கத்தோடு ஆவேசமாக உழைக்கும் சக்திகளை இச்சம்பவம் ஓரளவுக்கு அம்பலப்படுத்தியிருக்கிறது. பலவீனப்படுத்தியும் இருக்கிறது.

கடந்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்த ஆவிக்குரிய சபைப் போதகரான போல் தினகரன், அவர் கலந்து கொள்ளவிருந்த மத நிகழ்ச்சியை ரத்துச்செய்ய வேண்டியிருந்தது. அதற்கு வெளிப்படையாக சொல்லப்பட்ட காரணம் அவர் வணிக விசாவில் வந்தமைதான் என்று கூறப்பட்டது. ஆனால் வெளியில் சொல்லப்படாத காரணம் யாழ்ப்பாணத்தை மையமாகக் கொண்டியங்கும் ஈழத்துச் சிவசேனாவின் எதிர்ப்புதான் என்று ஊகிக்கப்படுகிறது. அல்லது சிவசேனையின் வற்புறுத்தலால் அவ்வாறு அப்போதகரை விசாரிக்க வேண்டி வந்தது என்ற ஒரு தோற்றம் உண்டாகக் கூடிய விதத்தில் அரசாங்கம் காய்களை நகர்த்தியிருக்கிறது என்றும் கூறலாம்.

போதகர் போல் தினகரன் இதற்கு முன்னரும் வந்து போயிருக்கிறார். அப்பொழுதெல்லாம் அவருக்கு வணிக விசாதான் வழங்கப்பட்டது. அப்படிப்பட்ட போதகர்கள் வணிக விசாவில்தான் வருவதுண்டாம். சுற்றுலா விசாவில் வருகை தருபவர்கள் மதப்பிரச்சார நிகழ்வுகளில் பங்கு பெற்றுவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. அவருக்கு விசாவை வழங்கியது சென்னையில் உள்ள இலங்கைத் துணைத் தூதரகம். அந்த விசாவை வழங்கும் பொழுது அவர் என்ன தொழிலுக்காக யாப்பானத்துக்கு போகிறார் என்பது அவர்களுக்கு தெரிந்திருக்கும். அவர் நேரடியாக யாழ்ப்பாணம் வரவில்லை. முதலில் கொழும்புக்குத்தான் வந்தார். கொழும்பில் நான்கு நாட்கள் இருந்தார். அங்கே அவர் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தார். அவருக்காக பிரார்த்தனை செய்தார். அவர் பிரார்த்தனை செய்யும் பொழுது ரணில் விக்கிரமசிங்க அவருக்கு முன் அடக்க ஒடுக்கமாக நிற்கும் ஒளிப்படம் சமூகவலைத்தளங்களில் பகிரப்படுகிறது.

அதன் பின் அவர் யாழ்ப்பாணத்துக்கு வந்தார். பலாலி விமான நிலையத்தில் அவர் கிட்டத்தட்ட 4 மணித்தியாலங்கள் விசேஷமாக விசாரிக்கப்பட்டிருக்கிறார். அவரை விசாரிப்பதற்கு என்று இரண்டு அதிகாரிகள் கொழும்பிலிருந்து விசேஷமாக வருகை தந்ததாகவும் ஒரு தகவல். அந்த விசாரணையின் விளைவாக அவர் ஏற்கனவே மானிப்பாயில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த மத நிகழ்ச்சியை ரத்துச் செய்துவிட்டு தமிழ்நாட்டுக்கு திரும்பி விட்டார். இது தொடர்பில் அந்த மத நிகழ்வை ஒழுங்கு படுத்தியவர்கள் ஜனாதிபதியோடு தொடர்பு கொள்ள முற்பட்ட போதும் திருப்தியான பதில் கிடைக்கவில்லை என்று கூறப்படுகிறது.

இதற்கு முன்னரும் அவரைப் போன்ற போதகர்கள் இலங்கைக்குள் வந்திருக்கிறார்கள். அவர்கள் அனைவரும் வணிக விசாவோடுதான் வந்திருக்கிறார்கள். இப்பொழுது மட்டும் வணிக விசா ஏன் ஒரு விவகாரமாக காட்டப்படுகிறது? அப்படி என்றால் அவரைப் போன்ற போதகர்கள் எந்த விசா எடுத்துக்கொண்டு நாட்டுக்குள் வரவேண்டும்? அதிலும் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் நடக்காத ஒரு விசாரணை ஏன் பலாலி விமான நிலையத்தில் நடந்தது? அப்படியென்றால் யாழ்ப்பாணம் ஒரு தனி நிர்வாக அலகா? இவ்வாறு பலாலி விமான நிலையத்தில் ஒரு விசேஷ விசாரணையை நடத்தியதன்மூலம் சிவசேனையிடமிருந்து நெருக்குதல் வருகிறது அதனால்தான் அவ்வாறு விசாரிக்க வேண்டி வந்தது என்று காட்ட அரசாங்கம் முயற்சிக்கின்றதா?

எந்த ஜனாதிபதி போதகர் போல் தினகரனிடம் ஆசீர்வாதங்களை பெற்றாரோ, அவருடைய அரசாங்கத்தின் இரண்டு அதிகாரிகள் போதகரை பிந்நேரம் நான்கு மணியிலிருந்து இரவு 8 மணி வரை விசாரித்திருக்கிறார்கள் என்றால் ரணில் விக்கிரமசிங்க இதில் யாருக்கு உண்மையாக இருந்திருக்கிறார்? நிச்சயமாக அவர் போதகர் தினகரனுக்கா? அல்லது ஈழத்துச் சிவசேனைக்கா?

நிச்சயமாக அவர் இரண்டு தரப்புக்கும் உண்மையாக மாறாக, அவர் சிங்கள பௌத்த அரசின் நிகழ்ச்சி நிரலுக்கு விசுவாசமாக நடந்திருக்கிறார். அதன்படி தமிழ் மக்களுக்கிடையே அகமுரண்பாடுகளை தூண்டும் விதத்தில் நிலைமைகள் கையாளப்பட்டிருக்கின்றன. சிவசேனை நெருக்கடிகளை கொடுத்தபடியால்தான் அந்த மத நிகழ்வை நடத்த முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டது என்று ஒரு தோற்றம் ஏற்படக்கூடிய விதத்தில் நிலைமைகள் நகர்த்தப்பட்டிருக்கின்றன. அதாவது ஆவிக்குரிய சபைகளுக்கும் சிவசேனைக்கும் இடையிலான முரண்பாட்டை கூர்மைப்படுத்தும் உள்நோக்கம் அதில் உண்டா?

ஈழத்துச் சிவசேனை மேற்படி போதகரின் வருகையை பலமாக எதிர்த்தபடியால்தான் அவர் அவ்வாறு விசாரிக்கப்பட்டார் என்பது உண்மையென்றால், இந்தவிடயத்தில் ஈழத்துச் சிவசேனைக்கு ஏதோ ஒரு வெற்றி கிடைத்திருக்கிறது என்று பொருள். அதாவது தமிழ் மக்கள் மத்தியில் அக முரண்பாடுகளை ஊக்குவிக்கும் ஒரு வெற்றி.

ஆனால், அதே ஈழத்து ஈழத்துச் சிவசேனை கச்சதீவில் கட்டப்பட்டிருக்கும் புத்தர் சிலையை அகற்றுவதில் ஏன் வெற்றி பெற முடியவில்லை? அல்லது குருந்தூர் மலையில் கட்டி எழுப்பப்பட்டிருக்கும் கட்டுமானங்களை அகற்ற ஏன் சிவசேனையால் முடியவில்லை? அல்லது வெடுக்குநாறி மலையில் சிவனாலயம் சிதைக்கப்படுவதை ஏன் சிவசேனையால் தடுக்க முடியவில்லை? திருகோணமலையில் கன்னியா வெந்நீரூற்றில், உயர் பாதுகாப்பு வலையங்களில் சைவ மரபுரிமைச் சின்னங்கள் சிதைக்கப்படுவதை ஏன் தடுக்க முடியவில்லை?

இதுதான் கேள்வி. சிங்கள பௌத்த மரபுரிமை ஆக்கிரமிப்புக்கு எதிராக ஈழத்துச் சிவசேனையால் வெற்றி பெற முடியவில்லை.

அதாவது சிவசேனை எந்த விடயங்களில் வெற்றி பெற வேண்டும் என்பது அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரல்களின்படிதான் நடக்கிறது. அதனால்தான் ஈழத்துச் சிவசேனைக்கு சிங்கள பௌத்த தீவிரவாத மதகுருவான ஞானசார தேரர் இணக்கமானவராக தெரிகிறார். ஆனால் சக கிறிஸ்தவர்கள் விரோதிகளாகத் தெரிகிறார்கள். வடக்கு கிழக்கு இணைப்பை எதிர்க்கும் கிழக்கு மைய கட்சிகளுக்கு வடக்கு விரோதியாக தெரிகிறது. ஆனால் ராஜபக்சக்கள் நண்பர்களாக தெரிகிறார்கள்.

இப்பொழுது கூட்டிக் கழித்துப் பார்த்தால் விடை தெளிவாகக் கிடைக்கும். தமிழ் மக்களை பிரதேச ரீதியாக் சமய ரீதியாக் சாதி ரீதியாகப் பிரித்துக் கையாள முற்படும் சக்திகள் அல்லது தமிழ்மக்கள் மத்தியில் உள்ள அக முரண்பாடுகளை உருப்பெருக்கி அரசியல் செய்ய முற்படும் சக்திகள் ராஜபக்சங்களுக்கும் சிங்கள பௌத்த பெருந்தேசிய வாதத்துக்கும் நண்பர்களாக இருக்கிறார்கள். ஆயின் யாருடைய நிகழ்ச்சி நிரலை அவர்கள் முன்னெடுக்கிறார்கள்?

கடந்த சில வாரங்களாக நான் எழுதிய கட்டுரைகளுக்கு எனது நண்பர் ஒருவர் வாட்ஸ் அப்பில் பதில் வினையாற்றியிருந்தார். கிறிஸ்தவ சிறு சபைகளின் மதமாற்ற நிகழ்ச்சி நிரல்தான் ஈழத்துச் சிவசேனை போன்ற அமைப்புக்களின் வளர்ச்சிக்கு காரணம் என்று அவர் கருதுகிறாரோ தெரியவில்லை. அவர் படித்தவர், பொறுப்பான அரசு உத்தியோகத்தில் இருப்பவர், குறிப்பாக தன் தொழில் வரையறைகளைத் தாண்டி சுற்றுச்சூழலை பாதுகாப்பதற்காக மகத்தான தொண்டைச் செய்பவர். ஆனால் மதரீதியாக அவர் மதம் மாற்றும் சபைகளுக்கு எதிராக கடுமையான நிலைப்பாட்டோடு காணப்படுகிறார். தமிழ்த் தேசியத்தை மதப் பல்வகைமைகளின் மீது கட்டி எழுப்ப வேண்டும் என்ற எனது விளக்கமானது மதம் மாற்றிகளுக்குச் சாதகமானது என்று அவர் கருதுகிறாரோ தெரியவில்லை.

இந்த இடத்தில் ஒரு விடயத்தைத் தெளிவுபடுத்த வேண்டும். இக்கட்டுரையானது மத மாற்றத்தை கோட்பாட்டு ரீதியாக ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் எந்த மதத்தை பின்பற்ற வேண்டும் என்பது ஒருவருடைய தனிப்பட்ட உரிமை. அந்த ஜனநாயக உரிமையில் யாரும் தலையிட முடியாது.

நான் மிகவும் மதிக்கும் ஒரு ஆன்மீகவாதி ஒருமுறை சொன்னார்... "மதமாற்றம் என்பது அறியாமையின் மீதே நிகழ்கின்றது. மதம் மாறும் ஒருவருக்கு தான் பிறந்த மதத்தைப் பற்றியும் சரியான விளக்கம் இல்லை, மாறிய மதத்தை பற்றியும் சரியாக விளங்கவில்லை" என்று. ஏனெனில் எல்லா மதங்களும் ஒரே இறுதியிலக்கை நோக்கித்தான் வழிநடத்துகின்றன. இதில் தான் பிறந்த மதத்தையும் தான் மாறிய மதத்தையும் சரியாக விளங்கிக் கொள்ளாத ஒருவர்தான் மதம் மாறுகிறார் என்று அவர் கூறுவார்.

அறியாமை தவிர மதமாற்றத்திற்கு வறுமை, சமூக ஏற்றத் தாழ்வுகள் போன்ற காரணங்களும் உண்டு. இந்த விளக்கத்தின் அடிப்படையில் பார்த்தால் மத மாற்றத்தின் பின்னணியில் இருக்கும் அறியாமை, வறுமை, சமூக ஏற்றத்தாழ்வுகள் போன்றவற்றை அகற்ற வேண்டிய பொறுப்பு மதமாற்றம் தொடர்பான குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் மதப் பிரிவினருக்கு உண்டு.

அதுமட்டுமல்ல தம்மை குறிப்பிட்ட ஒரு மதத்தின் காவலர்களாக காட்டிக் கொள்பவர்களும்கூட தமது மதம் கூறும் பேருண்மைகளை அறியாதவர்கள் என்பதனை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். ஏனெனில் உண்மையான ஆன்மீகவாதிகள் வெறுப்பை விதைப்பதில்லை, மகிழ்ச்சியையும் அன்பையும்தான் விதைக்கின்றார்கள்.

சில நாட்களுக்கு முன், ஈழத்துச் சிவசேனையின் தலைவர் தனது இல்லத்தில் நடத்திய ஒரு பத்திரிகையாளர் மாநாட்டில் மதமாற்றிகளை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தண்டிக்க வேண்டும் என்று கூறியதாக ஒரு செய்தி வெளிவந்தது. அவர் அவ்வாறு கூறிய காலகட்டத்தில் புதிய பயங்கரவாதத் தடை சட்டத்துக்கான சட்ட மூலம் வெளியிடப்பட்டிருந்தது. தமிழ் மக்கள் பயங்கரவாத தடைச் சட்டமே வேண்டாம் என்று கோரிக்கை வைக்கும் ஒரு காலகட்டத்தில் அச்சட்டத்தை பயன்படுத்தி தமிழ் மக்களில் ஒரு பிரிவினரைத் தண்டிக்க வேண்டும் என்று ஒருவர் கேட்கிறார். ஆயின் அவர் யார் ?அவருடைய எதிரிகள் யார்? நண்பர்கள் யார்?

ஏற்கனவே தமிழ் மக்களை பிரதேச வாதத்தின் பெயரால் பிரிக்கும் சக்திகள் தென்னிலங்கையில் உள்ள கட்சிகளின் ஆதரவோடு கிழக்கில் பலமடைந்து வருகின்றன. இப்பொழுது வடக்கில் மதரீதியாக பிரிக்கும் சக்திகள் பிராந்திய மற்றும் கொழும்புமைய சக்திகளோடு இணைந்து துடிப்பாக உழைக்கத் தொடங்கிவிட்டன. தமிழ்மக்கள் மத்தியில் உள்ள தமிழ்த்தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட கட்சிகள் அதைக் குறித்து கருத்து தெரிவிக்க தயங்குகின்றன. இந்த விடயத்தில் தலையிடத்தக்க வல்லமையோடு சிவில் சமூகங்களும் இல்லை. இப்படிப்பட்டதோர் பாரதூரமான அரசியல், சமூக, ஆன்மீக வெற்றிடத்தில் வீட்டுக்கு நாறிமலை விவகாரம் தமிழ் மக்களை தற்காலிகமாகவேனும் ஒன்று திரட்டியிருக்கிறதா?





# ரணிலைப்போன்று மக்களையும் மேற்குலகம் மூளை சலவை செய்யுமா?

வி.தேவராஜ்
மூத்த
ஊடகவியலாளர்

- ரணில் விக்ரமசிங்க மேற்குலகை வெல்லலாம். மக்களின் மனங்களை வெல்வதற்கு நீண்ட தூரம் பயணித்தாக வேண்டும்.
- "சிஸ்டம் சேன்ஜ்" தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்கு வழி சமைப்பதாக அமையாது.
- தற்போதும் தோற்றவர்கள் தமிழ் மக்களே.

தென்னிலங்கை அரசியலில் பேசு பொருளாக இருப்பது "தேசிய நலன்". தமிழர் அரசியலில் இருப்பது "சுதந்திர தமிழ்த் தேசிய அரசியல்". சுதந்திர இலங்கையின் கடந்த 75 வருடகால இலங்கையின் அரசியல் பரப்பில் இந்த இரு அரசியல் பயணங்களும் எவ்வித சமரசத்திற்கும் இடமின்றி இரட்டை தண்டவாளங்களாக பயணித்து வருகின்றன.

தேசிய நலன் என்ற போர்வைக்குள் சிங்கள ஆளும் வர்க்கம் 75 வருடங்களாக "பெரும்பான்மை இன ஜனநாயக" அரசியலுக்குள் நடத்தி வருகின்ற சிங்கள ஆளும் வர்க்கத்தின் "ஜனநாயக முகமூடி" கிழிந்து தொங்குகின்றது.

75 வருடங்களுக்குப் பிறகு ஜனநாயகமே இல்லாத ஜனநாயகத்திற்குள் வாழ்ந்து வந்திருக்கின்றோம் என விழி பிதுங்கி நிற்கும் இவ்வேளையில் "சிஸ்டம் சேன்ஜ்" என்ற நிலையில் இருந்து பதிய தலைமைத்துவத்திற்கான பாதை நோக்கிய பயணத்தில் திசையறியாது தென்னிலங்கை உள்ளது. இந்தப் பயணத்தில் தென்னிலங்கை கடந்த வருடத்தில் வரலாறு காணாத வெற்றிகளைக் கண்டபோதும் அந்த வெற்றியைத் தக்க வைத்துக் கொள்ள முடியாது போயிற்று என்பது துரதிஸ்டமே.

சுதந்திர இலங்கையின் சிங்கள ஆளும் வர்க்கம் தொடர்ந்தும் தமது அரசியல் அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்வதற்காக வியூகங்களை அமைத்து போராடிக் கொண்டிருக்கின்றது. இதற்கென சிங்கள ஆளும் வர்க்கம் தற்போது ரணில் விக்ரமசிங்கவின் தலைமையை ஏற்று செயற்படுகின்றது.

ஆட்சி அதிகாரத்துக்கான போட்டியை ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு ஆளும் வர்க்கத்தின் நலன்களைப் பாதுகாக்க ஓரணியில் கைகோர்த்துப் பயணிக்கின்றனர்.

தமது இருப்புக்கு ஆபத்து வரும்போது சிங்கள ஆளும் வர்க்கம் தமக்கிடையிலான அரசியல் போட்டியை தூர விலக்கி வைத்துவிட்டு ஓரணியில் கைகோர்த்துப் பயணிப்பதை அரசியல் வர்க்க நலன் சார்ந்த மரபாகக் கொண்டுள்ளன. ஜேவிபி கிளர்ச்சியின் போது பச்சை நீலத்துக்கப்பால் வர்க்க நலன் கொடிக்குக் கீழ் ஒன்றிணைந்து பணியாற்றியது வரலாறாகும்.

தற்போதும் சிங்கள ஆளும் வர்க்கம் வழமைபோன்று சுதாகரித்துக் கொண்டு தன்னைப் பலப்படுத்தி வருகின்றது. சிங்கள ஆளும் வர்க்கத்திற்கான தலைமைத்துவத்தை ரணில் விக்ரமசிங்க "தேசிய நலன்" என்ற போர்வையில் வழங்கிக் கொண்டும் வழி நடத்திக் கொணடும் வருகின்றார். அமெரிக்கா உற்பட மேற்கத்தைய சக்திகள் தமது சேவகனான ரணில் விக்ரமசிங்கவை இலங்கையின் வருங்கால சக்திமிக்க தலைவராக ஆக்குவதற்கான பாதையை செப்பனிடுகின்றன.

மேற்கத்தைய பாதையை தமக்காக திறந்து கொண்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனது ஹவாட் பல்கலைக்கழக உரையின்போது இந்தியா சீனா உற்பட ஆசிய நாடுகளையும் தனது எதிர்கால இலங்கையின் பூகோள அரசியலுக்குள் சாதகமாக்கிக் கொள்ளும் போக்கினை உருவாக்கிக் கொண்டுள்ளார். அத்துடன் இந்தியாவை தனது பாதுகாவலனாகவும் அறிவித்துள்ளார். ரணில் விக்ரமசிங்க லாவகமாக தமக்கானதும் இலங்கைக்கானதுமான பாதையை வடிவமைத்துக் கொண்டுள்ளார். இதற்கென இலங்கையின் மூலோபாய அமைவிடத்தை மூலதனமாக்கி தனது அரசியல் பயணத்தை சர்வதேச ரீதியில் வெற்றிகரமாக கொண்டு செல்வதற்கும் இலங்கையின் பொருளாதாரத்தை மேற்கத்தைய போட்டி பூகோள அரசியலில் இருந்து மீட்டு வெற்றி கொள்ள காய்களை நகர்த்தியுள்ளார்.

மொத்தத்தில் அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதியாவதற்கான அரசியல் பாதையை ரணில் விக்ரமசிங்க சர்வதேசரீதியில் அமைத்துக் கொண்டுள்ளார்.

ஆனால் உள்நாட்டில் அவருக்கான அரசியல் பாதை சிக்கல் நிறைந்ததாகவே உள்ளது. "சிஸ்டம் சேன்ஜ்" என்பது இன்றும் பேசுபொருளாகவே உள்ளது. அது அடையப்பட வேண்டுமென்பதில் தென்னிலங்கையின் முழுக் கவனமும் குவிந்துள்ளது.

இந்த எதிர்பார்ப்பு 75 வருடகால சிங்கள ஆளும் வர்க்கத்தின் அரசியல் இருப்பையும் எதிர்காலத்தையும் கேள்விக்குள்ளாக்கியுள்ளது.

- தென்னிலங்கையில் பலமிக்க மாற்று அரசியல் இல்லை.

இவர்களுக்கு மாற்றீடாக தென்னிலங்கையின் அரசியல் களத்தில் நிற்பவர்களும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் என்ற வகையில் "மாற்றத்திற்கான கோஷத்திற்குள்" அரசியல் அறுவடைக்காகக் காத்திருக்கின்றனர். அதாவது ஆடு நனைகிறது என ஓணான் அழுவது போன்றதாகவே தென்னிலங்கை அரசியல் உள்ளது.

மறுபுறம் மாற்றத்தை எதிர் பார்த்துக் காத்திருக்கும் தென்னிலங்கை அரசியல் சக்திகளும் தலைமை இன்றி தடுமாறிக் கொண்டும் எடுப்பார் கைப் பிள்ளையாகவும் தென்னிலங்கை அரசியல் களத்தில் உள்ளன.

மக்களை வெல்வது யார்? என்பதே இன்றைய தென்னிலங்கையின் பனிப் போராக இருக்கின்றது.

தென்னிலங்கையின் எதிரணியினரது ஒற்றுமை இன்மை மக்கள் எதிர்பார்புக்கு தீனி போடும் சக்தியற்ற நிலை என்பனவற்றைச் சாதகமாக்கி ஆட்சி அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதன் மூலம் எதிர்க் கட்சிகளை முடிந்தவரைப் பலவீனப்படுத்தி மக்களுக்கு தம்மை விட்டால் வேறு தெரிவு இல்லை என்ற நிலையை உருவாக்கி ஆட்சியைக் கைப்பற்றும் நோக்கில் காய்களை நகர்த்தவே ரணில் - ராஜபக்ஷ அணியினர் முயல்கின்றனர்.

- ரணில் விக்ரமசிங்கவே அரசியல் மீட்பர்?

தற்போதைய அரசியல் களத்தில் ரணில் விக்ரமசிங்கவே அரசியல் மீட்பர் என்ற பிம்பத்தை உருவாக்கும் வகையில் காய்கள் நகர்த்தப்பட்டதையும் காணக் கூடியதாக இருந்தது. நாட்டில் ஏற்பட்ட மோசமான பற்றாக் குறைகள் கூட இத்தகைய பிம்பத்தை உருவாக்க மேற் கொள்ளப்பட்ட சம்பவங்களோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

ரணில் விக்ரமசிங்க பொருளாதார மேன்மையும் சுபீட்சமுமே தனது முன்னுரிமை என கூறியுள்ளார்.

ஆனால் பொருளாதார மேன்மையும் அரசியல் ஸ்திரத்தன்மையும் ஒன்றையொன்று சார்ந்துள்ளன. ஒன்று இல்லாமல் மற்றொன்று நிலைத்திருக்க முடியாது.

ஒரு தேசத்தின் அரசியல் ஸ்திரத்தன்மையை கண்ணீர்ப்புகை. அடக்குமுறைச் சட்டங்கள் மற்றும் தடியடி தாக்குதல்கள் மூலம் அடைய முடியாது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தை இறுதிக் கட்டத்திற்கு கொண்டு செல்வதில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க காட்டிய சாமர்த்தியமும் பொறுமையும் அவரது அரசியல் நடவடிக்கைகளில் காணமுடியவில்லை.

- அரசியல் ஸ்திரமின்மை

தற்போதைய அரசாங்கம் மக்கள் ஆணைஅற்றது. ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்படவில்லை. மாறாக அவசர நடவடிக்கைகள் மூலம் நியமிக்கப்பட்டார். கடந்த தேர்தலில் அவர் தனது தொகுதியை இழந்தார். அவரது கட்சியால் ஒரு பாராளுமன்ற தொகுதியில் கூட வெற்றி பெற முடியவில்லை. ஆனால் தேசியப் பட்டியல் பொறிமுறையின் மூலம் அவர் தனது ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஒரு ஆசனத்தையே பெற்றுக் கொடுத்தார். மார்ச் 22 அன்று பாராளுமன்றத்தில் ஜனாதிபதி ஒரு அறிக்கையில், தனக்கு ஆதரவு இல்லை என்பதை ஒப்புக்கொள்கிறார். ஆனால் தன்னம்பிக்கை போதும் என்று கூறுகிறார்!

யூ.என்.பி.க்கு நாடாளுமன்றத்தில் ஆதரவு இல்லை. ஆனால் மக்களைத் தாக்கும் கொள்கைகளை கொண்டு செல்வதற்கு ராஜபக்ச அணியினரை நம்பியுள்ளது. கடந்த ஆண்டு ஜூலை கிளர்ச்சியின் போது ஒரு மாபெரும் மக்கள் இயக்கம் ராஜபக்ச அணியினரையும் முழு அமைச்சரவையையும் வெளியேற்றியது. எவ்வாறாயினும், தற்போதைய ஜனாதிபதி அவசரகால சட்ட அதிகாரங்களையும் இராணுவத்தையும் பயன்படுத்தி வெகுஜன இயக்க போராட்டங்களை நசுக்கினார். மற்றும் ராஜபக்ஷக்களின் பழைய ஆட்சியை பின்கதவு வழியாக மீண்டும் அதிகாரத்திற்கு கொண்டு வந்தார். மொத்தத்தில் "முறையான ஜனநாயகம்" கூட இப்போது இல்லை என்ற பொது ஜன அபிப்பிராயத்தை வேரூன்றச் செய்துவிட்டார்.

- மக்கள் செல்வாக்கற்றவர்கள்

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் அறிவிக்கப்பட்ட உடனேயே தேர்தல் பேரணிகள் ஆரம்பிக்கப்பட்டபோது, ரணில் உள்ளிட்ட ராஜபக்ஷக்கள் நாட்டில் எந்தளவுக்கு மக்கள் செல்வாக்கற்றவர்கள் என்பது தெரிந்தது. தேர்தல் பொதுக்கூட்டங்களில் அவர்களால் கணிசமான ஆதரவினைப் பெற முடியவில்லை. இந்த தேர்தலில் ரணில் - ராஜபக்ஷ ஆளும் கட்சி அணியினர் பெரும் தோல்வியை சந்திப்பர் எனத் தெரிந்தவுடன் தேர்தல் ரத்து செய்யப்பட்டது. மொத்தத்தில் இந்த அணியினர் எவருமே தற்போதைக்கு ஒரு தேர்தலை எதிர் நோக்கும் நிலையில் இல்லை.

- ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு பெரும் தோல்வி

முன்னாள் ஜனாதிபதியின் புதல்வரான நாமல் ராஜபக்சவை "புதிய தலைவராக" உயர்த்தும் முயற்சியிலும் ராஜபக்ஷ குடும்பத்தினருக்கு பெரும் தோல்வி ஏற்பட்டது.

- ரணிலின் கொள்கைகளுக்கு மாற்று இல்லை.

எதிர்க்கட்சியான சமகி ஜன பலவேகய (SJB - ஐக்கிய மக்கள் சக்தி) ஆளுங்கட்சியின் பெரும் செல்வாக்கின்மையிலிருந்து முழுமையாகப் பயனடைய முடியவில்லை. ஏனெனில் ரணிலின் கொள்கைகளுக்கு தெளிவான மாற்று அவர்களிடம் இல்லை. அவர்களின் செல்வாக்கு சற்று அதிகரித்தது.

- ஜே.வி.பி தீர்க்கமான சவாலை முன்வைக்கவில்லை.

இந்த வெற்றிடத்தில். ஜனதா விமுக்தி பெரமுனா (ஜேவிபி - மக்கள் விடுதலை முன்னணி) மற்றும் அதன் கூட்டணியான என்பிபி ஆகியவை குறிப்பிடத்தக்க ஆதரவைப் பெற்ற முக்கிய சக்தியாக இருந்தன. NPP தெளிவான மாற்று இல்லை. அதன் இடது சாரி சொல்லாட்சி மற்றும் ஊழல் எதிர்ப்பு நிலைப்பாடு காரணமாக அது பிரபலமடைந்து வருகிறது.

எந்தவொரு கொள்கைக்கும் ஜே.வி.பி தீர்க்கமான சவாலை முன்வைக்கவில்லை. இப்போது அவர்களின் நிலைப்பாடு முற்றிலும் புதிய தேர்தலுக்கான அழைப்பைச் சுற்றியே உள்ளது.

இந்த அரசாங்கம் எவ்வளவு செல்வாக்கற்றது என்பதை ஜே.வி.பி உட்பட அனைவருக்கும் தெரியும். அண்மையில். ஜே.வி.பி.யின் தலைவர் அனுரகுமார திஸாநாயக்க. ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவை வெளிப்படுத்த குறைந்தபட்சம் நூறு பேரையாவது கூட்டத்தை ஏற்பாடு செய்யுமாறு சவால் விடுத்தார். இவ்வளவு சிறிய, உண்மையான அணிதிரட்டலைக் கூட ரணில் விக்ரமசிங்கவால் செய்ய முடியாதுள்ளது. இந்த பலவீனம் மற்றும் வெகுஜன எழுச்சி மற்றும் கோபத்தின் மனநிலையை அறிந்திருந்தும். ஜே.வி.பி ஒரு தீர்க்கமான போராட்டத்தை முன்னெடுப்பதற்கு ஒரு தடையாக இருந்து வருகிறது.

- அடக்குமுறைக்குமத்தியில் மாணவர்கள் போராட்டம்

அரசுப் படைகளால் இடைவிடாத கொடூர தாக்குதல்கள் மற்றும் கைதுகள் நடைபெற்றபோதும், பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் தொடர்ந்து பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இந்த மிருகத்தனமான அடக்குமுறை நடவடிக்கைதான் இன்னும் கூடுதலான இயக்கங்களை வளர்ச்சியடையாமல் தடுத்து நிறுத்தியுள்ளது என்பது உண்மைதான்.

இருப்பினும், ரணில் - ராஜபக்ஷ ஆட்சியின் மீதான கோபமும். விரக்தியும் உச்சக்கட்டத்தை எட்டுகின்றன.

(தொடர்ச்சி 19 பக்கம்)

உதயனின் பிரத்தியேகச் செய்தி

# மனோ சாட்சி
# மனம் திறக்கிறார் மனோ கணேசன்

## (கனடா உதயனிற்கான பிரத்தியேகத் தொடர் - அத்தியாயம் 9)

## "ஐநா முதன்முதலில் நேரடியாக கேட்ட தமிழர்களின் அழுகை, ஆவேச, ஒப்பாரி குரல்கள்"



• **கா**ணாமல் போனோர் உறவுகள் நேரடியாக மனித உரிமை ஆணையாளரை சந்திக்க கூடாது என அரசாங்கம் நிபந்தனை போட்டது.
• குடும்ப உறவுகளை ஐநா வளாக வாசலுக்கு அழைத்து வந்து ஆர்ப்பாட்டம் செய்ய வைக்க நான் திட்டம் போட்டேன்.
• சுவரின் அந்த பக்கம் இருக்கும் மக்களை சந்திக்க தயங்கிய, மனித உரிமை ஆணையாளரிடம், "..பரவாயில்லை, மேடம் கமிஷனர், ஐநா ஆணையாளர் சுவரின் அந்த பக்கம் இருக்கும் மக்களை சந்திக்க விரும்பவில்லை. நான் இதை போய் அவர்களிடம் சொல்கிறேன்.." என்றேன். அதிர்ந்து போன ஆணையாளர் லுவிஸ் ஆர்பர், எனது வலது கையை இறுக்கமாக பிடித்தபடி என்னுடன் வெளியே வந்தார்.
• அப்பாவிகளின் அழுகுரல் அன்றைய தினம் அங்கே வானை பிளந்தது. எமது அவலத்தை உலகம் முதல் முதலாக நேரடியாக பார்த்து, கேட்டது.

---

**காலகட்டம்: 2007ல் கொடும் யுத்தம் நடைபெறும் காலம். ஐநா மனித உரிமை ஆணையாளர் லூயிஸ் ஆபர் அவர்களின் விஜயத்தில் முக்கியமான நிகழ்ச்சியான எங்கள் மக்கள் கண்காணிப்பு குழுவையும், காணாமல் போன மக்களின் உறவுகளையும் ஆணையாளர் சந்தித்த காலகட்டம்.**

---

ஐநா மனித உரிமை ஆணையாளர் லூயிஸ் ஆர்பர் அவர்களின் இலங்கை விஜயத்தில், காணாமல் போனோரின் குடும்ப அங்கத்தவர் எவரும் ஆணையாளரை நேரடியாக சந்திக்க கூடாது என்ற நிபந்தனையை அரசாங்கம் எனக்கும், கொழும்பு ஐநா அலுவலகத்திற்கும் விதித்திருந்தது.

"நான் சொல்வதை கேட்க மாட்டேன்" என்று அன்றைய மனித உரிமை துறைசார் இலங்கை அமைச்சர் மகிந்த சமரசிங்கவிற்கு (இப்போது அமெரிக்காவில் இலங்கை தூதுவர்) நன்றாக தெரியும். ஆனால் கொழும்பு ஐநா அலுவலக அதிகாரிகள் "ப்ரோடோகால்" (Protocol) காரணமாக அரசாங்கத்தின் நெருக்குதலை மீறமுடியாமல் தடுமாறினார்கள்.

இறுதியில் கொழும்பு புலர்ஸ் சந்தியில் அமைந்திருக்கும் ஐநா வளாகத்தில், ஆணையாளர் லுயிஸ் ஆர்பர், எங்கள் மக்கள் கண்காணிப்பு குழுவை சந்தித்தார்.

என்னுடன், சிறிதுங்க ஜயசூரிய, பிரியாணி குணரத்ன, சுரேஷ் பிரேமச்சந்திரன், கீர்த்தி தென்னக்கோன், ஆகியோரும் மேலதிகமாக இன்னும் பத்து பேரும் கலந்துகொண்டார்கள். அன்று எனது கட்சியில் இருந்த குமரகுருபரனையும் என்னுடன் கூட்டத்திற்கு அழைத்து போனேன். அத்துடன் கொழும்பில் இருந்து வேறு சில மனித உரிமை அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டதாக ஞாபகம். குறிப்பாக நண்பர் சட்டத்தரணி ரத்னவேலு, நண்பர் கந்தசாமி (இப்போது ஆஸ்திரெலியாவில் வாழ்கிறார்) அவரது மனித உரிமை அமைப்பு சார்பாக கலந்து கொண்டார்.

எனக்கு எதிராக அரச பயங்கரவாதம் முன்னெடுக்கப்பட்டு, நெருக்கடி தீவிரம் அடைந்த வேளைகளில், எமது மக்கள் கண்காணிப்பு குழுவுக்கு அளப்பரிய ஒத்துழைப்புகளை வழங்கியவர், நண்பர் கந்தசாமி.

பத்து பேரை மக்கள் கண்காணிப்பு குழுவின் பணியாளர்கள் என்று சொல்லி, உண்மையில் காணாமல் போனவர்களின் உறவினர்களை நான் இரகசியமாக கூட்டி போனேன்.

அதற்கு முன், பெருந்தொகையான காணாமல் போனோர்களின் குடும்ப உறவுகளை நாடு முழுக்க இருந்து அன்று காலை 8 மணிக்கே புறக்கோட்டை பேங்க்'ால் வீதியில் அமைந்துள்ள எனது கட்சி அலுவலகத்திற்கு முன் கூட்டினேன்.

அங்கே இருந்து அவர்களை ஐநா வளாகம் அமைந்துள்ள புலர்ஸ் சந்திக்கு அழைத்து வந்து,




ஆணையாளருடன் நாங்கள் வளாகத்திற்குள்ளே பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கும் போது, வெளியே ஆர்ப்பாட்டம் செய்ய வைக்க வேண்டும். இது என் திட்டம்.

காணாமல் போனோரின் உறவுகளை ஆணையாளர் சந்திக்க கூடாது என, அரசாங்கம் தடைவிதித்திருந்தாலும் கூட அதை மீறி இது நடைபெற வேண்டும்.

இதன் மூலம் இலங்கையில் காணாமல் போன தமிழர்களின் குரலை நேரடியாக ஆணையாளரும், உலகமும் கேட்க வேண்டும் என்பது எனது திட்டம்.

நான் கட்சி அலுவலகத்திற்கு காலையிலேயே வந்து, கட்சியின் கொழும்பு மாவட்ட செயற்குழு உறுப்பினர்களிடம் சரியாக 11 மணிக்கு காணாமல் போனோரின் குடும்ப உறுப்பினர்களை புலர்ஸ் சந்திக்கு அழைத்து வந்து, ஐநா வளாகத்திற்கு முன்னாலே தெருவில் அமர்த்த வேண்டும் என்று கூறிவிட்டு வந்துவிட்டேன்.

இதற்காக மூன்று பஸ் வண்டிகளை ஏற்பாடு செய்திருந்தேன்.

பிறகு நான் வீட்டுக்கு சென்றுவிட்டு காலை 11 மணி கூட்டத்திற்கு 10.30 மணியளவில் ஐநா வளாகத்திற்கு சென்ற பொழுது, 10 மணிக்கே குடும்ப உறுப்பினர்களை அழைத்து வந்து வீதியிலே, மக்கள் கண்காணிப்பு குழு பதாகைகளுடன் அமர வைத்திருந்தார்கள், என்னை போன்றே கில்லாடிகளான எனது கட்சி பணியாளர்கள்.

உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் குவிந்திருந்தார்கள். போலீசாரும் குவிந்திருந்தாரக்ள்.

ஆணையாளருடன் எமது சந்திப்பு சுமார் இரண்டு மணித்தியாலம் நடைபெற்றது.

"எங்கே எங்கள் உறவுகள்?" (Where are our dear Ones?) என்ற கடுமையான ஒரு உரையை ஆங்கிலத்திலே நிகழ்த்திவிட்டு மக்கள் கண்காணிப்பு குழுவின் காணாமல் போனோர் பற்றிய ஆவணத்தை ஆணையாளரிடம் நேரடியாக நான் கையளித்தேன்.

என்னையடுத்து சிறிதுங்கவும், சுரேஷ் பிரேமசந்திரனும் உரையாற்றினார்கள்.

அங்கே இருந்த காணாமல் போனோர் குடும்ப உறுப்பினர்கள் அழுது, புலம்ப ஆரம்பித்துவிட்டார்கள். ஒரு பெண்மணியான லூயிஸ் ஆர்பர் உணர்ச்சிவசப்பட்டு போய்விட்டார்.



அவர் இறுதியிலே உணர்ச்சிகரமான பதிலுரை நிகழ்த்தினார். கூட்டம் முடிந்தது. ஐநா வளாக வெளி வாசலை நோக்கி நடந்தோம். எப்படியாவது ஆணையாளரை வளாகத்திற்கு வெளியே வர செய்து அங்கே ஆர்ப்பாட்டம் செய்துகொண்டிருக்கும் நூற்றுக்கணக்கான காணாமல் போனோரின் குடும்ப உறவுகளை பார்க்க செய்ய வேண்டும் என்பது திட்டம்.

ஆனால் ஆணையாளரை சுற்றி இருந்த ஐநா சபையின் இலங்கை ஊழியர்கள் ஆணையாளர் வளாகத்திற்கு வெளியே வந்து காணாமல் போனோரின் கும்ப உறுப்பினர்களை சந்திப்பதை தடுக்கப்பார்த்தார்கள். இ ல ங் கை ய ர் க ள ா ன அவர்களுக்கு அரசாங்கம் நேரடியான கடும் உத்தரவுகளை விடுத்திருக்கும் என்பது எனக்கு தெரியும். அங்கே இருந்த ஐநா அலுவலகத்தின் பிரதான அதிகாரியான ஒரு சிங்கள பெண்மணி "ஆணையாளரை வெளியே அழைத்து செல்ல வேண்டாம்" என்று மக்கள் கண்காணிப்பு குழு செயலாளர் பிரியாணியை திட்டிக்கொண்டிருந்தார்.

அங்கே சென்ற நான் அந்த அதிகாரியை நேரடியாக கை நீட்டி திட்டினேன். "வாயை மூடு. நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை எங்களிடம் நீ கூறத்தேவையில்லை." என்று நான் மிக கடுமையான குரலில் ஆங்கிலத்தில் சொன்னேன். நான் கூறியதை சிங்களத்தில் பிரியாணி உரக்க அவருக்கு சொன்னார். அதோடு அந்த சிங்கள பெண் ஐநா அதிகாரி வாயை மூடிக்கொண்டார்.

"வெளியே வாயிலுக்கருகிலே வந்து, அங்கே உங்களை பார்ப்பதற்காக காத்திருக்கும் காணாமல் போனோரின் குடும்ப உறுப்பினர்களை ஒரு நிமிடம் வந்து பார்த்துவிட்டு போங்கள்" என்று ஆணையாளர் ஆர்பரிடம் நான் அமைதியாக கேட்டேன்.

கனடா நாட்டு கௌரவமான பெண்மணியான ஆர்பர் முடிவெடுக்க முடியாமல் தடுமாறினார். அரசாங்கத்துக்கு ஐநா, வழங்கியுள்ள நிபந்தனையை மீற தயங்கினார். வெளியில் வந்து மக்களை சந்திக்க கூடாது என்று அரசாங்கம் நிபந்தனை விதித்திருந்தது.

உணர்வுபூர்வமான ஒரு கட்டம். என் வாழ்விலும் முக்கியமான ஒரு கட்டம். ஏனென்றால் எவ்வளவுதான் ஆவணங்களை கொடுத்தாலும், எடுத்து கூறினாலும், நேரில் பார்த்தறிவது போல் எதுவும் வராது. கொடும் யுத்தம் நிகழ்ந்து கொண்டிருக்கும் அவ்வேளையில், அதன் விளைவை எப்பாடு பட்டேனும் வெளியில் காட்ட வேண்டும் என்று எனக்குள் ஒரு வெறி ஏற்பட்டது.

நிலைமையை ஊகித்துக்கொண்ட, நான் சட்டென ஆணையாளரின் கண்களை நேரடியாக பார்த்து தெளிவான ஆங்கிலத்தில் கில்லாடித்தனமாக கூறினேன்.

"இங்கே வெளிச்சுவருக்கு அந்த பக்கத்திலே மனித உரிமை மீறப்பட்டு, கடத்தப்பட்ட அப்பாவிகளின் குடும்ப உறுப்பினர்கள் ஐநா சபையின் மனித உரிமை ஆணையாளரை நேரடியாக பார்க்க வேண்டும் என்று அழுகின்றார்கள்."

"சுவரின் இந்த பக்கம் உள்ளே இருக்கும் மனித உரிமை ஆணையாளர் அந்த மக்களை சந்திக்க விரும்பவில்லை. பரவாயில்லை, மேடம் கொமி'னர், நான் இதை போய் அவர்களிடம் சொல்கிறேன்." என்று வெளிவாசலை நோக்கி நடக்க தொடங்கினேன்.

அதிர்ந்து போன ஐநா மனித உரிமை ஆணையாளர் லுயிஸ் ஆர்பர், சட்டென எனது வலது கையை இறுக்கமாக பிடித்தார். எனது கையை பிடித்தபடி என்னுடன் நடந்துவர, வெளிக்கதவு திறக்கப்பட்டது.

அங்கிருந்த ஐநா பாதுகாப்பு அதிகாரிகள் பதட்டமும், தடுமாற்றமும் அடைந்தார்கள். வெளியே இருந்த போலீஸ்காரர்களும் உஷார் ஆனார்கள். ஐநா வளாகத்தின் வெளி மதில் சுவர் கதவை திறந்து, நான் ஐநா மனித உரிமை ஆணையாளரை வெளியே




அழைத்து வந்தேன். அவர் தெருவில் இறங்கவில்லை. ஐநா வளாக வாயிலில் நின்றுகொண்டார்.

ஆனால் தெளிவாக அவரை காணாமல் போனோரின் குடும்ப உறுப்பினர்கள் கண்டார்கள். அங்கே இருந்த ஆண்களும், பெண்களும், குழந்தைகளும், வயோதிபர்களும் ஆணையாளரை நோக்கி ஐநா வளாகத்திற்கு எதிர்புறத்தில் இருந்து ஐநா வளாகத்தை நோக்கி ஓடி வந்தார்கள்.

போலீசார் பாடுபட்டு அவர்களை தடுத்து நிறுத்தினார்கள். தங்களது உறவுகளை இழந்திருந்த அந்த அப்பாவிகளின் அழுகுரல் அன்றைய தினம் அங்கே வானை பிளந்தது.

ஐநா ஆணையாளரின் முகம் மிகவும் உணர்ச்சிவசப்பட்டிருந்தது. பெண்மணியான அவரின் கண்கள் கலங்கியதை தெளிவாக நான் பார்த்தேன்.

அதுதான் இலங்கையிலே அரச பயங்கரவாதத்தால் கடத்தப்பட்ட, கொல்லப்பட்ட அப்பாவிகளின் குடும்ப உறவுகளின் ஓலத்தை ஐநா மனித உரிமை ஆணையாளரின் கண்கள், காதுகள் ஊடாக உலகம் முதல் முதலாக நேரடியாக பார்த்த, நேரடியாக கேட்ட வேளை.

அதற்கு வழியேற்படுத்திக்கொடுத்தது எனது மனித உரிமை போராட்ட வாழ்விலே ஒரு முக்கியமான நடவடிக்கை என்று நான் அன்றே என் மனதில் எழுதி வைத்துக்கொண்டேன்.

இதன் பின்தான், இலங்கை அரசாங்கம் என்மீது கடும் சீற்றம் கொண்டு, அவதூறு பரப்பி, என்னை கைது செய்து, ஒழித்துக்கட்ட முயற்சிப்பதற்கு இந்த சம்பவமே பிரதான காரணமாக அமைந்தது.

இன்றைய யுத்தமில்லாத இயல்பு வாழ்க்கை காலத்தில் மேடை தோறும் ஏறி முழங்கும் பல "வீரர்களுக்கு" இந்த அனுபவமும் இல்லை. வரலாறும் தெரியாது.

அடுத்தநாள் காலையில், யாழ் பிஷப் இல்லத்தில், வடக்கின் மனித உரிமை செயற்பாட்டாளர்களையும்,



யாழ் ஆயரையும் சந்திப்பதற்கு மனித உரிமை ஆணையாளரின் நிகழ்ச்சி நிரலிலே ஏற்பாடாகியிருந்தது.

நானும், சிறிதுங்க, ப்ரியாணி மற்றும் இன்றைய நிகழ்ச்சிக்கு கொழும்பு வந்திருந்த சுரேஷ் ஆகியோர் அடுத்தநாள் காலை யாழ்ப்பாணம் செல்ல வானூர்தியொன்ற ஏற்பாடு செய்திருந்தோம்.

ஆனால் அந்த ஹெலிகப்டர் பறப்பதற்கான அனுமதியை அரசாங்கம் வாபஸ் வாங்கிவிட்டது. ஆணையாளருக்கு அரசாங்கம் விசேட வானூர்தியை ஏற்பாடு செய்திருந்தது. ப்ரோடோகால் காரணமாக அதில் நாங்கள் பயணிக்க முடியாது.

ஆகவே எம்மால் அடுத்த நாள் யாழ் செல்ல முடியாமல் போனது.

அடுத்தநாள் காலை யாழ்ப்பாணம் சென்று ஆயரையும், யாழ் சிவில் சமூகத்தையும் சந்தித்த ஐநா மனித உரிமை ஆணையாளர் மாலையில் கொழும்பு திரும்பி வந்து, தனது பயணத்தை முடித்துக்கொண்டு, கடும் அறிக்கையை விடுத்து விட்டு, இலங்கையில் இருந்து கிளம்பி சென்றார்.

# கனடிய மத்திய அரசின் 2023 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் மக்கள் நலன் சார்ந்த பல முதலீடுகள் அறிவிக்கப்பெற்றுள்ளன

## பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரியின் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கை



கனடிய மத்திய அரசின் 2023 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் மக்கள் நலன் சார்ந்த பல முதலீடுகள் அறிவிக்கப்பெற்றுள்ளன என ஸ்காபுறோ ரூஜ் பார்க் தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரி ஆனந்தசங்கரியின் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பெற்றுள்ளது.
அதன் விபரங்கள் பின்வருமாறு:

2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் கனேடியர்களுக்குப் பணவீக்க நிவாரணமாகப் புதிய, இலக்குவைத்த உதவிகளை அரசு அறிமுகம் செய்கிறது. பணவீக்கத்தை அதிகரிப்பதைத் தவிர்ப்பதற்காக இந்தப் புதிய உதவிகள் கவனத்துடன் உருவாக்கப்பட்டுள்ளன.
* புதிய மளிகைப் பொருள் மீளளிப்பு **(Grocery Rebate)** மூலம் குறைந்த வருமானமும், சுமாரான வருமானமும் கொண்ட,மற்றும் உதவி அதிகம் தேவைப்படும் 11 மில்லியன் கனேடியர்களுக்கும், குடும்பங்களுக்கும் பணவீக்க நிவாரணத்தை 2023 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டம் வழங்குகிறது. இரண்டு பிள்ளைகள் உள்ள குடும்பங்களுக்கு மேலும் 467 டொலர் வரையான கொடுப்பனவும், பிள்ளைகள் இல்லாத கனேடியர்களுக்கு மேலும் 234 டொலரும், முதியோருக்கு மேலும் 225 டொலரும் சராசரியாகக் கிடைக்கும்.
* தொலைபேசி ரோமிங் கட்டணங்கள், நிகழ்ச்சி மற்றும் இசைக்கச்சேரிக் கட்டணங்கள், பயணப்பொதிகளுக்கான மிக அதிகமான கட்டணங்கள், சரக்குகளுக்கான நியாயமற்ற கட்டணங்கள் போன்ற, மறைவான மேலதிக கட்டணங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுகிறது.
* குற்ற வட்டி வீதத்தைக் குறைப்பதற்குப் பரிந்துரை செய்வதன் மூலம், கொள்ளையடிக்கும் தன்மையான கடன்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுகிறது.
* சிறு வணிக நிறுவனங்களுக்கான கடன் அட்டை பயன்பாட்டுக் கட்டணத்தைக் குறைப்பதுடன், கனடாவின் மிகப்பெரும் வங்கிகள் கனேடியர்களுக்கு வழங்கும் வெகுமதிப் புள்ளிகளையும் பாதுகாக்கிறது.
* மேலும் அதிக எண்ணிக்கையான, வருமானம் குறைந்த கனேடியர்கள் வருமான வரிக் கணக்கைத் தாக்கல் செய்வதைத் தன்னியக்கப்படுத்துவதன் மூலம் அவர்கள் வருமான வரிக் கணக்கைச் சமர்ப்பிப்பதை இலகுபடுத்தி, அவர்கள் உரிய உதவிக் கொடுப்பனவுகளைப் பெறுவதை உறுதிப்படுத்தும்.
* உயர்கல்வி மாணவர்கள் கல்விச் செலவைச் சமாளித்து, அவர்களது எதிர்பார்ப்புகளை அடைவதற்கு உதவியாக கனடா மாணவர் மானியத்தையும் **(Canada Student Grants),** வட்டியில்லாத கனடா மாணவர் கடனின் **(Canada Student Loan)** வரையறையையும் அதிகரிப்பது.
* இளம் கனேடியர்கள் அவர்களது முதல் வீட்டைக் கொள்வனவு செய்வதற்கு உதவியாக **Tax-Free First Home Savings Account** என்ற புதிய கணக்கை 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் முதலாந் திகதி நடைமுறைக்குக் கொண்டுவருதல்.

மத்திய அரசு கனேடியர்களுக்கு உதவியாகவும், அவர்களது வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கும் 2015 ஆம் ஆண்டில் இருந்து கணிசமான முதலீடுகளை மேற்கொண்டுள்ளது. இவற்றில் பின்வருவன அடங்குகின்றன:
* குறைந்த வருமானம் உள்ள மற்றும் சுமாரான வருமானம் உள்ள சுமார் 11 மில்லியன் கனேடியர்களுக்கு பணவீக்கத்தைச் சமாளிக்க ஒரு கொடுப்பனவை வழங்குதல். இரண்டு பிள்ளைகள் உள்ள தம்பதியினருக்கு 467 டொலர் வரையிலும், பிள்ளைகள் இல்லாத தனிக் கனேடியர்களுக்கு 234 டொலர் வரையிலும் கிடைக்கும்.
* மேம்படுத்தப்பட்ட கனடா பணியாளர்கள் கொடுப்பனவு **(Canada Workers Benefit)** மூலமாக, இவ்வாண்டில் குடும்பங்களுக்கு 2,461 டொலர் வரையிலும், பிள்ளைகள் இல்லாத தனிக் கனேடியர்களுக்கு 1,428 டொலர் வரையிலும் கிடைக்கும்.
* தகுதியுள்ள குடும்பங்களைச் சேர்ந்த 12 வயதிற்கு உட்பட்ட பிள்ளைகளுக்குப் பல் மருத்துவ செலவினத்தை ஈடுசெய்வதற்காக இரண்டு வருட காலத்தில் 1,300 டொலர் வரையான, நேரடியான, வரி செலுத்தத் தேவையற்ற கொடுப்பனவு.
* வாடகைச் செலவினத்தால் சிரமப்படும் வருமானம் குறைந்தோருக்கு வரி செலுத்தத் தேவையற்ற 500 டொலர் கொடுப்பனவு.
* 75 வயதை அடைந்த முதியோருக்கான **Old Age Security (OAS)** கொடுப்பனவில் செய்யப்படும் பத்துச் சதவீத அதிகரிப்புக் காரணமாக, முழு ஒய்வூதியம் பெறுவோருக்கு முதல் வருடத்தில் மேலதிகமாக 800 டொலர் உதவி கிடைக்கும்.
* வரி செலுத்தத் தேவையற்ற கனடா சிறுவர் கொடுப்பனவு **(Canada Child Benefit)** வருடாந்தம் சுமார் 3.5 மில்லியன் குடும்பங்களுக்கு உதவுகிறது. இதன் மூலம் ஆறு வயதிற்கு உட்பட்ட ஒரு பிள்ளைக்கு 6,997 டொலர் வரையும், ஆறு வயது முதல் 17 வயது வரை 5,903 டொலர் வரையும் கிடைக்கும்.
* மாசுக்களுக்குச் சமஷ்டி மட்டத்தில் விலை விதித்து, காலநிலை மாற்றத்திற்கு எதிராகப் போராடும் அதேவேளை, கனேடியர்களின் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்கக் கூடியதாக்குதல். இது நடைமுறையில் இருக்கும் மாகாணங்களில் பத்தில் எட்டுக் கனேடியர்கள் அவர்களுக்கு ஏற்படும் செலவை விடவும் அதிகமான பணத்தை மீளப் பெறுவார்கள்.
* நடுத்தர வருமானம் உள்ள கனேடியர்கள் மீதான வரிகளைக் குறைக்கும் அதேவேளை, செல்வந்தர்களில் முதல் ஒரு சதவீதமானோர் மீது வரிகளை அதிகரித்தல்.
* நாடு தழுவிய இளமைக் கல்வி மற்றும் சிறுவர் பாராமரிப்புத் திட்டம். இந்தத் திட்டத்தின் கீழ் ஆறு மாகாணங்களும் பிராந்தியங்களும், எதிர்பார்க்கப்பட்டதற்கு மிகவும் முன்பாகவே, 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் 2 ஆந் திகதியளவில் நாளாந்தம் 10 டொலர் அல்லது அதனிலும் குறைந்த செலவில் சிறுவர் பராமரிப்பை வழங்கவுள்ளன. ஏனைய மாகாணங்களிலும், பிராந்தியங்களிலும் நாளாந்தம் 10 டொலருக்குச் சிறுவர் பராமரிப்பு என்ற இலக்கு 2026 ஆம் ஆண்டில் எட்டப்படும்.

இவற்றுக்கு மேலதிகமாக, கனடா சிறுவர் கொடுப்பனவு **(Canada Child Benefit),** கனடா ஓய்வூதிய திட்டம் **(Canada Pension Plan**), முதியோருக்கான **Old Age Security**, மற்றும் **Guaranteed Income Supplement** ஆகிய அனைத்தும் பணவீக்கத்துக்கு ஏற்றவாறாக அதிகரிக்கப்படும்.
சுகாதாரப் பராமரிப்பு:
கனேடியர்கள், அவர்களுக்கு உரித்துடைய பராமரிப்பைப் பெறுவதை உறுதிப்படுத்துவதற்காக எமது சுகாதாரப் பராமரிப்பு முறையைப் பலப்படுத்துவதற்காகத் தேவைப்படும் ஓர் அவசர முதலீட்டை 2023 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டம் செய்கிறது.
கனடாவில் உள்ள அனைவருக்குமான பொதுச் சுகாதாரப் பராமரிப்பு முறையைப் பலப்படுத்துவதற்காக 2023 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டம் 198.3 பில்லியன் டொலரை வழங்குகிறது. இது, தேங்கிப்போயுள்ள பணிகளைக் குறைப்பதற்கும், குடும்ப சுகாதார சேவையைப் பெறுவதை விரிவாக்குவதற்கும், கனேடியர்கள் எதிர்பார்ப்பதும், அவர்களுக்கு உரித்துடையதுமான உயர் தரத்திலான பராமரிப்பை உரிய நேரத்தில் பெறுவதை மாகாணங்களும் பிராந்தியங்களும் வழங்குவதை உறுதி செய்வதற்கும் பயன்படும்.
புதிய கனடா சுகாதாரப் பராமரிப்புக்கான கொடுப்பனவாக மாகாணங்களுக்கும், பிராந்தியங்களுக்கும் புதிதாக வழங்கப்படும் 46.2 பில்லியன் டொலர், ஒவ்வொரு
தினதும் பிராந்தியத்தினதும் தேவைக்கு ஏற்றவாறாக வடிவமைக்கப்பட்ட இருதரப்பு ஒப்பந்தங்கள் மூலமான உதவிகள், தனிநபர் உதவிப் பணியாளர்களுக்கான **(Personal Support Worker)** ஊதிய உதவி, மற்றும் ஒரு பிராந்திய சுகாதார முதலீட்டு நிதியம் ஆகியன இதில் அடங்குகின்றன.
இந்த நிதி, கனேடியர்களுக்குக் கிடைக்கும் சுகாதாரப் பராமரிப்பை மேம்படுத்தி, வளப்படுத்தப் பயன்படுத்தப்படுவதுடன், மாகாணங்களினதும், பிராந்தியங்களினதும் திட்டமிடப்பட்ட சுகாதாரப் பராமரிப்புச் செலவினத்துக்குப் பயன்படுத்தப்படலாகாது.
இவற்றுக்கு மேலதிகமாகச் சமஷ்டி அரசு, பழங்குடிகளின் சுகாதார முன்னுரிமைகளுக்கு, பழங்குடிப் பங்காளிகளுடன் இணைந்து செயற்பட்டுப் பத்து வருட காலப்பகுதிக்கு மேலதிகமாக 2 பில்லியன் டொலரை வழங்கும். இந்தப் பணம் பழங்குடிகள் சுகாதார சமத்துவ நிதியத்தின் ஊடாக, தேவைகளைப் பொறுத்துப் பகிரப்படும்.
பல் மருத்துவம்:
2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் தேவையுள்ள கனேடியர்களுக்குப் பல் மருத்துவம் வழங்குவதற்காக, மாற்றத்தை ஏற்படுத்தும் முதலீடாக, புதிய கனடா பல் மருத்துவ திட்டத்தைச் **(Canadian Dental Care Plan)** சமஷ்டி அரசு முன்னெடுக்கிறது.
கனடா பல் மருத்துவ திட்டத்தை **(Canadian Dental Care Plan)** நடைமுறைப்படுத்துவதற்காக 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில், 2023-24 முதல் ஐந்து வருட காலப்பகுதிக்கு 13 பில்லியன் டொலரை ஹெல்த் கனடாவுக்கு வழங்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ், காப்புறுதி அற்ற, 90,000 டொலரிலும் குறைவான வருடாந்த குடும்ப வருமானம் பெறும் கனேடியர்களுக்குப் பல் மருத்துவம் வழங்கப்படும். வருடாந்த குடும்ப வருமானம் 70,000
டொலரிலும் குறைவான கனேடியர்கள் பகுதிக் கொடுப்பனவைச் **(co-pay)** செய்யவேண்டிய தேவை இருக்காது. இந்தத் திட்டம் 2023 ஆம் ஆண்டின் இறுதியில் செயற்பட ஆரம்பிக்கும். மூன்றாந் தரப்பு சேவை வழங்குனரின் ஆதரவுடன், ஹெல்த் கனடாவால் இந்தத் திட்டம் நிர்வகிக்கப்படும்.
கனேடியர்கள் அவர்களுக்குத் தேவைப்படும் பல் மருத்துவத்தைப் பெறுவதை, எளிதில் சென்றடைய முடியாத பகுதிகளில் வசிப்பது, அல்லது குறைபாடு ஒன்றின் காரணமாக சிறப்புச் சிகிச்சை தேவைப்படுவது போன்ற செலவினம் தவிர்ந்த ஏனைய விடயங்களும் தடுக்கக் கூடும்.
2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில், வாய்ச் சுகாதார அணுகல் நிதியம் ஒன்றை அமைப்பதற்காக ஹெல்த் கனடாவுக்கு 2025-25 முதல் மூன்று ஆண்டுகளுக்கு 250 மில்லியன் டொலரும், அதன் பின்னர் 75 மில்லியன் டொலர் வீதமும் வழங்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. இந்த நிதியம், நலிவடைந்த மக்கள் குழுக்கள் மத்தியில் வாய்ச் சுகாதாரப் பராமரிப்பில் உள்ள இடைவெளிகளை நீக்குவதற்கும், கிராமப்புறங்களிலும், எளிதில் சென்றடைய முடியாத சமூகங்களில் வசிப்போர் உட்பட்டோர் சிகிச்சை பெறுவதற்கு நிலவும் தடைகளை நீக்குவதற்கும் குறிப்பான உதவிகளை வழங்குவதன் மூலம் கனடா பல் மருத்துவ திட்டத்திற்கு மேலதிக உதவியாக அமையும். கருக்கலைப்பு, மற்றும் ஏனைய பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதாரச் சேவைகளையும் பெறுதல்
பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதார நிதியத்தைப் புதுப்பிப்பதற்கு ஹெல்த் கனடாவுக்கு 2024-25 இல் இருந்து மூன்று வருட காலத்திற்கு 36 மில்லியன் டொலரை வழங்க 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. கருக்கலைப்பையும், ஏனைய பாலியல் மற்றும் இனப்பெருக்க சுகாதாரப் பராமரிப்புத் தொடர்பான தகவல்களையும், சேவைகளையும் பெறுவதை இந்த நிதியம் மேலும் எளிதாக்கும்.
குற்றங்களுக்கு எதிரான போராட்டமும் உயிர்களைக் காப்பதும்: ஓபியொய்ட் **(Opioid)** நெருக்கடிக்கு எதிரான நடவடிக்கை புதுப்பிக்கப்பட்ட போதைப் பொருட்கள் தொடர்பான கனேடிய மூலோபாயத்திற்கு **(Canadian Drugs and Substances Strategy)** ஆதரவளிப்பதற்காக 2023-24 முதலான ஐந்து வருட காலத்திற்கு 359.2 மில்லியன்
டொலரையும், தொடரும் கொடுப்பனவாக 5.7 மில்லியன் டொலரையும், எஞ்சிய கடனீட்டுச் செலவாக 1.3 மில்லியன் டொலரையும் வழங்குதற்கு 2023 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. கனேடியர்களின் உயிர்களைக் காத்து, அவர்களின் சுகாதாரத்தையும் பாதுகாப்பையும் உறுதி செய்வதற்கான அரசின் செயற்பாட்டுக்கு இது வழிகாட்டும். இந்த நிதி, சமூகங்களுக்கான உதவிகள், தடுப்புச் செயற்திட்டங்கள், மேற்பார்வையுடன் போதைப் பொருட்களைப் பயன்படுத்தும் நிலையங்கள் மற்றம் போதைப் பொருள் கடத்தலைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் போன்றவற்றுக்கும் பயன்படுத்தப்படும்.
தற்கொலை தடுப்புக்கான 988 தொலைபேசி இலக்கத்தைச் செயற்படுத்தல்
2023 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் 988 இலக்கத்தைச் செயற்படுத்துவதற்கு உதவியாக கனேடிய பொதுச் சுகாதார அமைப்புக்கு 2023-24 முதலான மூன்று ஆண்டுகளில் 158.4 மில்லியன் டொலர் வழங்கப்படும். 2023 நொவம்பர் 30 ஆந் திகதியின் பின்னர், கனேடியர்கள் 988 இலக்கத்திற்கு எந்த நேரமும் அழைப்பெடுத்தோ, குறுஞ்செய்தி அனுப்பியோ தரமானதும், செயற்திறனுள்ளதும், உடனடியானதுமான தற்கொலைத் தடுப்பு மற்றும் மனநல நெருக்கடிக்கான உதவிகளைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

# கிளிநொச்சியில், முன்னாள் போராளிகள் பலரை விசாரணை செய்த பயங்கரவாத தடுப்பு பிரிவினர்

**- சிவா பரமேஸ்வரன்**



**கி**ளிநொச்சி மாவட்டத்திலுள்ள முன்னாள் போராளிகள், சமூகநல செயற்பாட்டாளர்கள் உள்ளிட்டோர் பயங்கரவாத குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவினரால் தொடர்ந்தும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

கடந்த 2023.03.24 ஆம் திகதி நடைபெற்ற நாடாளுமன்ற அமர்வில் உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தைப் பதிவுசெய்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, விவேகானந்தநகர், கிளிநொச்சியைச் சேர்ந்த, புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளியான திரு. அமாவாசை மதிவண்ணன், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக் கிளைச் செயலாளரும், கனகபுரம் மாவீரர் பணிக்குழுவின் செயலாளருமான திரு. வீரவாகு விஜயகுமார், உருத்திரபுரம், கிளிநொச்சியைச் சேர்ந்த, கிளி/ புதுமுறிப்பு விக்னேஸ்வரா வித்தியாலயத்தின் அதிபர் திரு.தங்கவேலு கண்ணபிரான், இரத்தினபுரம், கிளிநொச்சியைச் சேர்ந்த புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளியான திரு.சிவப்பிரகாசம் ஜெயதீபன் ஆகியோரே அண்மைய நாட்களில் பரந்தனிலும், இரணைமடுவிலுமுள்ள TID அலுவலகங்களுக்கு அழைக்கப்பட்டு பலமணிநேர விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்திடம் கடனுதவி பெற்று, நாட்டின் பொருளாதாரத்தை நிமிர்த்த வேண்டியுள்ள நெருக்கடி நிலையிலும் தமிழர்கள் மீதான அடக்குமுறைகள் குறைந்தபாடில்லை. அதிலும் குறிப்பாக சமூகமயப்பட்டு வாழும் முன்னாள் போராளிகளும், தமிழ்த்தேசிய அரசியற் கட்சிகளின் செயற்பாட்டாளர்களும், சமூகநலப் பணிகளில் ஈடுபடுவோரும் இன்னமும் அச்சம் மிகுந்த சூழலிலேயே இந்த நாட்டில் தமது வாழ்வை வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளனர் என்றார்.

# கனடா-ஒன்ராறியோ மாகாண அரசின் 2023ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டமானது வலுவான ஒன்ராறியோவை நிச்சயம் உருவாக்கும்

## ஸ்காபரோ - றூஜ் பார்க் மாநில சட்டமன்ற உறுப்பினர் விஜய் தணிகாசலம் நம்

மார்ச் 23 அன்று, ஒன்ராறியோ அரசாங்கம் "வலுவான ஒன்ராறியோவை உருவாக்குதல்" எனும் அடிப்படையில் ஒன்ராறியோவின் 2023ஆம் ஆண்டுக்கான வரவுசெ-லவுத் திட்டத்தினை வெளியிட்டது. இத்திட்டமானது ஒன்ராறியோவில் உட்கட்டமைப்புகளை உருவாக்குதல், முக்கியமான முதலீடுகளை ஒன்ராறியோவை நோக்கி ஈர்த்தல், சேவைகளை மேம்படுத்துதல் போன்றவற்றின் மூலம் மாநிலத்தின் பொருளாதாரத்தை வளர்க்கும் நோக்கில் வெளியிட்டுள்ளது. இவ்வரவுசெலவுத் திட்டமானது ஒன்ராறியோ மக்களுக்கும் வணிகங்களுக்கும் முன்னுரிமைகளை வழங்கும்
அதேவேளையில், ஒன்ராறியோவின் பற்றாக்குறையை நீக்குவதற்கு வழியமைக்கும்.



ஒன்ராறியோ அரசாங்கமானது பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்கவும், வணிக செலவுகளைக் குறைக்கவும், முதலீடுகளை ஈர்க்கவும், எதிர்கால தேவைக்கான உட்கட்டுமான திட்டங்களை விரைவுபடுத்தவும் இத்திட்டத்தினை சமர்ப்பித்துள்ளது.

பொருளாதார வளர்ச்சி மற்றும் விரிவாக்கத்தை விரும்பும் உள்ளூர் உற்பத்தியாளர்களின் முதலீட்டுச் செலவுகளைக் குறைக்கும் நோக்கோடு ஒன்ராறியோ அரசாங்கம் உற்பத்தி முதலீட்டு வரிச் சலுகையை கொண்டுவந்துள்ளது.

எமது மாநிலத்திலுள்ள குடும்பங்களினதும் வணிக நிறுவனங்களினதும் நலன்கருதி நாம் அடுத்த 10 ஆண்டுகளில் சாலைகள், நெடுஞ்சாலைகள், பொதுப்போக்குவரத்து, மருத்துவமனைகள், பள்ளிகள், நீண்ட கால பராமரிப்பு இல்லங்கள் போன்றவற்றை அமைப்பதற்கென 180 பில்லியன் டொலர்களை ஒதுக்கியுள்ளோம்.
எமது தொழிலாளர்களுக்கு ஆதரவான நடவடிக்கைகளை எமது அரசாங்கம் எடுத்து வருகின்ற வழிகளாவன:
2023ஆம் ஆண்டிலிருந்து 100 இளங்கலைப் பட்டப்படிப்புக்கான இடங்களை சேர்க்கவும், ஒன்ராறியோவில் அல்லது வெளிநாடுகளில் பயிற்சி பெற்ற ஒன்ராறியோவின் குடியிருப்பாளர்களுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் 2024ஆம் ஆண்டிலிருந்து 154 முதுகலை மருத்துவப் பயிற்சி இடங்களையும் சேர்க்கவும் மேலதிகமாக 33 மில்லியன் டொலர்களை வழங்குகிறது. மாநிலத்தில் உள்ள மருத்துவக் கல்லூரிகளில் இளங்கலைப் படிப்புகளுக்கு ஒன்ராறியோவின் குடியிருப்பாளர்களுக்கு தொடர்ந்து முன்னுரிமை அளிக்கப்படும். இந்நிதி குறிப்பிடத்தக்க வகையில் ரொறன்ரோ பல்கலைக்கழகத்தின் ஸ்காபரோ வளாகத்தில் உள்ள ஸ்காபரோ ஒருங்கிணைந்த மருத்துவ சுகாதார கல்லூரிக்கு **(Scarborough Academy of Medicine and Integrated Health - SAMIH)** வழங்கப்படும்.

224 மில்லியன் டொலர்களை பயிற்சி மையங்களுக்கு ஒதுக்கியுள்ளதன் மூலம், தொழிற்பயிற்சிக்கூடங்களை விரிவுபடுத்தவும் அதிதிறன் வாய்ந்த தொழிலாளர்களுக்கான பயிற்சியை அளிக்க நிபுணத்துவம் வாய்ந்த தனியார்துறையை மேம்படுத்தவும் உதவியளிக்கப்படும்.

ஒன்ராறியோவில் குடியேற விண்ணப்பிப்போருக்கான திட்டத்துக்கு கூடுதலாக 25 மில்லியன் டொலர்களை ஒதுக்கும் திட்டம்: மாநிலம் முழுவதிலும் உள்ள முக்கிய உட்கட்டுமானத் திட்டங்களைக் கட்டியெழுப்ப உதவுவதற்காக திறமையான புதிய குடிவரவாளர்களை அடையாளங்கண்டு நாம் பெற்றுக்கொள்ளவுள்ளோம்.

எமது சமுகத்தில் வாழும் பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவியை வழங்குவதற்கு நாம் கடமைப்பட்டுள்ளோம். அந்த வகையில்:
உத்தரவாதமிக்க ஆண்டு வருமானத்தினை விரிவாக்கம் செய்வதன் மூலம், ஜூலை 2024 முதல், மேலும் 100,000 முதியவர்கள் சுட்டுகளில் அடிப்படையிலான மாதாந்த நிதியைப் பெறுவதற்குத் தகுதி பெறுவார்கள்.

வீடற்ற நிலையை இல்லாதொழித்தல் மற்றும் பழங்குடியினருக்கான வீட்டுத் திட்டங்களுக்கு 200 மில்லியன் டொலர்களை ஒதுக்குதல் மூலம் அதிக மக்களுக்கான பாதுகாப்பான வீடுகளை உருவாக்குவதை உறுதிசெய்யப்படும்.
அத்துடன், எமது அரசு வழங்கும் அத்தியாவசியமான சேவைகளை அனைவரும் பெற்றுக்கொள்வதற்கு மருந்தகங்களிலுள்ள மருந்தாளுநர்கள் பொதுவான நோய்களுக்கு பெரும்பாலான மருந்துகளை பரிந்துரைக்க அனுமதியளித்து, ஒன்ராறியோ சுகாதாரத்துறையை அனைவரும் இலகுவில் அணுகும் வழியை உறுதிசெய்யப்படும்.

நோயாளர்கள் அல்லது முதியவர் வீட்டுப் பராமரிப்பு, மனநலம், போதை அல்லது வேறு செயல்களுக்கு அடிமையானோர் நலன், குழந்தை மருத்துவம் போன்றவற்றிற்கு கூடுதல் நிதி வழங்குதல்.

குழந்தைகள் நல திட்டங்களிலிருந்து அடுத்த கட்டத்துக்கு நகரும் வயது வந்த இளையோர்களுக்கு அவர்களின் வாழ்க்கை மேம்பாட்டுக்கான நிதி நிலையை அவர்கள் உருவாக்குவதற்கு உதவும் விதத்தில் மூன்று ஆண்டுகளில் 170 மில்லியன் டொலர்கள் ஒதுக்கல்.
ஸ்காபரோ நிலக்கீழ் தொடரிவழித்தட விரிவாக்கம், ஸ்காபரோ சுகாதார கட்டமைப்பின் மேம்பாடு, ஸ்காபரோவில் முதன்முதலாக அமைக்கப்பட்டுள்ள மருத்துவப் பள்ளி போன்ற திட்டங்களின் மூலம் மேற்படி நிதியானது எங்கள் சமுகத்தில் பெரும் மாற்றங்களை உண்டுபண்ணுவதையிட்டு நான் பெருமை கொள்கிறேன்.

இங்ஙனம்
**விஜய் தணிகாசலம்**
மாநில சட்டமன்ற உறுப்பினர்
ஸ்காபரோ - றூஜ் பார்க்



கனடிய செய்திகள் Canadian News

## Bhairavi Jeyachandran's Keyboard Talent Show Presented by SIGARAM LEARNING CENTRE and it's Founder THESA KUGAN, in Scarborough

# சிகரம் இசைப் பயிற்சி நிறுவனம் நடத்திய செல்வி பைரவி ஜெயச்சந்திரன் அவர்களின் KEYBOARD TALENT SHOW நிகழ்வு









சிகரம் இசைப் பயிற்சி நிறுவனத்தின் நிறுவனரும் இசைக் கலைஞரும் இசைத்துறை குருவுமாகிய தேசா குகன் அவர்களின் மாணவி செல்வி. பைரவி ஜெயச்சந்திரன் அவர்களின் KEYBOARD TALENT SHOW நிகழ்வு கடந்த 25-03-2023 அன்று ஸ்காபுறோவில் அமைந்துள்ள தமிழிசைக் கலாமன்றத்தின் கலா மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்வின் பிரதம விருந்தினராக பவதாரணியின் பாரதி கலைக்கூடத்தின் நிறுவுனரும் இசை ஆசிரியரும் திரைப்பட நடிகருமான மதிவாசன் அவர்கள் அழைக்கப்பெற்றிருந்தார்.


மேலும் சில பிரமுகர்கள் சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்பட்டிருந்தனர்.

அன்றைய இசைத்திறன் சமர்ப்பண நிகழ்வின் இளம் கதாநாயகி செல்வி. பைரவி ஜெயச்சந்திரன் அவர்களின் தந்தை ஜெயச்சந்திரன் அவர்கள் பைரவி நுண்கலைக் கூடத்தின் நிறுவுனரும் குருவும் என்பதும் அத்துடன் இளம் கதாநாயகி பைரவி அவர்களுக்கு புல்லாங்குழல் இசை கற்பித்த செல்வி. தேசா குகன் அவர்களும் திரு. ஜெயச்சந்திரன் அவர்களுடைய பைரவி நுண்கலைக் கூடத்தின் முன்னாள் சிரேஸ்ட மாணவி என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஒரு முழுமையான இசை விழாவாகவும் கர்நாடக இசையும் மெல்லிசை அல்லது திரை இசை ஆகியன கலந்த ஒரு இனிமையான நிகழ்வாக அன்றைய KEYBOARD TALENT SHOW நிகழ்வு இடம்பெற்றதென்றால் அது மிகையாகாது.

சபையில் பல்வேறு துறைகள் சார்ந்த பிரமுகர்கள் இசைக் கலைஞர்கள் பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் மற்றும் வர்த்தகப் பிரமுகர்கள் என அமைத்து தரப்பினரும் கலந்து இரசித்த ஒரு அற்புத விழாவாக அன்றைய KEYBOARD TALENT SHOW நிகழ்வு இடம்பெற்றதென்பது வெளிப்படையாகத் தெரிந்தது.

# கனடாவில் இயங்கிவரும் "கந்தர்மடம் மக்கள் ஒன்றியம்" நிர்வாகத்தினர் நடத்திய வருடாந்த ஒன்றுகூடல்




கனடாவில் நீண்ட காலமாக சிறப்பாக இயங்கிவரும் "கந்தர்மடம் மக்கள் ஒன்றியம்" நிர்வாகத்தினர் நடத்திய வருடாந்த ஒன்றுகூடல். கடந்த 25ம் திகதி சனிக்கிழமையன்று மாலை ஸ்காபுறோ பாபா விழா மண்டபத்தில் நடைபெற்றது.

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட பல அன்பர்கள் தங்கள் குடும்பத்தினரோடும் நண்பர்களோடும் அங்கு கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தனர். கலை நிகழ்ச்சிகள் மற்றும் உரைகள் ஆகியன அங்கு இடம்பெற்றன. அவற்றில் ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும அன்பர்கள் பலர் பங்கெடுத்து பார்வையாளர்களை மகிழ்வித்தனர்.

தொடர்ந்து இடம்பெற்ற மெல்லிசை நிகழ்ச்சியில் பல அன்பர்கள் சிவா குழுவினரின் நேரடியான பின்னணி இசையில் பல பாடல்களைப் பாடி பார்வையாளர்களை மகிழ்வித்தனர்.




குறிப்பாக கந்தர்மடம் மக்கள் ஒன்றியத்தின் முன்னாள் தலைவர் வர்த்தகப் பிரமுகர் கேதா நடராஜா அவர்களும் இனிய பாடலைப் பாடி தனது ஊர் மக்களை உற்சாகப்படுத்தினார். தொடர்ந்து கேதா நடராஜாவிற்கு அங்கு சமூகமளித்திருந்த "இலங்கை முன்னாள் வர்த்தகர்கள் சங்கத்தின்" இயக்குனர் சபை உறுப்பினர்கள் அனைவரும் மேடைக்குச் சென்று பொன்னாடை அணிவித்து மகிழ்வித்தனர்.

தொடர்ந்து பல பாடல்களோடு இறுதிவரை ஒன்றுகூடல் நடைபெற்று இனிதே நிறைவுற்றது.

கலைஞர் சோம. சச்சிதானந்தன் பாடல் நிகழ்ச்சிகளை அழகாகத் தொகுத்து வழங்கினார். "உதயன்" லோகேந்திரலிங்கம் மற்றும் தனம் கனகரத்தினம். கண்ணன் உட்பட பலர் பாடகர்கள் பார்வையாளர்களை மகிழ்வித்தனர்.

## FRONTLINE COMMUNITY CENTRE in Scarborough presented a successful 2 day event to honor Covid-19 Heroes, at Markham Fairgrounds

# ஸ்காபுறோ நகரில் இயங்கிவரும் சேவை நிறுவனமான FRONTLINE COMMUNITY CENTRE நடத்திய இரண்டு நாள் வெற்றிகரமான விழா HONORING OUR HEROES



திருமதி. விஜயா குலா அவர்களை நிறைவேற்றுப் பணிப்பாளராகக் கொண்டு ஸ்காபுறோ நகரில் கடந்த எட்டு வருடங்களாக சிறப்பாக இயங்கிவரும் சேவை நிறுவனமான FRONTLINE COMMUNITY CENTRE நடத்திய இரண்டு நாள் வெற்றிகரமான விழா HONORING OUR HEROES, கடந்த சனி ஞாயிறு ஆகிய தினங்களான 25ம் 26ம் திகதிகளில் Markham Fairgrounds உள்ளக அரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

இரண்டு நாட்களும் காலை 10.00 மணி தொடக்கம் இரவு 10.00 மணிவரை நடைபெற்ற இந்த இரண்டு நாள் பெருவிழாவில் மத்திய பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாணப்பாராளுமன்ற உறுப்பினர்கள் நகரசபை உறுப்பினர்கள் மற்றும் பொலிஸ் திணைக்களத்தின் உயர் அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டு விழா ஏற்பாட்டாளர்களை வாழ்த்திச் சென்றனர்.

இரண்டு நாட்களும் வர்த்தகச் சாவடிகள் இயங்கிவர உணவங்களும் அங்கு நிறுவப்பட்டிருந்தன. அத்துடன் கலை நிகழ்ச்சிகளும் தென்னிந்தியாவிலிருந்து கலந்து கொண்ட பாடகர் வி.என். மகாலிங்கம் அவர்களோடு இணைந்து பாடல்களை வழங்கிய கனடியப் பாடக பாடகிகள் சபையோரை மகிழ்வித்தனர்.






# முப்பதாம் ஆண்டு நினைவகலா அஞ்சலி

மலர்வு:
10-04-1943

உதிர்வு:
03-04-1993



## திருமதி. இரத்தினம் அன்னம்மா (யோகம்)

அம்மா ஆண்டுகள் முப்பது ஆயிற்றா நீ மறைந்து!!

அன்பின் திருவுருவே அமைதியின் பெருவடிவே
பண்பின் சிகரமே எங்கள் பாசத்தின் உறைவிடமே
மண்ணிடை வந்துதித்த மரகதமே அம்மாவே ~ ஆண்டுகள்
முப்பது ஆயிற்ரா நீ மறைந்து ஆற முடியாது அழுகின்றோம் நாமின்றும்

ஏழு பிள்ளை நல்லதங்காளைப் போல் எங்கள் எழுவரைப் பெற்றெடுத்து
வாழ்கின்ற காலம் வரை வறுமையில்வாடி வதங்கி எமக்கு வாழ்வு தந்தவளே
காலமெல்லாம் கவலையோடும் கண்ணீரோடும் காலத்தைக் கடத்தி
பாலும் விதியோ பரமானவன் சதியோ இளம் வயதில் எமைவிட்டுப் பிரிந்தீர்கள்

கனிவான பேச்சு கண்ணியமான நடவடிக்கை உன்னிடம் எப்போதும் உறைந்திருக்கும்
பணிவான உன் நடத்தை பாசமான உன் போக்கு பலரையும் கவர்த்திழுக்கும்
தலைவியாய் நீ நின்று தைரியமாய் எமை வளர்த்து ஆளாக்கிய அன்புத் தாயே
இனியொரு பிறவி இருப்பது உண்மை என்றால் அடுத்த பிறவியிலும் எங்களுக்கு

அம்மாவாக நீதான் வேண்டும் தாயே ஐந்து பெண்பிள்ளைகள் இரண்டு ஆண் பிள்ளைகள்
ஏழு பிள்ளைகளை ஈன்றெடுத்து வறுமையில் வாடினாலும் வளமோடு நாம்
வாழ உன்னையே உருக்கி உலகிற்கு ஒளி தந்த தாயே வாழவேண்டிய வயதில்
வறுமையில் வாடி நித்தம் கந்தல் துணியாய் கசங்கி காலன் காய் போனவளே

ஆண்டுகள் முப்பதுஆயிற்ரா அம்மா நீ மறைந்து முப்பது என்ன நாம் வாழும் வரை
வீசும் காற்றும் வீழுகின்ற மழைத்துளியும் வாழுகின்ற காலம் வரை வாழ்த்திருப்பாய் நம்மோடு
ஒன்று மட்டும் உண்மையம்மா தரணியில் உன்னை தலை நிமிர்ந்து வாழவைக்க எண்ணியிருந்தோம்
எதுவுமே நடக்கவில்லை காலமெல்லாம் காவல் தெய்வமாய் எமை காத்தருள வேண்டுமம்மா!

**தங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம் அம்மா!**

இங்ஙனம்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
மற்றும் குடும்பத்தினர்...

# மரண அறிவித்தல்

பிறப்பு: 16 - 03 - 1938



இறப்பு: 24 - 03 - 2023

# திருமதி. திருச்செல்வம் நாகேஸ்வரி

(ஆசிரியர் - புளியங்கூடல் ஆரம்பப் பாடசாலை)

**யாழ். ஊர்காவற்துறை புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும், கனடா Mississauga வை வசிப்பிடமாகவும் கொண்ட திருச்செல்வம் நாகேஸ்வரி அவர்கள் 24-03-2023 வெள்ளிக்கிழமை அன்று கனடாவில் சிவபதம் அடைந்தார்.**

அன்னார் காலஞ்சென்ற துரையப்பா (Island Motors), பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா கண்ணகை தம்பதிகளின் அன்பு மருமகளும்,

காலஞ்சென்ற திருச்செல்வம் அவர்களின் அன்பு மனைவியும்,

காலஞ்சென்றவர்களான விசாலாட்சி, சரஸ்வதி, இராசலட்சுமி, பரமேஸ்வரி, பிரேமாவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், மாணிக்கவாசகர் அவர்களின் அன்பு அக்காவும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, நாகராஜா, இராசரத்தினம், பத்மநாதன், சபாரட்ணம், பார்வதி, ராசரத்தினம், நடராசா, நாகபூசணி ஆகியோரின் அன்பு மைத்துனியும், அமிர்தவள்ளி, வரதேஸ்வரி, செல்வராணி, காலஞ்சென்றவர்களான சிவசம்பு, பரமலிங்கம் ஆகியோரின் அருமைச் சகலியும்,

திருமகள் (Asiyan's Group of Companies), ஜெகதீஸ்வரன் (Aksya's Fashion), கலைமகள், பூமகள் (Varatha's Silk and Aisha's Silk), காலஞ்சென்ற ஜெயவரதன், நாமகள் (Gunaam's Super Market), சியாமளா (Varatha's Silk and Akaram Silk) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுரேஸ்குமார் (Asiyan's Group of Companies), பிரேமமலர் (Aksya's Fashion), மனோகர், சிவகுமார் (Varatha's Silk and Aisha's Silk), சிவயோகநாதன் (Gunaam's Super Market), கேதீஸ்வரன் (Varatha's Silk and Akaram Silk) ஆகியோரின் அன்பு மாமியாரும்,

சுயேன், செந்தா, சுயின், கிருஜன், கீர்த்திகன், அக்ஷயா, துசாந்தன், வைதேகி, தினேஸ், தனோஜன், சாருகன், பிரசான், ஐஸ்வர்யா, நிர்த்திகா, சிந்துயா, வருணிகா, பரதன், அகரன், சாஜிகரிஷா ஆகியோரின் அன்பு பேத்தியும், அஸ்ரேயன் அவர்களின் அன்புப் பூட்டியும் ஆவார்.

**அன்னாரின் பூதவுடல் *01-04-2023* சனிக்கிழமை மாலை *5* மணி முதல் இரவு *9* மணி வரையும் *02-04-2023* ஞாயிற்றுக்கிழமை காலை *8:00* மணி முதல் *9:00* மணி வரை** 8911 Woodbine Avenue, Markham, ON L3R 5G1 **இல் அமைந்துள்ள** Chapel Ridge Funeral Home & Cremation Centre **இல் பார்வைக்காக வைக்கப்பட்டு, அதை தொடர்ந்து காலை *9:00* மணிக்கு கிரியைகள் நடைபெற்று, பின்னர்** 12492 Woodbine Avenue, Gormley, ON L0H 1G0 **இல் அமைந்துள்ள** Highland Hills Funeral Home & Cemetery **இல் தகனம் செய்யப்படும்.**

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**

**தொடர்புகளுக்கு:**

| | | | |
|---|---|---|---|
| ஈசன் - மகன்: | (416) 996-8542 | புஸ்பா - மகள்: | (647) 667-0479 |
| ரஜனி - மகள்: | (416) 833-8963 | நளினி - மகள்: | (416) 738-9198 |
| கலா - மகள்: | (289) 380-1526 | சியாமலா - மகள்: | (647) 773-9996 |

# அகவை இரண்டானதே!

## ஜீவமலர் நவரத்தினம்

(சிரார்த்த திதி: பங்குனி அபர சஷ்டி)



தெருவெல்லாம் கோயில் கட்டிக் கோயில் நிறையச் சாமி வைத்தோம்
பரம்பொருளைக் கசிந்துருகி கால்கடுக்க பாடுகிடந்து கை தொழுதோம்
மனம் போன போக்கெல்லாம் வகைவகையாய் நேர்த்தி வைத்தோம்
அருளேதும் கிடைக்கலையே அம்மா நீ பிரிந்தாயே!

ஓலமும் ஒப்பாரியும் ஒருமித்துத் தரும் காலனைக் கலைத்திட
மயிலேறி அந்தச் சந்நிதி வேலன் கூட வரலல்லையே!
ஏலவே இரந்து கேட்டேன் தேவியவள் சிறிது காலம் வாழ்ந்திட
காலனைத் தடுத்திருத்தி சாமிகள் கண்மணியைக் காக்கலையே!

செல்லாத கோயில்லை கையெடுக்காத சாமியில்லை
ஜீவனுக்காய் நோற்காத நோன்பு நானறிய ஏதுமில்லை
கல்லாகச் சமைந்து நின்று கண்ணீரை நான் சொரிந்தேன்
அவசரமாய் அத்தன் மலர்பாதம் நாடிச் சென்ற மர்மமென்ன!

பல்வகைத் தொண்டுகளைப் பேரன் பேத்திகளோடு உனையெண்ணி
அல்லும் பகலும் அவனியிலே உயிர் பிரியும்வரை செய்திடுவேன்
நல்லவளே என் துணையே வையத்தில் வாழும்வரை உனை மறவேன்
குலவிளக்கே பசுமை நினைவுகளுடன் இருப்பேனுன் அரவணைப்பில்!

மலர்வு: 14-09-1956
உதிர்வு: 02-04-2021

துணைவன் நவரத்தினம்
02-04-2023

tasty தமிழா ™

# தமிழ் மண்ணிலிருந்து நேரடியாக உலகெங்கும்...



பனை வெல்லம்




தேன் நெல்லி
மரச்செக்கு எண்ணெய்கள்



சுக்கு மல்லி காபி தூள்
யாழ். கறித்தூள்

இலங்கை மற்றும் தென்னிந்திய மசாலா பொருட்கள் பாரம்பரிய உணவு வகைகள்..

கனடாவில்
Tasty தமிழா தயாரிப்புகள் இங்கு கிடைக்கும்..

MAHAANS PICK & PRESS OIL MILL INC
Organic Bulk Store & Water Filling Station
5635 Finch Ave East,
Unit 5, Scarborough M1B 5K9.

Call:
416 293 4010

MAHAANS
PICK & PRESS OIL MILL INC

(11 பக்கத் தொடர்ச்சி)

## ரணிலைப்போன்று மக்களையும் மேற்குலகம் மூளை சலவை செய்யுமா?

- மீண்டும் பிச்சைபாத்திரம்?

இதில் அரசு தவறினால், அதலபாதாளத்தில் வீழ்ந்துள்ள நாடு நழுவி மீண்டும் பிச்சைபாத்திரத்தில் விழ வேண்டியிருக்கும்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க மேற்குலகை வெல்லலாம். ஆனால் தென்னிலங்கை மக்களின் மனங்களை வெல்வதற்கு நீண்ட தூரம் பயணித்தாக வேண்டும்.

இந்த ஒரு பின்னணியிலேயே தென்னிலங்கையின் மாற்றத்தை நோக்கிய அணியினர் வடக்குக் கிழக்கு நோக்கி திரும்பியுள்ளனர்.

தென்னிலங்கையின் "சிஸ்டம் சேன்ஜ்" ஆட்சி மாற்றம் என்பன தமிழ் மக்களின் குறிப்பாக சிறுபான்மை மக்களின் அரசியல் அபிலாஷைகளுக்கு வழி சமைப்பதாக அமையாது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் தமிழ் மக்களின் மனங்களை வெல்வது சாத்தியமற்றதே. ஏனெனில் சந்திரிகா அம்மையார் காலத்தில் அம்மையார் கொண்டுவந்த தீர்வுப் பொதியை எரித்து சாம்பலாக்கினார். அந்தச் சாம்பலுடன் தமிழ் மக்களுடன் அவர் கட்டி எழுப்ப நினைத்த நம்பிக்கையும் சாம்பலாகிவிட்டது. அண்மையில் இலங்கையின் சுதந்திர தினத்தின் 75வது கொண்டாட்டத்துடன் இனவிவகாரத்துக்கான தீர்வு காணப்படும் என்று கூறியதும் சுதந்திர தின கொண்டாட்டத்துடன் கரைந்துபோயிற்று. தற்போது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனது ஹவாட் பல்கலைக்கழக உரையின்போதும் இனவிவகாரத்துக்கான தீர்வுகுறித்து சர்வதேச சமூகத்திற்கு எடுத்துரைத்துள்ளார். ரணில் விக்ரமசிங்கவைப் பொருத்து அவருக்குத் தெரியும் சர்வதேச சக்திகளின் குறிப்பாக அமெரிக்காவின் தேவைகளை நிறையவே நிறைவேற்றிவிட்டார். ரணில் விக்ரமசிங்கவின் இந்தக் காய் நகர்த்தல்கள் தற்போதைக்கு தமிழர் விவகாரம்குறித்து மேற்குலக சக்திகள் அடக்கி வாசிக்கும் நிலையை உருவாக்கியுள்ளன.

தற்போதும் தோற்றவர்கள் தமிழ் மக்களே!.

Email : vathevaraj@gmail.com
28th March 2023

## சுவாமி விபுலானந்தர் (நிலைமண்டில ஆசிரியப்பா)

மட்டுநகர் மண்ணின் காரைமயில் வாகனன்
இட்டமுடன் இணைந்து வாழ்ந்த கண்ணம்மா
சாமித்தம் பியினர் சிசுவாக அவதரித்தார்.
சாமர்த்திய மகனாக தரணியில் திகழ்ந்தார்.
கட்டுக் கோப்பாக கல்வியைக் கற்றுமே!
எட்டுத் திக்கும் ஏற்றமுற வாழ்ந்தார்
கல்முனை மெதடிஸ் கல்லூரியில் ஆரம்பக்
கல்வியைக் கருத்துடன் கற்றுக் கொண்டபின்
கொழும்பு தொழில்நுட்பக் கல்லூரியில் இணைந்து
வழுவிலா விஞ்ஞானக் கல்வி கற்றே
அறிவியலில் பட்டம் பெற்று அறிஞனானார்.
அறிவைப் புகட்டும் பணியான ஆசிரியராய்
மட்டுநகர் மைக்கேல் கல்லூரியில் பணியேற்று
பட்சமுடன் ஒருதமிழ் ஆசிரியராகப் பணிசெய்தார்
மதுரைத் தமிழ்ச்சங்கம் பண்டிதராய் வளர்த்தது
இதனைப் பெற்றமுதல் இலங்கையர் இவராவார்.
யாழ்ப்பாணம் யோகர் சுவாமியின் பழக்கம்
யாழ்நூல் யாத்த மயில்வாகன மாணவன்
விபுலானந்த மானாரே விண்ணவர் வாழ்த்திட
பவிசாக பண்போடு பார்புகழ வாழ்ந்த
முத்தமிழ் வித்தகர் சுவாமிவிபு லானந்தர்
முத்தாக எமக்கு வாய்த்த சொத்தாகும்
ஆசிரியராய் அறிஞனாய் ஆராய்ச்சி ஆளராக
காசினி போற்றும் கனவானாய் வாழ்ந்தாரே!

தோற்றம்: 27. 03. 1892 மறைவு: 19. 07. 1947

ஆக்கம்... கவிஞர் மார்க்கம் சந்திரன் (416) 844-7453

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS
CR PLAN

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills


வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?
நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?
நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?
உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?
நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.
நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.
நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.
நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்
நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.
நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.
தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

# யார் தவறு??

- பானு சுதாஹரன்

இடைவெளிகளில் நுழைந்தெழுந்து, இடைமறிப்போரை இழுத்தெறிந்து, சங்கீதக்கதிரையில் சாதுரியமாக சட்டென்று அமர்ந்து விட்டால், தாம் வெற்றியாளர், விவேகவீரர் என்றெண்ணுகின்ற குறுகிய மனப்பாங்குகளின் குவியலினுள் நம்முலகு!

கடந்த பெப்பிரவரி 14 அன்றிரவு, இலங்கையின் "வெலிப்பென்ன" பகுதியில், மூன்று 16 வயது பாடசாலைப் பையன்கள் சேர்ந்து, நல்ல வார்த்தை கூறவந்த, (ஒரு குழந்தைக்குத் தந்தையான), 34 வயதுடைய பெரியவரை "தலைக்கவச"த்தினால் தாக்கி படுகொலை செய்த சம்பவமானது, "பெரியவர்கள் சமூக"த்தை ஒருவித பதற்றமான சூழலில் பீதியுடன் வாழும் நிலைக்குத் தள்ளிவிட்டுள்ளதோடு, தொடர்ந்தும் ஆங்காங்கே தலைக்கவசங்கள் தலைதூக்க முயல்கின்ற கலாச்சாரமொன்று, நீறு பூத்தாலும் நூர்ந்து போகாத நெருக்கடியுணர்வொன்றுடனேயே வாழ, பெரியவர்களை நிர்ப்பந்தித்துள்ளது!

எப்படி நெருக்காமல் போகும்? சிறுவர்கள் என்றெண்ணி ஒரு நல்ல வார்த்தை சொல்லப்போக முடியாத காலமாகி விட்டது! ஆனால் அந்த சம்பவத்தின் படுகொலை, அறிவுரை செய்ய வந்ததன் விளைவு அல்ல் அதாவது தூண்டப்பட்டதன் விளைவு அல்ல் முன்கூட்டியே திட்டமிடப்பட்டிருந்த "படுகொலை" என இலங்கைப் பத்திரிகைகள் குறிப்பிட்டிருந்தன. அதிர்ச்சி தருகின்றது? 16 வயதிலா இது?!

"எங்கள் காலத்தில், பையன்கள் பெரியவர்களைக் கண்டாலே ஓரமாக ஒதுங்கி மரியாதை செய்வர் லுங்கி மேலே மடிந்திருந்தால், நீளமாக்கி நிமிர்ந்து நிற்பர், முடி சற்றே கலைந்திருந்தால், முன்னால் மெதுவாய் மூடி விடுவர். எப்படியெல்லாம் இருந்த காலம். இப்போ இளையோர்கள் தறிகெட்டு தமை மறந்து வழி கெட்டு வாழ்க்கை தொலைந்து... அப்பப்பா என்ன கலிகாலம் சாமீ...!" என "பெரியோர் சமூகம்" சலித்துக்கொள்கின்ற முடிவிலி இது.

அவ்வாறெனின், எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே ஆனால் அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே மட்டும் என, ஒட்டுமொத்த பொறுப்புக்களையும் அன்னைமேல் போட்டு, ஏனைய அனைத்து தரப்பினரும் தப்பித்துக் கொள்வதற்காகத் தான், ஒரு நாட்டில், பாடசாலைகள், சமூக நிறுவனங்கள், சிறுவர் பராமரிப்பு உத்தியோகஸ்தர்கள், முன்பள்ளி அபிவிருத்தி உத்தியோகஸ்தர்கள், சிறுவர் மேம்பாட்டு உத்தியோகஸ்தர்கள், உளவளத்துறை உத்தியோகஸ்தர்கள், இளைஞர் விவகார அமைச்சு, சிறுவர் (மற்றும் பெண்கள்) விவகார அமைச்சு மற்றும் இவை யாவற்றுக்கும் மேலால், இவையனைத்தையும் பெருமையுடன் நிர்வகித்து வருகின்ற அரசாங்கம், அதற்கொரு தலைவர் என்றெல்லாம் நியமிக்கப்பட்டுள்ளனரா?!

குழந்தையின் வளர்ப்பினில் அதன் தாய்க்கு அதிக பங்களிப்பு உள்ளது என்பது எந்த அளவுக்கு உறுதியான உண்மையாகுமோ, அதே அளவுக்கு மேற்கூறப்பட்ட ஏனைய அனைத்து தரப்பினர்களுக்கும் கூட, பங்கு உள்ளது என்பதும் உறுதியே தான்!

இலங்கை, யாழ்ப்பாணத்தின் ஆண்கள் பாடசாலை ஒன்றின் மாணவனொருவன் அண்மையில் தற்கொலை முயற்சியில் ஈடுபடத் துணிந்துள்ளார். அவன் கல்வியில் திறமை பெற்றவன் ஆற்றுப்படுத்தலுக்கான அவசியம் கொண்டவனாயிருக்கையில், ஏன் இந்த இறுக்கம் அவனுக்கு என ஆராய்கையில், பலவந்தமாக தன்னினச்சேர்க்கையில் ஈடுபடுத்தப்பட்டிருக்கலாமென சந்தேகக்கப்படுவதாய் ஆரம்ப கட்ட விசாரணைகள் கூறுகின்றன எனவும் போதைக்கு அடிமையாயிருக்கலாமென அனுமானிக்கப்படுன்றதெனவும் கடந்த வாரங்களில் இலங்கையின் பத்திரிகையொன்று கூறியது.

பாடசாலைகளிலும் "உளவள" ஆசிரியர்கள் உள்ளார்களே! மாணவர்களின் ஒவ்வொரு அசைவுகளும், இவர்களின் பார்வைகளிலும், கணிப்புக்களிலுமிருந்து தொலைதூரத்தில் மறைந்து போவதற்குக் காரணமென்ன?!

ஒன்று, இரண்டு நாட்களில் ஏற்படுகின்றதொரு மனநிலை அல்லவே தற்கொலையே முடிவு என்ற துணிவு! ஒவ்வொரு இளைஞரின் அன்றாட நகர்வுகள், அவனது பெற்றோர்கள், ஆசிரியர்கள், அரச சமூக மேம்பாட்டு செயற்பாட்டாளர்களின் "அறிந்திருத்தல களுக்குட்பட்டிருத்தல்" இன்றியமையாதது என்பது ஏன் அவர்களால் உணரப்படாமலுள்ளது??

"புறக்காரணிகளின் பாதிப்பு" என்பது, இளைஞர் தமது உயிரை மாய்க்க முடிவெடுக்கும்வரை தொடர்ச்சியாகத் தாக்கி வதைத்துக்கொண்டிருப்பது அவதானிப்புகளில் அகப்படாத "தொலைதூரத்திலிருக்கின்றமை" என்பது, மேற்படி தரப்பினர்களின் அவதானிப்புகள் வேறெங்கே மூழ்கடிக்கப்பட்டிருக்கின்றன?? என்ற பாரியதொரு வினாவை எழுப்புவதும், வினவப்படாடாமலிருப்பதுமான "ஆபத்தான சமிக்ஞைகள்", சமூகத்தில் இளைஞர் வாழ்விற்கு "சாவு மணி"யாய் அடிக்கின்ற போதும் கூட, மேலுள்ள தரப்பினரின் துரித அவதானிப்புகளுக்கும், செயற்பாடுகளுக்கும் அவை வழிவகுக்காமலிருப்பதும், பிரதேசமாட்டங்களில் அரச நிர்வாக செயற்பாட்டாளர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகளின் ஆளுமைகளும், ஆளுகைகளும் எவ்வெவற்றுடன் மட்டுப்படுகின்றன?? என்பதும், தீவிர வினாப்படுத்தல்களுக்குரியவைகளாகின்றன வே!!

இரவும் பகலும் உணர்வுகளால் நிறுத்தி, இளைஞரைத் தம் இறக்கையுள் இருத்தி, நடவடிக்கைகளில் நம்பிக்கையைப் பொருத்தி, தளர்கையில் தைரியத்தை செலுத்தி, அன்பே அனைத்தும் பண்பே உயர்த்தும் என, தலைவராய் வாழும் தகைமை பெற, தரப்படுத்தி நிரல்படுத்தி வளப்படுத்தி வாழவைக்கும் பொறுப்பினை உணர்ந்து செயலாற்றுவதற்கு மேலும் என்னென்ன வேண்டும் என எதிர்பார்க்கிறார்கள் மேற்படி அனைத்து தரப்பினரும்?!?!



துடித்துத் தூள்கிளப்ப, தடைகளைத் தகர்த்துத் தாண்டி, நினைத்தவற்றை நினைத்தவாறே பற்றிவிடத் தவிக்கின்ற "பருவ வயது" என்பது, புலன்களில் புதியனவாய்ப் புகுவனவற்றிலெல்லாம் தம்மை ஈடுபடுத்தி இணைந்து செயல்பட ஆர்வம் கொள்கின்ற "காலப்பகுதி" என்பது உளவியல் நிபுணர்கள் மட்டுமே அறிந்திருப்பதொன்றல்ல. அடிப்படையறிவும், பகுத்தறிவும் கொண்ட எந்தவொரு மானுடரும் தெரிந்து புரிகின்றதொரு சாதாரண விடயம் தான் அது!

அந்த வகையில், ஒரு குழந்தை பிறந்துவிட்டால், அது வளர்ந்து, பருவங்களை ஒவ்வொன்றாகக் கடக்கின்ற காலகட்டங்களில், அது காண்பவை, கேட்பவை, அறிபவை, தெரிபவை எல்லாமே அந்தக்குழந்தையின் ஒவ்வொரு ஒவ்வொரு சிந்தனை மற்றும் செயற்பாடுகளை நிர்ணயிக்கின்றன என்பதை நாம் ஒத்துக்கொண்டு தானே ஆகவேண்டும்!

பெற்றோர் தமது குழந்தையின் ஒவ்வொரு கணங்களையும் கட்டமைத்துக்கொடுப்பதில் முக்கிய பங்காற்ற வேண்டும் என்பது போல், தொடர்புள்ள ஒவ்வொரு தரப்பினரும் தமக்குரிய பெரும்பொறுப்பைப் பெற்றுக்கொண்டு தானே ஆகவேண்டும்.

அர்ப்பணிப்புடன் ஆசிரியர்களும் சிறுவர்களின் சிறப்பான வாழ்விற்கான உளநல உடல்நல அக்கறையுடன் சிறுவர் பராமரிப்பு மற்றும் மேம்பாட்டு உத்தியோகஸ்தர்களும், சமூக நிறுவனங்களும் மேலும், சிறுவரும் இளையோரும் சிக்கிச்சிதறிச்சிதைந்தழிந்தாலும், வளம் தரும் வர்த்தகமே வாழ்வு தரும் என, வலையமைப்புகளை விசிவிரிக்கின்ற அற்பத்தனத்தை நீக்கி, அதே தொழிநுட்பத்தை இளையோரும் மாண்புற்று தாமும் தனம்பெற்று வாழும் யுக்தியறிகின்ற வர்த்தக வர்க்கங்களும் அவற்றுக்கு ஆதரவளித்து வரவேற்கின்ற அரசாங்கமும் தொழிநுட்பங்கள் விவேகங்களை விருத்தி செய்வதற்கேயன்றி வீழ்ந்து போவதற்கல்ல என்பதை குழந்தைகளுக்கு வலியுறுத்தி வாழவைக்கின்ற பெற்றோர்களும் நாட்டில் பயங்கரவாதத்தை ஒழித்து வெற்றிக்கொடி கட்டினார்களாம், கேவலம் போதை வஸ்துக்களைக் கட்டுப்படுத்த முடியவில்லையாம் என்று நாடகமாடாத அரசும் அரசின் காவல்துறையினரும் என்பவர்களெல்லோரும் அமைந்து விடும்போது, ஒரு குலக்கொழுந்து, தன் வாழ்வில் கொடிகட்டிப் பறப்பதை எவரால் தடுத்துநிறுத்திவிட முடியும்??!

இளைஞரை வழிநடத்தும் சேவைப் பொறுப்புடையோரில் ஆகக்கூடியது சுமார் 50மு வீதத்தினர் தவிர்ந்த ஏனையோரின் (அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின்) "இருக்கைகள்" அர்த்தமின்றிய சம்பளம் பெறுவனவே.

"கடலாய், மலையாய், காற்றாய், மழையாய்.. முன்னால், முன்னால், முன்னால், முன்னால் வாடா.. உன்னால் முடியும் உன்னால் முடியும் தோழா.. எங்கள் வேர்வைக்கு வெற்றிகள் வேர்வைக்குமே நம்மை உள்ளத்தில் ஊர் வைக்குமே ...!" என்றெலாம் கனவுகளின் காட்டாறாய் வல்லவராய் வானுயர்ந்து மெல்லவொரு "மேரு" செய்து கள்ளமிலா வாழ்வுதனை சொல்லினிக்க வாழ்ந்து விடத்துடிக்கும் இளையோர்க்கு, வாழ வழிசெய்து கொடுப்பது, தொடர்புள்ள அனைத்து தரப்பினரதும் தவிர்க்க முடியாத பொறுப்பு என்ற உயிராய உறுதிப்பாட்டினை உயரத்தே பறக்க விடுவதில் "சாதாரண"த்தைக் காண்கின்ற "இளைஞர் பாதுகாவலர்கள்", உரிமைகளுக்கு உத்தரவாதமற்ற, உண்மையற்ற வாழ்வினுள் தள்ளி விட்டு இளைஞர் சமுதாயத்தை இழிவு படுத்துவது இன்று நேற்று நடப்பதொன்றல்ல!

அது ஒரு சாபக்கேடெனில், ஈர்ப்புள்ள ஏதோ ஒரு துறையில் இளைஞர் ஈடுபட விரும்பும்போதெல்லாம் "இல்லை, இல்லை" என்பதே பதிலாகின்றது இக்காலத்தில்!

பொதுவாக இளைஞர் விளையாட்டுத்துறையை நாடினால், விளையாட்டுப்பொருட்களின் எட்ட முடியாத விலையதிகரிப்பு! விளையாட்டுக்காக பயன்படுத்தப்படுகின்ற சாதாரணமாக ரூ.1,500/- பெறுமதி கொள்ளும் சப்பாத்துக்கள் தற்போது ரூ.4000/- க்கு மேல் விற்கப்பட, இலங்கை அரசின் அண்மைக்கால "பொருளாதார மறுசீரமைப்பு" நிர்ப்பந்தித்துள்ளது! இவ்வகையிலேயே ஒவ்வொன்றும் ஒவ்வொன்றும் ஓராயிரம் அழுத்தங்கள்!

கல்வியை நாடினால், கடந்த வரவு செலவுத்திட்டத்தின் ஒரு "சிறப்புப்பகுதி"யான, பாடசாலை உபகரணங்களின் அதீத விலையதிகரிப்பானது, சாதாரணமாக ஒரு உயர்தரமாணவனின்/மாணவியின் கற்கைகளுக்கு மாதமொன்றிற்கு குறைந்தது ரூ.20,000/- வரை அறவிடுகின்றது! அதிலும் கூட அலையலையாய் அதிருப்திகள்!

வேண்டாமே, தொழிநுட்ப பயிற்சி பெற்று தொழிலொன்றை முயற்சிப்போம் என்று முடிவெடுத்தால், அவற்றுக்கான செலவினங்களும் தொழில் முதலீடுகளுமானவை, "அசைக்கமுடியாத அசாத்தியங்க"ளாகியுள்ள நிலை!

ஆகக்குறைந்தது, ஆரோக்கியம் தரும் அறுசுவை உணவைக்கூட எத்தனை பெற்றோர்களால் பெற்றுக்கொடுக்க முடிகின்றது தம் குழந்தைகளுக்கு என்பதனை அழுகுரல்களின் அதிர்வுகள் நமக்கு அன்றாடம் கூறிவருகின்றன!

எனில், இளைஞர் தமது பெறுமதியுள்ள வாழ்வை வரையறுத்துக்கொண்டே வாழ்வதற்கு பலாத்காரமாக நிர்ப்பந்திக்கப்படுவதன் விளைவுகளும் அவர்கள் வாழத்தகாத வாழ்வொன்றில் வீழ்த்தப்படுவதும், கடந்த மற்றும் தற்போதைய அரச தலைமைத்துவங்களின் "முறையற்ற பொருளாதாரக் கொள்கைகளும், சீர்குலைப்புகளும்" என்பதும் பாரியளவில் தாக்கத்தை ஏற்படுத்துவது நிராகரிக்க முடியாததாகின்றது.

குழந்தை இல்லாத வீட்டில் கிழவன் துள்ளி விளையாடுவது போல், நாட்டின் தலைமைத்துவம், ஜனங்களின் "நாயக"த்தை நகர்த்தி, அவர்களின் "வாழ்வுரிமை"யை, தான் கொண்ட தனிவழியே உடைத்துத் துளைத்துத் துகள் தெறிக்கத் தூர்த்தெறியும் போது, நாட்டின் இரும்புத் தூண்களாக இளைஞர்கள் மட்டும் உருவாகவேண்டும் என்ற எதிர்பார்ப்பு என்னவொரு வில்லத்தனம்??!

பானையில் நிறைந்திருந்ததையெல்லாம் பகற்கொள்ளைக்காரர் பறித்தெடுத்ததை பார்க்க கேட்க பலமில்லாமல் அதையெல்லாம் "பணயம்" வைத்துப் பதவி கொண்ட "பல்லக்கு யானை", IMF ("சர்வதேச நாணய நித்திய"த்தி)ன் "வரி" அமுலாக்க நிபந்தனைகளைக் கனகச்சிதமாய்க் கையாளத்தெரிந்தும், ஊழல் விசாரணைகளுக்கும், ஊழல் தடுப்பு திட்டங்களை அமுல்படுத்துவதற்கும் நேரமின்றிய "நரி விளையா"ட்டில், நாட்டிலுள்ள இளைஞர்களுடன் "பொருளாதார மீள்கட்டமைப்பும், பொருளாதார அபிவிருத்தியும்" கலந்துரையாடல் ஒரு கேடு! இது ஒற்றையாட்சியல்ல, ஒளிந்திருக்கும் ஓரவஞ்சனையாளருடன் கூட்டாட்சி!

IMF/EFF கடன்பொதி (முதல் பகுதி US $330 மில்லியன்) கிடைக்கப்பெற்றதில் அதிகூடிய பங்களிப்பு செய்தது ஜனாதிபதியின் திறமையா? ஜனங்களின் தாங்கொகொணாத தியாகமா?!

ஊழல் விசாரணைகளை உத்தியோகபூர்வமாக மேற்கொண்டு கொள்ளையடித்தவர்கள் கொண்டுபோனதில் கொஞ்சத்தையேனும் கொண்டு வந்து சேர்த்திருந்தால், கொளுத்திப்போட்ட வெடிகள் நம்மைக் கொண்டாடத் தூண்டியிருக்கும்.

"கடன் வாங்கி வாழ்வாரே வாழ்வார் அஹ்திலார் விடந்தாங்கி வேறுவார்" என்றவாறான கருத்துக்களே இளைஞர் சிந்தையில் அரசினால் விசிறப்படும் வீணான விதைகளாகும்!

"Change it or leave it!"என்பது சிறார்களும் சொல்லிச்செய்யும் கொள்கையாகும். சிக்கல்களை சீர் செய்து சரி செய்தல் வேண்டும் இல்லையேல் விலக வேண்டும்!

இலங்கை வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் துணைச்செயலர், மருத்துவர் (Dr) வாசன் ரத்தினசிங்கம் கடந்த வாரங்களில் தெரிவித்திருந்தவை:

(தொடர்ச்சி 21 பக்கம்)

உங்கள் வீட்டை புதுப்பிக்க வேண்டுமா?

Coverall Group Inc

Painting
Bathrooms
Kitchens
Decks
Flooring
Basements
Pot lights
Accent Walls

Contact us | 416.706.8160

## நீ உயரவேண்டுமா? சோதனைகளை அனுபவிக்கவேண்டும்

**(சக்தி ஞானம்மாவின் ஆன்மீகச் சிந்தனையிலிருந்து)**

---

இரக்கம் உள்ள இதயம். சிந்தனை ஆற்றல் படைத்த மூளை வேலை, செய்யும் கைகள் ஆகயவை அனைவருக்கும் தேவை.

உண்மை அல்லாதவற்றில் மிகவும் எச்சரிக்கையாக இருப்பதுடன் உண்மையில் பிடிப்புள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். இதைக் கடைப்பிடிப்பவர்கள் வெற்றி பெறுவது உறுதி.

உலகம் கோழைக்ளுக்காக ஏற்பட்டதல்ல. இங்கிருந்து தப்பி ஓட முயற்சி செய்தீர்கள். செய்யும் செயலில் வெற்றியோ. தோல்வியோ கவலைப்பட்டுக்கொண்டிருக்ககூடாது. தொடர்ந்து பணி செய்ய வேண்டும்.

மனிதன் எந்த அளவுக்கு உயர்ந்நிருக்கின்றானோ, அந்த அளவுக்கு அவன் கடுமையான சோதனைகளை கடந்துதான் ஆக வேண்டும்.

ஒவ்வொரு ஆன்மாவிலும் தெய்வீக சக்தி ஒளித்து கிடக்கின்றது. இதை வெளிக்கொண்டு வருவதே நம் வாழ்க்கையின் லட்சியம். இதற்காக புறவாழ்க்கையிலும், அகவாழ்க்கையிலும் கட்டுப்பாடுடன் நடக்க வேண்டும்.

கடவுளின் குழந்தையாகிய மனிதர்களுக்குத் தொண்டு செய்வது ஆண்டவனுக்கு செய்யும் தொண்டாகும்.




*(20 பக்கத் தொடர்ச்சி)*

# யார் தவறு??

*"சாதாரண வைத்தியர் ஒருவர் PAYE வரி செலுத்தும் போது, வருடமொன்றில் பன்னிரண்டு மாதம் பணி செய்தும், பத்துமாத சம்பளமே பெறுகின்றார்"*

*"அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் (Medical Association) கணக்கெடுப்பினடிப்படையில், மாதமொன்றுக்கு 50 முதல் 60 மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறிக்கொண்டிருக்கிறார்கள்மேலும் நாட்டைவிட்டு வெளியேறுவதற்காக நற்சான்றுப்பத்திரம் கோரி சங்கத்திடம் 4,000 விண்ணப்பங்கள் மருத்துவர்களிடமிருந்து."*

என்பவையாகும். இலவசக்கல்வியை இலங்கையில் பெற்ற நிபுணர்களும், மூளைசாலிகளும் வெளிநாடுகளில் சென்று சம்பளம் பெற்று வரி செலுத்துவது, இலங்கையின் பொருளாதார வீழ்ச்சிக்கான முக்கிய காரணிகளில் ஒன்றாகின்றது.

அதுமட்டுமல்லவே PAYE வரி மூலம் அரசாங்கம் எதிர்பார்ப்பது மாதமொன்றுக்கு 100 மில்லியன் ரூபா என்ற நிலையில், கடந்த மார்ச் 15 ஆம் திகதியன்று "தொழில்வல்லுனர்களுக்கான தொழிற்சங்க"ங்களின் நாடுதழுவிய போராட்டத்தினால் அந்த ஒரேநாளில் அரசிற்கான வருமான இழப்பு 46 மில்லியன் ரூபா என அரசாங்கமே அறிவித்திருந்தது. அரசு எதிர்பார்த்த மேலதிக (வரி) வருமானத்தில் ஏறக்குறைய பாதிப்பங்கினை அந்த ஒற்றை நாளில் அரசு இழந்தது!

இத்துடன் முடிந்துவிடவில்லையே! வரி நீக்கம், வட்டி வீத அதிகரிப்பு நீக்கங்களுக்கான கோரிக்கைகளுக்கு, ஏற்றுகொள்ளும்வகையிலான தீர்க்கமானதொரு பதில் அரசு கூறும்வரை, மீண்டும் "தொழில் வல்லுனர்களின் தொழிற்சங்கம்" பெருந்திரள் போராட்டங்களை தொடர எண்ணியுள்ளமை, அரசின் "பொருளாதார மறுசீரமை"ப்பில் பொருத்தமற்ற போக்குகளைத் தொடர்சியாகத் தோற்றுவிக்கபோகிறதே!

இலங்கையில் மேலும் அரச அதிகாரிகள், பிரமுகர்கள் சிலர் கடந்த வார ஊடக அறிக்கைகளில் குறிப்பிட்டவற்றில் சில:

"கடந்த (2023) ஜனவரி மாதம் மட்டும் இலங்கையின் ஏற்றுமதி வருமானம் US $1 பில்லியன் ஆனால் 100 மில்லியன்கள் வழங்க முடியாததால் தேர்தல் நடத்தப்படவில்லை அவசிய ஒதுக்கீடுகள் அரசினால் அகற்றப்படுகின்றன" -- இலங்கை "ஜனநாயக மக்கள் காங்கிரஸ் கட்சி" உறுப்பினர் பிரபா கணேஷன்.

"நடந்து முடிந்த உயர்தரப்பரீட்சை விடைத்தாள்கள் திருத்தும் பணி, கடந்த பெப்பிரவரி 29ஆம் திகதியன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கவேண்டும், ஆனால் இப்பணிக்காக அரசாங்கத்தின் கொடுப்பனவு அதிருப்பதிகளால், பணி இன்னுமே ஆரம்பிக்கப்படாமல் தொடர்ச்சியாக பிற்போடப்பட்டுக்கொண்டிருக்கின்றன"

"இலங்கையின் 43 லட்சம் மொத்த மாணவர் தொகையில் 20 லட்சம் மாணவர்க்கு "உணவு உதவித்திட்ட"மொன்று பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்தும் இன்று வரை அமுல்படுத்தப்படவில்லை" -- இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர், யோசப் ஸ்டாலின்.

"அதிகாரிகளின் நிர்வாகத்தின் கீழ் உள்ளூராட்சி சபையை நடத்துவது உகந்ததல்ல என SCFR 35/1, 2016 வழக்கில் கூறப்பட்டுள்ளது"-- முன்னாள் தேர்தல்கள் ஆணையாளரும், தற்போதைய எல்லை நிர்ணயத்திற்கான தேசியத் தலைவருமான மஹிந்த தேசப்ரிய.

மேலும், "உள்ளூராட்சி சபை", கடந்த மார்ச் 19 நள்ளிரவில் காலாவதியாகி காணாமலாக்கப்பட்டதிலிருந்து, இலங்கையின் 29 மாநகரசபைகள், 36 நகரசபைகள், 275 பிரதேச சபைகளும் "மக்கள் தேர்வு" தவிர்க்கப்பட்டு, ஜனாதிபதியின் நிர்வாக பரப்பினுள் கட்டுப்படுகின்றன.

லாபமீட்டும் நிறுவனங்களை விபரங்களின் வெளிப்படைத்தன்மை மறைத்து வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பனை செய்ய முற்படும் அரசிடம், விபரம் வெளிப்படுத்தக்கோரிய சத்தியகிரகத்திலீடுபட்டமைக்காக ஊழியர்களுக்கு அரசிடமிருந்து கட்டாயலீவு.

நாட்டில் மதங்களை வளர்த்து, மனித நேயத்தை உயர்த்த வேண்டிய தார்மீக பொறுப்பினைக்கொண்டிருக்கின்ற அரச தலைவனின் தலைமையில் அல்லது நிர்வாகத்தில் சைவர்களின் சரித்திரம் கூறும் சைவத்தமிழ் செம்மண்ணில் சிவனின் சிற்பங்கள் சிதறடித்துத் தகர்த்தெறியப்பட்டு, ஆதிசிவனும், ஆத்மீகமும் அனாதைகளாகியுள்ளனர்.

மாணவர்களுக்காகவும், மக்களுக்காகவும் குரல் கொடுத்து, நிவாரணத்திற்காக நீதிமன்றம் வரை சென்ற அரச அதிகாரி, பதவி நீக்கப்படுவதற்கான "குற்றப்பத்திரிகை" பெற்றுள்ளார்.

நாட்டின் இளைஞர், காண்பவையும், கேண்மைகளும் எல்லாமே எங்கிலுமே ஆரோக்யமும், அமைதியும் பிரவகிக்கின்றனவா?? ஜனநாயகத்தின் குரல்களும், கோரிக்கைகளும் கொளுத்தப்பட்டு அரசினால் வளர்த்து வாழவைக்கப்பட வேண்டிய இளைஞர்கள் களைத்துக்கட்டிழந்து போகும்வரை ஆட்சிசெய்து, விளைவு கண்ட ஆர்ப்பாட்டம், போராட்டம், சத்தியாகிரகம், நித்திய கரகம் வரை, அனுதினமும் அழுத்தங்கள், அழுத்தங்கள் என்ற அலங்கோல வாழ்வு, இளைய சமுதாயம் "வன்முறை"யில், அல்லது "தன்னிழப்"பில் செல்வதைத் தடுப்பது, தவயோகத்தாலும் முடியாததே!!!

**நீதிமன்றத் தீர்ப்பைப் புறக்கணிப்பதும், பாராளுமன்ற சிறப்புரிமையை சீரழிப்பதும் குற்றமல்ல் மக்கள் ஆணை பெற்ற அரசியல் தலைவர்கள் அவசியமல்ல் ஊழல்களை உலவ விட்டு, வறியோர் மீது "வரி"களைச் சுமத்தி வதைசெய்வது பாவமல்ல் மனித நேயத்தை மறப்பது பிழையல்ல் மதங்களை சிதைப்பது சிதைவல்ல் கல்வியைக் கலைப்பது கவலையல்ல் நியாயமான அவசியங்களை நிராகரித்து ஆடம்பரங்களுக்கு அனுமதியளித்தல் தவறல்ல் ஆளுமை என்பது சுயநல சூட்சுமங்களைக் கச்சிதமாய்க் கையாள்வதிலேயே தங்கியுள்ளது என்பதொன்றும் ஏற்புடையதாகாததல்ல!! என்று இவ்வாறெல்லாம் தினம் தினம் இளைஞர் சமுதாயத்திற்கு கணங்கள் தோறும் கற்றுக்கொடுப்பது யார்??**

தேடிச் சோறுநிதந்தின்று, பல சீரழியும் சிறுகதைகள் பேசி, வாடித் துன்பமிக உழன்று, பிறர் வாடப்பல செயல்கள் செய்து, நரைகூடிக் கிழப்பருவ மெய்தி, கொடுங்கூற்றுக்கிரையென பின் மாயும் பல வேடிக்கை மனிதரைப் போலே நான் வீழ்வேனென்று நினைத்தீரோ? என, நேரியதாய் சீரியதாய் நாடுகாணும் நற்பணிகளில் வேகங்கொண்டு வினைத்திறன் காட்ட விழையும் "இளைஞர் சமூக"மொன்றை வழிநடத்துவதில் வெற்றி கண்டு வேர் கொடுப்பதில், "சிறுவர், இளைஞர்களுக்கான மேற்படி பாதுகாவலர்க"ளின் "ஆர்வமின்மை"யானது, வரட்சியான அலட்சியங்களாகவே தொடர்வது இலங்கையில் தொலைந்து போகாத தொடர்கதையாகும்!

# தமிழ்த் தேசியத்தின் தந்தை செல்வநாயகம்!

**(இன்று தந்தை செல்வநாயகம் அவர்களது 125 ஆவது பிறந்த நாள்)**

**- கனடா நக்கீரன்**

தமிழர்களது விடுதலைப் போராட்டத்திற்கு நீண்ட வரலாறு உண்டு. இருபத்தேழு ஆண்டுகள் (1956-1983) அமைதிவழிப் போராட்டம். மேலும் 26 ஆண்டுகள் (1983-2009) ஆயுதப் போராட்டம். இப்போது கடந்த 13 ஆண்டுகளுக்கு மேலாக மீண்டும் அமைதிவழிப் போராட்டம். அதாவது மீண்டும் தொடக்கப் புள்ளியில் வந்து நிற்கிறோம்.

அமைதி வழிப் போராட்டத்துக்கு தலைமை தாங்கியவர் தந்தை செல்வநாயகம். 1948 இல் நாட்டின் பிரதமராக இருந்த டிஎஸ் சேனநாயக்க அவர்களால் கொண்டு வரப்பட்ட 18 ஆம் இலக்க இலங்கைக் குடியுரிமைச் சட்டம் இலங்கை சுதந்திரம் பெற்று 285 நாட்களுக்குள் (ஓகஸ்ட் 20, 1948) நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. நாடாளுமன்றத்தில் அதனைத் தீவிரமாக எதிர்த்துப் பேசியவர் தந்தை செல்வநாயகம். எதிர்த்துப் பேசியதோடு நில்லாமல் எதிர்த்து வாக்களிக்கவும் செய்தார். இந்தச் சட்டத்தின் படி 1948 ஆம் ஆண்டு நொவம்பர் 15 ஆம் தேதிக்கு முன் இலங்கையில் பிறந்திருப்பதுடன் அவருடைய இரண்டு தலைமுறையினரும் இலங்கையில் பிறந்திருந்தால் மட்டுமே இலங்கைக் குடியுரிமைக்கு அவர் உரித்துடையவர் என்று வரையறுக்கப்பட்டது.

இலங்கைக் குடியுரிமைச் சட்டத்தினால் எட்டு இலட்சம் மலையகத் தமிழர்கள் தங்கள் குடியுரிமையை இழந்தார்கள். 1946 ஆம் ஆண்டு குடித்தொகை மதிப்பீட்டின் படி மலையகத் தமிழர்களது எண்ணிக்கை 780,600 (11.73%), இலங்கைத் தமிழர்களது எண்ணிக்கை 733,700 (11.02%) ஆக மொத்தம் 1,524,300 (22.75%). 2012 இல் மலையகத் தமிழரின் எண்ணிக்கை (2012) 842,323 (4.16%) இலங்கைத் தமிழர் 2,270,924 (11.21%) ஆக இருந்தது. இது கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதை போன்றது.

மேலோட்டமாகப் பார்க்கும்போது இலங்கைக் குடியுரிமைச் சட்டம் புதிதாக விடுதலை பெற்ற நாடொன்றிற்குத் தேவையான ஒரு நடவடிக்கையாகவே தோன்றினாலும் பிரதமர் டிஎஸ் சேனநாயக்க அவர்கள் மலையகத் தொழிலாளர்களது குடியுரிமையைப் பறித்து, அதன் மூலம் அவர்களது அரசியல் பலத்தைக் குறைத்து, அவர்களை நாடற்றவர்களாக ஆக்குவதே அவரது உள்நோக்கமாக இருந்தது.

சோல்பரி அரசியல் யாப்பு இயற்றப்பட்ட போது இலங்கையின் குடியுரிமை பற்றி அதில் ஒன்றும் சொல்லப்படவில்லை. தந்திரசாலியான பெரிய சேனநாயக்கா நாடு சுதந்திரம் பெற்ற பின்னர் குடியுரிமை பற்றி நாடாளுமன்றம் தீர்மானிக்கும் எனப் சோல்பரி பிரபுவிடம் சொல்லிவிட்டார். தமிழர் தரப்பும் அதனை வலியுறுத்தவில்லை.

தந்தை செல்வநாயகம் 1944 இல் தொடக்கப்பட்ட அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவராக இருந்தார். அதன் தலைவர் ஜிஜி பொன்னம்பலம் குடியுரிமைச் சட்டத்தை எதிர்த்துப் பேசவில்லை. ஆனால் எதிர்த்து வாக்களித்திருந்தார். இலங்கைக் குடியுரிமைச் சட்டம் நொவெம்பர் 15 இல் சட்டமாகியது. ஆனால் அதற்கு முன்னரே செப்தெம்பர் 03 ஆம் நாள் பொன்னம்பலம் பெரிய சேனநாயக்காவின் அமைச்சரவையில் கைத்தொழில், மீன்பிடி அமைச்சராக பதவியேற்றுக் கொண்டார். இது குடியுரிமை சட்டம் நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் போதே பொன்னம்பலம் அமைச்சர் பதவிக்கு பெரிய சேனநாயக்கா அவர்களோடு பேரம் பேசத் தொடங்கிவிட்டார் என்பதைக் காட்டி நிற்கிறது.

பொன்னம்பலம் 1947 ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் யாழ்ப்பாணத் தொகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி (ஐதேக) வேட்பாளர் அருணாசலம் மகாதேவாவை 9,100 அதிகப்படி வாக்குகளால் தோற்கடித்து வெற்றிபெற்றார். "கந்தசாமியைக் கொன்ற துரோகி மகாதேவா ஒழிக" என்பது அவரது தேர்தல் முழக்கமாக இருந்தது. காரணம் டி.எஸ். சேனநாயக்காவின் அமைச்சரவையில் மகாதேவா அப்போது உள்நாட்டு அமைச்சராக இருந்தார். காவல்துறை அவரது அமைச்சின் கீழ் இருந்தது. ஊர்வலமாக வந்த வேலை நிறுத்தக்காரர்கள் மீது காவல்துறை சுட்டதில் எழுதுவினைஞர் கந்தசாமி உயிர் துறந்தார்.

மலையகத் தமிழர்களின் குடியுரிமைக்குத் துணைநிற்பேன் என்று எழுத்தில் மலைய மக்களது தலைவர்களுக்குக் கொடுத்த உடன்படிக்கையை பொன்னம்பலம் மீறினார். குடியுரிமை பறிக்கப்படுவதால் தமிழர்களின் நாடாளுமன்றப் பிரதிநித்துவம் பாதியாகக் குறையும் என்பது பற்றி அவர் கிஞ்சித்தும் கவலைப் படவில்லை. தமிழர்களது வாக்குப் பலத்தைச் சரிபாதியாகக் குறைத்த குடியுரிமை சட்டத்தின் விளைவையோ அல்லது அதனைக் கொண்டு வந்து நிறைவேற்றிய டிஎஸ் சேனநாயக்காவின் கபட நோக்கத்தையோ பொன்னம்பலம் அறிந்திருக்கவில்லை என்று சொல்ல முடியாது. அமைச்சர் பதவிக்கு ஆசைப்பட்ட பொன்னம்பலம் அந்தச் சட்டத்தின் பின்விளைவுகளைப் பற்றிக் கவலைப்பட வில்லை என்பதே உண்மை.

"தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா" என்று முழங்கிய திரு. பொன்னம்பலம் அமைச்சர் பதவிக்கு ஆசைப்பட்டதன் காரணமாக "தமிழன் என்று சொல்லடா தலை குனிந்து நில்லடா" என்ற நிலைக்குத் தமிழர்களைத் தாழ்த்தினார்.

அடுத்த ஆண்டு 1949 இல் நாடாளுமன்ற தேர்தல் (திருத்தம்) சட்டத்தில் (Parliamentary Elections (Amendment) Act of 1949) ஒற்றைவரித் திருத்தத்தைக் கொண்டு வந்து மலையகத் தமிழர்களது வாக்குரிமையையும் டி.எஸ். சேனநாயக்கா பறித்தார். ஏற்கனவே (1948) அமைச்சரவையில் அமைச்சராகச் சேர்ந்துவிட்ட பொன்னம்பலம் இந்தச் சட்ட திருத்தத்துக்கு ஆதரவாக வாக்களித்தார்.

குடியுரிமைச் சட்டத்தை எதிர்த்து நாடாளுமன்றத்தில் பேசிய தந்தை செல்வநாயகம் "இன்று மலைநாட்டுத் தமிழர்களது கழுத்துக்குக் கத்தி விழுந்துள்ளது. நாளை ஆட்சிமொழிபற்றி முடிவு செய்யும் நேரம் வரும்போது இலங்கைத் தமிழர்களுக்கும் இதே கதிதான் ஏற்படும்" ("Today the knife has fallen on the neck of hill country Tamils. The same fate will befall the Sri Lankan Tamils tomorrow when the time comes to decide on the official language") எனத் தீர்க்கதரிசனத்தோடு பேசினார். 1956 ஆம் ஆண்டில் திரு. பண்டாரநாயக்கா "சிங்களம் மட்டும்" சட்டத்தைக் கொண்டு வந்து நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிய போது தந்தை செல்வநாயகத்தின் அரசியல் தீர்க்கதரிசனம் உண்மையாகியது. பதவி ஆசை காரணமாக பொன்னம்பலத்துக்கு இப்படியான தீர்க்கதரிசனம் அடியோடு இருக்கவில்லை.

மலையகத் தமிழரை சிங்கள ஆளும்



வர்க்கத்திற்குக் காட்டிக் கொடுத்த பொன்னம்பலத்தின் சந்தர்ப்பவாத சுயநல அரசியலை எதிர்க்கு முகமாகத் தந்தை செல்வநாயகம் தமிழ்க் காங்கிரஸ் கட்சியைவிட்டு வெளியேறினார். வெளியேறி 1949 ஆம் ஆண்டு டிசெம்பர் 18 ஆம் நாள் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி என்ற புதிய அரசியல் கட்சியைத் தொடங்கினார். தமிழ்மக்கள் ஒரு தேசிய இனம், வட - கிழக்கு (மாகாணங்கள்) அவர்களது பாரம்பரிய தாயகபூமி, இலங்கையின் ஒற்றையாட்சி அரசியல் யாப்பை ஒழித்து விட்டு கூட்டாச்சி (federal) அரசியல் அடிப்படையில் தமிழ்மக்களுக்கு தன்னாட்சி அரசை நிறுவுவது தமிழ் அரசுக் கட்சியின் அரசியல் இலட்சியம் எனப் பிரகடனப் படுத்தப்பட்டது. வட-கிழக்கில் சிங்கள அரசின் ஆதரவுடன் இடம்பெறும் பாரிய சிங்களக் குடியேற்றங்களை எதிர்ப்பதென்பது அந்தக் கட்சியின் அடுத்த முக்கிய குறிக்கோளாக இருந்தது.

தமிழ் அரசுக் கட்சியின் தொடக்கக் கூட்டத்தில் பேசிய தந்தை செல்வநாயகம் அவர்கள் தனது நீண்ட தலைமை உரையில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

"சென்ற காலங்களில் எமது தலைவர்களின் உறுதியற்ற நிலையே எமது பலவீனத்துக்குக் காரணமாக இருந்தது. இக் குறையை நிவர்த்தி செய்தாலன்றி எமது கட்சியும் தோல்வியுறும். ஐரிஷ் தேசியவாதிகளைப் போல சுதந்திரத் தமிழ் அரசு நிறுவப்படும் வரை "பதவி ஏற்க மாட்டோம்" என்று வாக்குறுதி அளிக்கும் உண்மை ஊழியர்களே எமது கட்சியில் இருத்தல் வேண்டும். உள்ளத்தில் ஒரு நோக்கமும் பேச்சில் ஒரு நோக்கமும் இருத்தலாகாது."

"In the past, our weakness was due to the (political) instability of our leaders. Unless we rectify this weakness our party will also fail. The party needs trusstworthy members who will pledge 'we will not accept 'office' like the Irish nationalists until we establish an independent Tamil state."

தந்தை செல்வநாயகம் ஒரு அமைச்சர் பதவிக்கு ஆசைப்பட்டு 8 இலட்சம் மலையகத் தமிழர்களது குடியுரிமை, வாக்குரிமை இரண்டும் பறிபோவதற்கு ஜிஜி பொன்னம்பலம் காரணகர்த்தாவாக இருந்ததை மனதில் இறுத்தித்தான் இவ்வாறு கூறினார் என்பது வெள்ளிடமலை. இறுதிக் காலத்தில் இந்த இரு தலைவர்களும் ஒற்றுமைப்பட்டது வரலாறு.

தமிழ் அரசுக் கட்சியின் கொடியாக யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்ட ஆரியச் சக்கரவர்த்தி மன்னர்களது இடபக் கொடி தேர்ந்தெடுக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் தமிழ் அரசுக் கட்சியின் முதல் கூட்டம் முத்திரைச்சந்தை மைதானத்தில் நடந்தது. அதில் இடபக் கொடியோடு ஊர்வலமாகச் சென்று கலந்து கொண்டது இப்போதும் எனக்கு நினைவு இருக்கிறது. அப்போது நான் கல்லூரி மாணவன். பின்னர் இடபக் கொடி மூவர்ணக் கொடியாக மாற்றப்பட்டது.

இன்றைய தலைமுறையினரில் பெரும்பாலோர் தந்தை செல்வநாயகம் பற்றி அறிந்திருக்க மாட்டார்கள். யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் முதல் முதல் அவரை மேடையில் பார்த்த போது மெல்லிய ஆனால் நெடுத்த உருவம், நேர்க்கோடு வகுத்து வாரிய தலை, சற்றுப் பெரிய காது, கவர்ச்சிகரமான முகம், சந்தண நிறம், பட்டு வேட்டி, பட்டுச் சால்வை, பட்டுச் சட்டை. ஆகிவற்றோடு காட்சி அளித்தார். வயது அய்ம்பதைத் தாண்டிவிட்டாலும் இளமை குன்றாத தோற்றம்.

அய்ம்பதுகளின் முற்பகுதியில் யாழ்ப்பாண முற்றவெளி மைதானத்தில் தமிழரசுக் கட்சி மேடைகளில் தோன்றிய தந்தை செல்வநாயகம் அவர்களின் இந்தக் கம்பீரமான தோற்றத்தை இளைய தலைமுறைகள் பார்த்திருக்க வாய்ப்பில்லை. இளமை குன்றி, முதுமை எய்தி, நடை மெலிந்து, மேடைகளிலும் சரி, நேரிலும் சரி, ஒவ்வொரு சொல்லாகத் தட்டுத் தடுமாறி மெல்லிய குரலில் பேசும் தந்தை செல்வநாயகம் அவர்களைத்தான் பலர் பார்த்திருப்பார்கள். அவரைப் பீடித்த பார்க்கின்சன் நோய் (Parkinson's disease) தந்தை செல்வநாயகம் அவர்களின் உடல் நிலையை வெகுவாகப் பாதித்தது.

இதனால் போலும் தந்தை செல்வநாயகம், 1972 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் தந்தை பெரியாரைத் சந்தித்துக் கொண்டபோது தன்னைவிட வயது குறைவாக இருந்தும் தன்னைவிட மூப்பாகத் தெரிகிறார் என்று பெரியார் சொல்லிக் கவலைப் பட்டார்.

தந்தை செல்வநாயகம் மட்டும் அரசியலுக்கு வந்திராவிட்டால், அல்லது 1948 ஆம் ஆண்டு அன்றைய சிங்கள ஆட்சியாளரால் எட்டு இலட்சம் மலைநாட்டுத் தமிழர்களின் குடியுரிமையைப் பறிப்பதற்குக் கொண்டுவரப்பட்ட சட்டத்தை ஆதரிக்க முடிவு செய்த அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் பொன்னம்பலத்தோடு சமரசம் செய்து கொண்டு போயிருந்தால், அல்லது அவரோடு முரண்பட்டுக் கொண்டு அரசியலுக்கு ஒரேயடியாக முழுக்குப் போட்டுவிட்டு ஒதுங்கியிருந்தால், பின்னர் தன்னைத் தேடிவந்த உயர் நீதிமன்ற நீதியரசர் பதவியை ஏற்றிருந்தால் தமிழினத்தின் அரசியல் வரலாறு நிச்சயமாக மாலுமி இல்லாத படகு போலத் திசை மாறிப் போயிருக்கும்.

கொழும்பில் புகழ் பெற்ற St.Thomas கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கிய புதிதில் தந்தை செல்வநாயகம் யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த அவரது தாயார் கடுமையான சுகயீனம் உற்றிருக்கிறார் எனக் கேள்விப்பட்டு உடனடியாகத் தாயைப் போய்ப் பார்க்க விரும்பி விடுமுறை கேட்டார். ஆனால் அவரது வேண்டுகோள் கல்லூரி அதிபரால் மறுக்கப்பட்டது. உடனே அந்த இடத்திலேயே விலகல் கடிதத்தை கல்லூரி அதிபரிடம் எழுதிக் கொடுத்து விட்டு யாழ்ப்பாணம் பயணமானார். பின்னர் கொழும்பு திரும்பிய அவர் சட்டக் கல்லூரியில் சேர்ந்து சட்டம் படித்து வழக்கறிஞர் (Advocate) பட்டம் பெற்று வெளியேறினார். அதற்கு முன்னர் 1918 ஆம் ஆண்டு இலண்டன் பல்கலைக்கழகத்தில் வெளிவாரி மாணவராகப் படித்து அறிவியல் இளங்கலைப் பட்டம் பெற்றிருந்தார்.

தந்தை செல்வநாயகம் நீண்ட காலம் மிகவும் புகழ்வாய்ந்த குடிசார் (civil) வழக்கறிஞர்களில் ஒருவராக விளங்கினார். நீதி மன்றங்களில் வழக்கறிஞர்களுக்கே உரித்தான உருட்டல், மிரட்டல் எதுவுமின்றி தனது கட்சிக்காரர் பக்கம் உள்ள நியாயங்களை சுருக்கமாகவும் அதே நேரத்தில் ஆணித்தரமாகவும் முன் எடுத்துக்களோடும் வழக்குரைத்து வழக்குகளை எளிதில் வென்றுவிடுவார். இந்த ஆற்றல் அவரிடம் அபரிமிதமாகக் காணப்பட்டது. இதனால் சக வழக்கறிஞர்கள் மட்டும் அல்லாது நீதிபதிகளும் அவரிடம் மிக்க மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தார்கள்.

தந்தை செல்வநாயகம் அவர்களின் கொள்ளுப்பிட்டி வீட்டில் தமிழரசுக்கட்சி ஆதரவாளர்கள் ஒவ்வொரு நாளும் கூடி அரசியல்பற்றி உரையாடுவோம். சில நேரங்களில் தந்தை செல்வநாயம் அவர்களோடும் பேசுவோம்.

தமிழ் அரசுக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களில் சிலர் (அறுபதுகளில்) நாடாளுமன்றத்துக்கு ஒழுங்காக வராமல் நீதிமன்றங்களில் வழக்குப் பேசுகிறார்கள் என தந்தை செல்வநாயகம் அவர்ளிடம் முறைப்பாடு செய்வதுண்டு. அதற்கு அவர் "தலைவர்களை இணக்க முடியாது, கடையில் வாங்க முடியாது, இருக்கிறவர்களை வைத்துக் கொண்டுதான் செயற்பட வேண்டும்" என்று சொன்ன பதில் இப்போதும் நினைவிருக்கிறது.

(தொடர்ச்சி 28 பக்கம்)


உதயனின் பிரத்தியேகச் செய்தி

# விநாயகர் விமர்சனம்

## வாங்கியது கடன், வைத்தது ஆப்பு, அடிப்பது தண்டோரா

(கனடா உதயனின் பிரத்தியேக சிறப்புக் கட்டுரைத்தொடர் - பகுதி 9)

- கொழும்பிலிருந்து கலாநிதி முருகேசு கணேசமூர்த்தி



"நாட்டு மக்களுக்கு ஒரு நற்செய்தி, நற்றமிழ் கற்ற புலவருக்கு ஒரு நல்ல வாய்ப்பு நம் மன்னர் செண்பகப்பாண்டியருக்கு ஒரு குறித்த விடயத்திலே பெருத்த சந்தேகம் ஏற்பட்டுள்ளது..... அதைத் தீர்த்து வைப்போருக்கு ஆயிரம் பொற-காசுகள் பரிசளிக்கப்படும்".....

இது திருவிளையாடல் திரைப்படத்தில் வந்த ஒரு தண்டோராக் காட்சி.

கடந்த வாரம் இலங்கையின் முடிசூடாமன்னர் பாராளுமன்றத்தில் வந்து போட்ட சத்தம் இந்த தண்டோராக் காட்சியையே நமக்கு ஞாபகப் படுத்தியது.

ஆனால், இலங்கை பாராளுமன்றத்தில் சொல்லப்பட்ட சமாசாரம் மன்னருக்கு ஏற்பட்ட மாபெரும் சந்தேகமல்ல மாறாக ஹீ மேன், சுப்பர்மேன் அல்லது பெற்மேன்போல ஒரு செயற்கரிய செயலை செய்து முடித்துவிட்டதான ஒரு வெற்றிக் கர்ஜனையாக அந்த சத்தம் இருந்தது.

"இலங்கை இனிமேலும் வங்குரோத்து அடைந்த நாடு இல்லை" எனவும் எவருமே செய்ய முன்வராத ஒரு காரியத்தை தாம் ஏற்று சர்வதேச நாணய நிதியத்தின் கடன் இணக்கப்பாட்டைப் பெறுவதில் வெற்றி பெற்று விட்டதாகவம் இதன் மூலம் இலங்கைக்கு மூடப்பட்ட உலக நிதிச் சந்தையின் கதவுகள் திறக்கும் எனவும் பெருமிதத்துடன் அவர் அறிவித்தார்.

ஐயா, சர்வதேச நாணய நிதியம் இன்னொரு 2.9 பில்லியன் கடனை நான்கு வருட -கால இடைவெளியில் உங்களுக்குத் தருவதாகத் தானே அறிவித்தது. அதிலே என்ன பெரிய சாதனையைக் கண்டீர்கள்? உங்களுடைய வெளிநின்ற கடன்களோ 50 தொடக்கம் 60 பில்லியன் அமெரிக்க டொலர்கள் என்கிறார்கள். அதை எப்படி மீளச் செலுத்தப்போகிறீர்கள் என்பதை இனித்தான் நீங்கள் சர்வதேச நாணய நிதியத்திற்குச் சொல்ல வேண்டும். அதற்குள் ஏனிந்தக் கொக்கரிப்பு?




அதுமட்டுமா? அந்தக் கடனோடு சேர்த்து உங்கள் அமருமிடத்தில் செருகிக் கொள்வதற்கு வசதியாக 151 பக்கத்தில் கூராகச் சீவிய ஒரு ஆப்பையும் சேர்த்தல்லவா உங்கள் கைகளிலே சர்வதேச நாணய நிதியம் கொடுத்து விட்டிருக்கிறது? அதை எப்போ எப்படி செருகிக் கொள்ளப் போகிறீர்கள்? ஆனால், அதே ஆப்பை பொதுமக்களின் ஆசனவாயிலில் வரிஉயர்வு விலை உயர்வு என்று ஏற்கெனவே பலதடவை செருகிவிட்டீர்கள். இப்போது அதே ஆப்பை பாராளுமன்ற அனுமதிக்காக விட்டிருக்கிறீர்கள். தமக்கு தாமே ஆப்பு வைத்துக்கொள்ள பாராளுமன்றத்தில் உள்ளவர்கள் நாலாம் அறிவு மட்டும் கொண்டவர்களா? அவர்கள் மற்றவர்களுக்கு செருகியே பழக்கப்பட்டவர்களாயிற்றே? மறுபறும் கடன் வாங்குவது உங்களுக்கு ஒரு சாதனையாகத் தெரிகிறதா?

கடன் பட்டார் நெஞ்சம் போல கலங்கினான் இலங்கை வேந்தன் என்று இராமாயணத்தில் கம்பன் இராவண மகாராஜாவின் கலக்கத்திற்கு கடன் பட்டவரது நெஞ்சம் படும் பாட்டின் தன்மையை உவமைகாட்டுவான். ஆனால் நமது மகாராஜாவோ சர்வதேச நாணய நிதியத்திடம் இன்னொரு கடனைப்பெற்று விட்டு அதை ஒரு வெற்றிச் சாதனையாக நினைத்து மகிழ்கிறார். அவரது தொண்டரடிப் பொடிகளோ மருதானையில் மஹாபாரயில் (நடுரோட்டில்) வெடிகொளுத்தி ஜயவேவா வெற்றிக் கோஷம் எழுப்புகிறார்கள்.

பொருளாதாரத்தில் இந்தளவு அடிவாங்கியும் இவர்கள் இன்னமும் கூடத் திருந்தவில்லை என்பதற்கு இதைவிட என்ன சாட்சி வேண்டும்? அடுத்த நாள் காலையில் உள்நாட்டுப் பத்திரிகைக் கார்ட்டூன் ஒன்று கைலி கட்டிய ஒருவரின் அகல வைத்த கால்களுக்கு இடையில் பட்டாசு வெடி வெடிப்பதாக வரைந்து காட்டியிருந்தது. அவரது சந்தான சமாசாரமும் சேர்ந்து வெடித்திருக்கும் என்பதை விளங்கிக் கொள்ள நமக்கு எட்டாம் அறிவு தேவையில்லை.

ஆகவே இலங்கையில் இப்போது ஏற்பட்டுள்ள மாற்றங்களை சாதனைகளாக ஊதிப்பெருப்பித்துக்காட்டி அரசியல் ஆதாயம் பெறவே ஆளும் தரப்பு முயல்கிறதென்பது வெளிப்படையாகத் தெரிகிறது. இன்றுள்ள நிலையில் தேர்தலொன்று வந்தால் ஆளுந் தரப்பு நிச்சயமாக மண்ணைக்கவ்வும் என்பது அவர்களுக்கே நன்கு தெரியும். எனவே எதையாவது செய்து மக்கள் மனங்களை மாற்ற நினைக்கிறார்கள். அதேவேளை இலங்கை மக்கள் மறதிநோய்க்கு ஆளானவர்கள். ஆதலால் ஆறேழு மாதங்கள் காலத்தை கடத்தி விட்டால் மக்கள் கடந்தகால கஷ்டங்களை மறந்து விட்டு தங்களுக்கு வாக்களிப்பார்கள் என்று ஆட்சியாளர்கள் உறுதியாக நம்புகிறார்கள்.

இப்போது சர்வதேச நாணய நிதியத்தால் வழங்கப்பட்டுள்ள 333 மில்லியன் டொலர் பெறுமதியான முதலாவது கடன் தவணைப்பணத்தை அரசாங்கம் தனது வரவு செலவுதிட்டத் தேவைகளுக்குப் பயன்படுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதிலிருந்து 121 மில்லியன் டொலர்களை- இந்தியாவிடமிருந்து பெற்ற கடன் வசதியின் ஒரு பகுதியை மீளச் செலுத்தப்பயன்படுத்தப்படுகிறது.




இலங்கையின் வறிய மற்றும் பாதிப்புறு நிலையில் உள்ள மக்களுக்கு நிவாரணங்கள் வழங்க மீதமுள்ள பணத்தின் ஒருபகுதியைப் பயன்படுத்தலாம் அத்தகைய மக்களை பாதுகாக்க வேண்டும் என்பது ஒரு நிபந்தனையாகவே சொல்லப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே 37 இலட்சம் பேர் அரசாங்கத்தின் உதவித் தொகைகளுக்காக விண்ணப்பித்திருக்கிறார்கள். இதில் கணிசமானோருக்கு மேற்படி நிவாரணங்கள் வழங்கப்பட்டால் அவர்கள் மனச்சாந்தியடைந்து மகிழ்வுடன் தமக்கு உதவிய அரசாங்கத்திற்கு புள்ளடிகள் மூலம் நன்றி தெரிவிப்பார்கள் என்று அரசாங்கம் எதிர்பார்க்கலாம். ஆனால் இப்போது மேற்கொள்ளபட்டுள்ள விலைத்திருத்தங்கள் எல்லாமே மக்களின் அடிப்படைத் தேவைகளின் விலை அதிகரிப்பாகவே உள்ளது. பெற்றோலியம் மின்சாரம் எரிவாயு உணவுப் பொருள்கள் விலைகள் வானளாவ உயர்ந்துள்ள நிலையில் கடந்த இரு வாரங்களில் பொருள் விலைகள் பாரியளவில் குறைவடைந்துள்ளதாகக் காட்ட அரசாங்கம் பகீரதப் பிரயத்தனம் செய்கிறது. விலைகளை ஒருசில பத்து ரூபாய்களால் குறைய அனுமதித்துவிட்டு பாரிய விலைக்குறைப்பு ஏற்படுத்தப்பட்டதாகப் பிரசாரம் செய்யப்படுகிறது. உதாரணமாக ஒரு கிலோ பால்மாவின் விலை இலங்கையில் 985 ரூபாவாக இருந்து 3085 ரூபாவாக அதிகரிக்கப்பட்டது. இப்போது அதில் 200 ரூபா குறைக்கப்படுவதாகக் கொக்கரிக்கிறார்கள் ஒரு லீற்றர் பெற்றோல் 117 ரூபாவிலிருந்து இப்போது 400 ரூபாவாக 241.8 சதவீதத்தினால் அதிகரிக்கப்பட்டது.

கடந்த புதன் இரவு முதல் பெற்றோல் விலையை 340 ரூபாவாகக் குறைத்திருக்கிறார்கள். இது ஒரு போதும் பழைய விலைக்குத் திரும்பாது. மக்களின் வருமானங்கள் வீழ்ச்சியடைந்துள்ளன. அல்லது நிரந்தர சம்பளம் பெறுபவர்களாயின் சம்பளங்களில் எந்த மாற்றமும் இல்லை. அதே வேளை நடுத்தர வருமானம் பெறுபவர்கள் மீது விதிக்கப்பட்டுள்ள வரிகள் அவர்களது வருமானத்தில் பெருந்தொகையை வரியாக உறிஞ்சிக்கொண்டுள்ளது. ஆகவே முன்னர் இருந்த வாழ்க்கைத் தரம் குறைந்து அவர்களும் வறிய மக்களின் வாழ்க்கைத்தரத்தில் வாழ நிர்ப்பந்திக்கப் பட்டிருக்கிறார்கள். நாட்டின் மிகவுயர்ந்த செல்வந்த நிலையில் வாழும் 20 சதவீத மக்களைத்தவிர ஏனையோரின் வாழ்க்கைத்தரம் மிகக் கேவலமான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. எனவே தான் சர்வதேச நாணய நிதியத்தின் பொருளாதாரக் கொள்கைகள் மனிதத்தன்மையற்றவை என்று குற்றஞ் சாட்டப்படுகிறது. அந்த நிறுவனத்தின் கொள்கைகள் பெரும்பாலும் ஒரு நாட்டின் ஆட்சியாளர்களையோ அல்லது அவர்களைத் தாங்கிநிற்கும் செல்வந்த வகுப்பினையோ பாதிப்பதில்லை. மாறாக குறித்த நாட்டிலே பிறந்த பாவத்திற்காகவும் போலி வாக்குறுதிகளை நம்பி ஆட்சியாளர்களுக்கு வாக்களித்த குற்றத்திற்காகவும் வறிய மற்றும் நடுத்தர வருமானம் பெறும் மக்களே அத்தனை சுமையையும் தாங்க வேண்டியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளில் பொதுமக்களின் கண்ணுக்கு கவர்ச்சியாக உள்ள விடயம் ஊழல் மோசடி என்பவற்றிற்கு எதிராக சர்வதேச நியமங்களுக்கு அமைய நிறுவன ரீதியான கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டு ஊழல் புரிந்தவர்களுக்க எதிராக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் அதற்கு அவசியமாக ஆலோசனைகளையும் தொழில்நுட்ப வல்லமையையும் நிதியுதவியையும் அது வழங்கும் எனவும் கூறப்பட்டுள்ள பரிந்துரையாகும். நாடு கடன் வாங்கியுள்ள மொத்தத் தொகை 84 பில்லியன் டொலர்கள் என்று சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கை சொல்கிறது இதில் 43 பில்லியன் உள்நாட்டுக்கடன்களாகும் 41 பில்லியன் வெளிநாட்டுக்கடன்களாகும். இந்த 84 பில்லியன் டொலர்களையும் என்ன செய்தீர்கள் என்பது தான் இப்போதுள்ள கேள்வி. எவ்வாறு செலவு செய்தீர்கள்? அவ்வளவு பணமும் எங்கு சென்றது? யார் யாருடைய கணக்குகளுக்கு அந்த பணம் சென்றது, இவை வெளிக்கொணரப்படவேண்டும். Foresnsic auditing உட்பட பல்வேறு வழிகள் ஊடாக அவ்வளவு பணமும் எங்கு போனது என்று காணமுடியும். அதை இலங்கை உழைப்பாளிகளும் வறிய மக்களும் தின்று தீர்த்தார்களா? தொழில்வாண்மையாளர்களும் புத்தி ஜீவிகளும் அதில் வாழ்க்கை நடத்தினார்களா? அல்லது அரசியல்வாதிகளின் வாரிசுகள் அந்தப்பணத்தில் ராக்கெட் விட்டு அந்த ராக்கெட்டை இப்போது தேடிக்கொண்டிருக்கிறார்களா? அல்லது தாம் ஏப்பம் விட்டதை வெளிநாட்டு வங்கிகளில் பத்திரமாக சேமித்து வைத்திருக்கிறார்களா? எங்கு போனது அந்தப்பணம்?

ஜனாதிபதி சொல்கிறார் எல்லோரும் பிழைவிட்டிருக்கிறார்களாம். மக்களும் பிழையானவர்களைத் தெரிவு செய்து பிழைவிட்டிருக்கிறார்களாம். ஆகவே கடந்த காலத்தை மறந்துவிட்டு எதிர்காலத்தைக் கட்டியெழுப்ப வரி செலுத்தட்டாம். எவனெவனோ கொட்டிக்கொண்டுபோக உதிரத்தைக் கொடுத்து உழைப்பவன் வரிசெலுத்தி அதை ஈடுசெய்ய வேண்டிய கட்டாய நிர்ப்பந்தம்.

மக்களால் தெரிவு செய்யப்படாதவரே மக்களை ஆட்சி செய்ய சந்தர்ப்பம் உள்ள ஒரு நாட்டில் மக்களின் தெரிவுக்கு எங்கே ஐயா முக்கியத்துவம்? இந்த இலட்சணத்தில் தெற்கு ஆசியாவிலேயே மிகச் சிறப்பான ஊழல் தடுப்புச் சட்டத்தைக் கொண்டுவரப் போகிறார்களாம். திருடனின் மனைவியிடம் திருட்டுப் போன பொருள் பற்றி சாத்திரம் கேட்பது போல என்று சிங்கள மொழியில் ஒரு பழமொழி உண்டு. அது இன்றைய ஆட்சியாளர்களுக்கு கனகச்சிதமாகப் பொருந்தும்.

மத்தியவங்கியின் பிணைமுறி விவகாரம் தொடர்பில் மக்கள் இன்னும் மறந்திருக்க மாட்டார்கள். கடந்த காலத்தை மறந்து (விடு) விட்டு என்று அடிக்கடி கூறுவதன் பொருள் கடந்த காலத்தில் கொள்ளை அடிச்சதை எல்லாம் மறந்திடுங்கோ வரியைக் கட்டுங்கோ இனிமேல் நடந்தாப்பாப்பம், ஆகவே கடந்த காலத்தில் நடந்ததை மறக்கவும் என்பதன் அர்த்தம் அதுவாகத்தான் இருக்கும். ச.நா. நி என்பது சர்வதேச நாணய நிதியம் என்பதன் தமிழ்ச் சுருக்கம். அதற்கு இன்னொரு அர்த்தமும் உண்டு. சர்வ நாசம் நிச்சயம் என்பது தான் அது.



ஏற்கெனவே ஆப்பு செருகப்பட்ட நிலையில் பொதுமக்கள் நடைப்பிணங்கள் போல நடக்கிறார்கள். தொழிற்சங்கங்களுக்கு இப்போது ஆப்பு செருகப்படுகிறது. எதையும் செவிமடுக்க அரசாங்கம் தயாராக இல்லை. இரும்புக்கரம் கொண்டு எல்லாவற்றையும் அடக்கவே முன்னுரிமை தரப்படுகிறது. மக்களின் ஆணையற்ற அரசாங்கம் மக்களைப்பற்றி யோசிக்கத் தேவையில்லைத் தானே என்றார் அனுபவசாலி ஒருவர். ஆகவே சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளில் தமக்கு பாதிப்பு ஏற்படுத்தாதவற்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்தும். மற்றவற்றை மக்களுக்குச் சொன்னது போல மறந்துவிடவே வாய்ப்புள்ளது.

"மக்களும் பிழையானவர்களைத் தெரிவு செய்து பிழைவிட்டிருக்கிறார்கள்" என்று ரணில் தன்னைப்பற்றி தான் கூறுகிறாரோ என்று கேட்கிறார்கள் மக்கள். எது எப்படியோ ஆக மொத்தம் ஆப்பு, ஆனால் அடிப்பது மட்டும் தண்டோரா.


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோயில்கள் 1042



## சுவர்ணாம்பிகா சமேத அருணாசலேஸ்வரசுவாமி ஆலயம் முகத்துவாரம், கொழும்பு

*"சத்திநீ தயவுநீ தயங்கு சங்கின் ஓசை நீ*
*சித்திநீ சிவனும்நீ சிவாயமாம் எழுத்துநீ*
*முத்திநீ முதலும்நீ மூவரான தேவர்நீ*
*அத்திபூரம் உம்முள்ளே அறிந்துணாந்து கொள்ளுமே"*

ஈழத்தின் இந்துசமய வரலாற்றில் பொன்னம்பலம் இராமநாதன், பொன்னம்பலம் அருணாசலம் ஆகியோரின் பங்களிப்பு, கல்லின் எழுத்தாக காலங்காலமாக நிலைத்து விளங்குகின்றது. தலைநகரிலே சிவாலயங்களை அமைத்த பெருமை இக்குடும்பத்தவர்களையே சாரும். பொன்னம்பலமுதலியார் அவர்களுடைய திருப்பணிக்குச் சான்றாக, கொழும்பு கொச்சிக்கடை பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம் காணப்படுகின்றது. பொன்னம்பலமுதலியார் அவர்களுடைய இளைய புதல்வாரன சேர். பொன். அருணாசலம் அவர்கள், முகத்துவாரக் கடலோரத்தில் பரம்பொருளாகிய சிவலிங்கப்பெருமானுக்கு கோயிலெடுத்துள்ளார்.

முகத்துவாரம் பிரதேசத்தில் சுவர்ணாம்பிகா சமேத அருணாசலேஸ்வரர் ஆலயம் எழுந்த வரலாறு சிறப்புடையது. ஈழம் எனும் நிலப்பரப்பு, சித்தர்கள் வாழ்ந்த புண்ணிய பூமி. சிவயோகசுவாமிகள், கடையிற் சுவாமிகள், ஆனைக்குட்டி சுவாமிகள், சித்தானைக்குட்டி சுவாமிகள் போன்ற பலர் வாழ்ந்து மறைந்துள்ளனர். முகத்துவாரம் அருணாசலேஸ்வரர் கோயில் எழுவதற்கு, பெரிய ஆனைக்குட்டி சுவாமியார்மீது பொன்னம்பலம்முதலியார் அவர்களுடைய பிள்ளைகள் கொண்ட மாறாத பக்தியே காரணமாகியுள்ளது.

எமது தாயகமாகிய ஈழத்தில் காலத்தால் மறவாத சித்தர் பெருமக்கள் பலரிருந்தும், முற்றத்து மல்லிகை மணக்காத கதையாக அவர்களை மறந்து, மாற்றான்தோட்டத்து மல்லிகைகளை முகர்ந்து, அழகு பார்த்துவாழும் சமூகமாக எமது சமூகம் மாறியுள்ளது. இவ்வாறான சித்தர் பெருமக்கள் இன்றும் எமது ஆலயங்களில் சங்கமித்து, அருள்மழை பொழிவதை நாமறிய முயலவில்லை என்ற ஆதங்கம், சித்தர்பெருமக்களின் ஆன்மசாதனைகளை அறிந்தோரிடம் வேர்விட்டுப் பரவியுள்ளது. இவ்வாறான சித்தர் பெருமக்களின் பெருமையை தமிழ்ச்சமூகம் உணராமையும், அவர்கள் வாழ்ந்த காலத்திலும், இன்றும் அவர்களைப் போற்றாமையும், எமது துன்பங்களுக்கு ஒரு விதையாக அமைந்திருக்க வேண்டும்.

முற்பிறவியில் பட்டகடனைத் தீர்க்க, சலவைத்தொழிலாளியின் வளர்ப்பு மகனாக இருந்து, அவர்களைவிட்டகன்று பற்றறுத்துத் திரிந்த பெரிய ஆனைக்குட்டியை, இறைவன் பல சாதனைகளில் ஈடுபடச் செய்து, அவரின் உள்ளுணர்வை மேம்படுத்திக் கொண்டிருந்தான். சித்தர்கள் மற்றவர்கள் தம்மைப்பற்றி என்ன எண்ணுகின்றார்கள் என்பதை மறந்த, இறைநிலைப்பட்டவர்களாக வாழ்ந்துள்ளனர். பெரியஆனைக்குட்டியும் இதற்கு விதிவிலக்கானவர் அல்ல. பெரியஆனைக்குட்டி தினமும் கடைவீதிக்குச் சென்று, அங்கு வீசப்படும் எச்சில் இலைகளைப் பொறுக்கி, அவற்றிலுள்ள எஞ்சிய உணவைச் சாப்பிட்டுவிட்டு கோயில்படிக்குத் திரும்பவும் வந்து அவ்விடத்திலேயே படுத்துவிடுவார்.

தாம் யார்? தமது நிலை என்ன? என்பதை யாருக்கும் வெளிப்படுத்தாத, அனைத்தையும் துறந்த நிலையிலேயே சித்தர்கள் வாழ்ந்துள்ளனர். பணம், பொருள், மற்றும் சுகபோகங்களை மறந்த நிலையே சித்தர்நிலை. இந்நிலையில் காணப்பட்ட பெரியஆனைக்குட்டி, ஆணவம் அழிந்தநிலையில், அனைத்தும் சமம் என்ற உளப்போக்கோடு காணப்பட்டுள்ளார். பெரியானைக்குட்டி, கண்டியில் இருக்கும்போது தான் யார் என்பதை காட்டிக்கொள்ளாது வாழ்ந்துள்ளார். சித்தர்கள் தாம் வாழ்ந்த இடத்தில் போற்றப்படுவதில்லை. காரணம் இம்மகான்களின் பூர்வாச்சிரமத்தை வைத்து அவர்களைச் சமூகம் புறந்தள்ளிவிடுவதுண்டு. சலவைத் தொழிலாளியின் வளர்ப்பு மகனாக இருந்த பெரியானைக் குட்டியையும், மக்கள் அந்த நிலையிலேயே கருதுவர்.

இவ்வாறான நிலையிலே ஜீவன்முத்தரான பெரியானைக்குட்டி, இந்தியா சென்றடைந்தார். இங்கு நவநாதசித்தர் போன்றோரோடு சேர்ந்து, பல அற்புதங்களைச் செய்தார். சிலகாலத்தின் பின்னர் மீண்டும் திரும்பிவந்து, கொழும்பிலுள்ள கப்பித்தாவத்தை என்ற இடத்தை வந்தடைந்தார். இங்கு வாழ்ந்துவந்த ஈனமுத்து என்பவரோடு சேர்ந்து வாழ்ந்துவந்தார். மிகவும் வறியநிலையில் வாழ்நத ஈனமுத்து அவர்கள், சுவாமியை கண்ணேபோல் காத்து வந்தார். ஒருநாள் ஈனமுத்து வெளியே சென்றுவிட்டுத் திரும்பியபொழுது, பெரிய ஆனைக்குட்டிச் சுவாமியார் சுவரில் சாய்ந்தவண்ணம் காலைநீட்டியபடியே, உயிர்பிரிந்தவர்போல மூச்சை அடக்கிக் காணப்பட்டார். அவ்விடத்திலே சுவாமி மலசலம் கழித்தநிலையும் காணப்பட்டது.

சுவாமியின் நிலையை அறியமுடியாத ஈனமுத்து, சுவாமி பரலோகம் சென்றுவிட்டார் எனக் கண்ணீர்விட்டுக் கதறினார். கையிலோ பணம் இல்லை. சுவாமியின் ஈமக்கிரியைகளை எப்படி நடத்துவது? அவருக்கு ஒரு விபரீத எண்ணம் தோன்றியது. குடிசையைக் கொளுத்திவிட்டால் சுவாமியின் உடலும் அதனுள் எரிந்து சாம்பராகிவிடும். வீடு நெருப்புப் பிடித்ததாகக் கூறிச் சமாளித்துவிடலாம் என, அந்தப் பேதைமனம் எண்ணியது. இவ்வாறு என்ன செய்வதென்று அறியாத நிலையிலே ஈனமுத்து தவித்துக் கொண்டிருந்தார்.

அப்பொழுது திடீரெனச் சுவாமிகள் கண்விழித்து, என்ன ஈனமுத்து வருத்தத்தோடு இருக்கிறாய்? கப்பல் கவிழ்ந்துவிட்டதா? ஏன்று கேட்டார். உடனே ஈனமுத்து சுவாமியின் பாதங்களில் தலையை வைத்து விம்மி விம்மி அழஆரம்பித்தார். பின் சுவாமியைத் தூக்கி எடுத்து துப்புரவு செய்தார். சுவாமியைச்சுற்றி சந்தனமணம் வீசிக்கொண்டிருந்தது. சுவாமியை உட்காரவைத்து வணங்கிநின்றார். அப்பொழுது "ஈனமுத்து கலங்காதே. இனி பெரியாட்கள் வருவாங்கள். காசுபணம் வரும். கவலைப்படாதே" என்று கூறினார்கள்.

\- வளரும்...



# தமிழர் தாயகப் பகுதிகளில் தொடரும் மதம் மற்றும் கலாச்சார அழிப்புகள்

**- நடராசா லோகதயாளன்**



**நெ**டுங்கேணி வெடுக்குநாறி மலையில் உள்ள சிவன் ஆலயத்திலிருந்து அத்தனை விக்கிரகங்களும் அடியோடு பெயர்க்கப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

இலங்கையில் உள் நாட்டுப போர் முடிந்து 14 ஆண்டுகளானாலும் இன்னமும் மதம் மற்றும் கலாச்சார அழிப்புக்கள் தொடருகின்றன என்பதனை அண்மைக் காலங்களில் தொடர்ச்சியாக நடைபெறும் சம்பவங்கள் தெளிவாக எடுத்துக காட்டுகின்றன.

அதிலும் தொல்லியல் திணைக்களமா அல்லது தொல்லை தரும் திணைக்களமா? என்று வடக்கு-கிழக்கு வாழ் தமிழ் மக்களால் விமர்சிக்கப்படும் அரச அமைப்பின் ஊடாக தமிழர்களின் நிலங்களை அபகரிப்பது, அங்குள்ள மத வழிபாட்டு மையங்கள், சின்னங்கள், புராதன இடங்கள் ஆகியவற்றை திட்டமிட்டு அழிப்பது சமீப காலத்தில் அதிகரித்து வருவதை யாவரும் அறிவர்.

அண்மை காலத்தில் வெளிப்படையாக குருந்தூர்மலையில் தொடங்கிய இந்த கலாச்சார அழிப்பு அல்லது தாக்குதல் - ஆக்டோபஸ் ஜீவராசி மெல்ல மெல்ல தனது நீண்ட கரங்களால் கடல்வாழ் உயிரனங்களை சுற்றி வளைத்து, தனது பிடியில் இறுக்கி கபளீகரம் செய்வது போன்று முன்னெடுக்கப்படுவது தெரிகிறது.

இப்படியான ஆக்டோபஸ் அணுகுமுறை, கிழக்கே திருகோணமலை மாவட்டம் கிண்ணியா நீராவியடி பிள்ளையார் கோவில் நிலத்தை வளைப்பதில் ஆரம்பித்து பின்னர் அந்த ஆலயச் சுற்றாடல் காணிகளையும் வலிந்து அபகரிக்கும் தீய உள்நோக்கம் கொண்ட செயலாக விரிவடைந்து அதே பாணியில் தொடருகிறது என்று இந்த விடயங்களை கூர்ந்து கவனித்து வரும் மூத்த குடிமக்கள் கூறுகின்றன.

கிண்ணியாவை அடுத்து குறுந்தூர்மலை ஆதிசிவன் அய்யனார் ஆலயம் மற்றும் அதை சுற்றியுள்ள அடர்ந்த வனப்பகுதியை கையகப்படுத்தி, அங்கு நீதிமன்ற உத்தரவையும் மீறி, இராணுவம் புத்தசாசன அமைச்சுடன் இணைந்து வலிந்து பௌத்த விகாரை ஒன்றை கட்டியெழுப்பப்பட்டுள்ளது. எனினும் "எம்மை யாரும் எதுவும் செய்ய முடியாது" என்ற ஆணவ நிலை அங்கே நீடிக்கிறது.



முறிகண்டி பிள்ளையார் ஆலயம் மற்றும் அதைச்சுற்றியுள்ள பகுதியிலும் இப்படியான வலிந்த கலாச்சார தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

போர் என்ற பூச்சாண்டியைக் காட்டி கீரிமலைப் பகுதியில் மூன்று தசாப்தங்களிற்கும் மேலாக தனியார், ஆலயக் காணிகளை வலிந்து ஆக்கிரமித்திருந்த படையினர் அவர்கள் கட்டுப்பாட்டின் கீழிருந்த பகுதியில் பன்னெடுங்காலமாக விழிபாட்டு தலமாக இருந்த ஆதி சிவன் கோவில் மற்றும் அதன் அருகில் இருந்த பல சிவ சின்னங்களும் இப்போது இடித்து அழிக்கப்பட்டுள்ளது அம்பலப்படுத்தப்பட்டுள்ளது.

அதை முதல் முறையாக ஆதாரங்களுடன் கனடா உதயனே வெளியிட்டது.

இப்போது அந்த ஆக்டோபஸ் கரங்கள் வவுனியாவை நோக்கி நீண்டுள்ளன.

வவுனியா வடக்கு பகுதியில் அமைந்துள்ள வெடிக்குநாறிமலை சிவன் ஆலயத்தின் அத்தனை விக்கிரகங்களும் அகற்றப்பட்டுள்ளமை ஆலய நிர்வாகிகளால் இப்போது உறுதி செய்யப்பட்டுள்ளது.

அந்த ஆலயத்தில் சிவன், அம்மன், பிள்ளையார், பாலமுருகன் மற்றும் வயிரவர் விக்கிரகங்கள் இருந்து வழிபட்ட நிலையில் 2019ஆம் ஆண்டில் தொல்லியல்த் திணைக்களத்தின் தொல்லை காரணமாக எவருமே அப்பகுதிக்கு செல்ல முடியாது தடுக்கப்பட்டனர்.

இருந்தபோதும் இது தொடரபில் வவுனியா நீதிமன்றில் வழக்கு இடம்பெற்று வரும் நிலையில் ஆலயத்தின் விக்கிரகங்கள் அனைத்தும அரச திணைக்களம் ஒன்றால் திருட்டுத்தனமாக எடுத்துச் செல்லப்பட்டு விட்டதாக கிடைத்த தகவலின் பெயரில் ஆலய நிர்வாகத்தைச் சேர்ந்த சிலர் கடந்த வாரத்தின் இறுதியில் அப்பகுதிக்குச் சென்று பார்வையிட்டனர்.

அவ்வகையில் அங்கு சென்றவர்களிற்கு அதிர்ச்சியும் வேதனையுமே காத்திருந்தன. பன்னெடுங்காலமாக தாங்கள் வழிபட்டு வந்த ஆலயம் மற்றும் அதன் சூழலில் இருந்த மத அடையாளங்கள் அனைத்தும் திட்டமிட்ட முறையில் அகற்றப்பட்டுள்ளதை கண்ட ஆலய நிர்வாகத்தினர் மனமுடைந்து போயினர்.

"பாதுகாப்பு படையினரும் தொல்லியல் துறையினரும் இறைவனைக் கூட விட்டுவைப்பதில்லை, புத்த பகவானை போற்றி வணங்கும் இவர்கள் ஏன் இந்து (தமிழ்) மக்களை திட்டமிட்டு இலக்கு வைத்து, அவர்களின் மத, கலாச்சார விழுமியங்களை தாக்கி அழிக்கின்றனர்" என்று மூத்த குடிமக்கள் மிகுந்த விசனத்துடன் வினவுகின்றனர்.

வவுனியா வெடுக்குநாறி பகுதிக்கு யாரும் செல்லவதற்கு அனுமதி மறுத்த தொல்லியல் திணைக்களம் அங்கிருந்த திருவுருவங்களையும் ஆலய சொத்துக்களையும் அபகரித்துச் செல்வதறகும் உடந்தையாக செயலபட்டு விட்டதா? என வவுனியா நகரவாசிகள் கேளவி எழுப்புகின்றனர்.

பொதுமக்களை திட்டமிட்டு அந்த பகுதிக்குச் செல்லவிடாமல் தடுத்து நிறுத்த யார் கட்டளையிட்டது என்ற கேள்விக்கு இதுவரை பதிலில்லை. தொல்லியல் பூமி என்றால் எந்த வகையிலும் அந்த இடத்தில் யாரும் எவ்விதமான கட்டுமானங்களை கட்டுவதோ, அல்லது அந்த சூழலை மாற்றியமைக்கவோ முடியாது என்பதே பொதுவாக வழிகாட்டல் நடைமுறையாகும். ஐ நாவின் ஒரு அங்கமாக யுனெஸ்கோவும் இதையே கூறுகிறது.



தொல்லியல் பிரதேசம் என்பது சரித்திரபூர்வமாக சான்றுகள் மற்றும் ஆதாரங்களுடன் நிரூபிக்கப்பட வேண்டும், அதன் பிறகு அது பாதுகாப்பப்பட்ட பகுதியாக அறிவிக்கப்பட்டு யாரும் அங்கு அத்துமீறி செல்ல அனுமதிக்கப்படக் கூடாது, அரச அதிகாரிகள் மற்றும் அதை பராமரிப்பவர்கள் கூட முறையான அனுமதி பெற்றே தொல்லியல் பிரதேசங்களிற்குள் செல்ல வேண்டும், அந்த பயணம் வீடியோவில் பதிவு செய்யப்பட்டு ஆவணப்படுத்தப்பட வேண்டும், எவ்வகையிலும் அந்த பிரதேசத்தில் மாற்றங்கள் செய்யப்படவில்லை என்பதை எழுத்துபூர்வமாக அரசிற்கும் நீதிமன்றத்திற்கும் தெரிவிக்க வேண்டும் என்று பல கட்டுப்பாடுகளை யுனெஸ்கோ அமைப்பு விதித்துள்ளது.

உலக மரபுகள் மற்றும் வழிகாட்டல்களை மீறி, இவ்வாறு அரச திணைக்களத்தின் பெயரில் பொதுமக்களை தடுத்து நிறுத்தி மத வழிபாட்டித் தலத்தையே இல்லாது ஒழிப்பதை அரசின் திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலாகவே பார்ப்பதாக தமிழ் மக்கள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

வவுனியா வடக்கு நெடுங்கேணியில உள்ள வெடுக்குநாறி மலையில் உள்ள சிவன் ஆலயத்திலிருந்து திட்டமிட்ட வகையில் அத்தனை விக்கிரகங்களும் அடியோடு பெயர்க்கப்பட்டு எடுத்துச் செல்லப்பட்டுள்ளமை தற்போது உறுதி செய்யப்படுகின்றது.

தமிழ் மக்களின் வழிபாட்டு தலங்களை திட்டமிட்டு அழிக்கும் இலங்கை அரச தரப்பு, அங்கிருக்கும் பழமையும் புனிதமும் வாய்ந்த விக்கிரகங்களையும் எடுத்துச் செல்வதை எவ்வகையிலும் ஏற்க முடியாதது என்கிறார்கள் உள்ளூார் மக்கள். வலிந்து உடைக்கப்பட்ட, அல்லது எடுத்துச் செல்லப்பட்ட சிலைகள் எங்கே என்கிற கேள்வியும் இங்கு எழுகிறது.

இதேநேரம் இலங்கையில் உள்ள தொல்லியல்த் திணைக்களம் என்பது தொன்மைகளையும் வரலாற்றையும் பாதுகாக்கவில்லை மாறாக சிங்களத்தையும் பௌத்தத்தையும் மட்டுமே வளர்ப்பதாக தமிழர்கள் தொடர்ந்தும் குற்றஞ்சாட்டி வரும் நிலையில், வெடுக்குநாறிமலைச் சம்பவம் சைவ சமயத்தின் மீதான திட்டமிட்ட தாக்குதல் மற்றும் அழிப்பை நிரூபிக்கும் வகையிலான மற்றொரு சம்பவமாக உள்ளது என்பதை மறுப்பதற்கில்லை.

இவ்வாறு வெடுக்குநாறி ஆலய விக்கிரகங்கள் உடைக்கப்பட்டு அவற்றில் சில அயலில் உள்ள காடுகளில் வீசப்பட்டுள்ளமை கண்டுகொள்ளப்பட்டுள்ளதாக ஆலயப்பகுதிக்கு சென்று திரும்பியவர்கள் உதயனிடம் உறுதி செய்தனர்.

தொடர்ச்சியாக இந்து ஆலயங்கள் சூறையாடப்படுவதும், ஆலயத்திற்கு சொந்தமான இடங்கள் அபகரிக்கப்படும் விடயத்தில் சில கேள்விகள் எழுவதை தவிர்க்க முடியவில்லை.

போர்க்காலத்திலும் சரி, அதற்கும் பின்னரான காலப்பகுதியிலும் தமிழர் தாயகப் பகுதிகளில் கிறிஸ்தவ தேவாலயங்களோ அல்லது முஸ்லிம் பள்ளிவாசல்களோ தொல்லியல் பிரதேசம் என்ற போர்வையிலோ, பாதுகாப்பு அச்சுறுத்தல் என்ற மாயையிலோ திட்டமிட்டு ஆக்கிரமிக்கப்படவில்லை என்பதை அவதானிக்க முடிகிறது. அதேவேளை விமானப் படையினரின் வான்வழித் தாக்குதலில் இந்து ஆலயங்களைப் போன்றே தேவாலயங்களும் தாக்குதலுக்கு இலக்காயின என்பதையும் மறுக்க இயலாது. ஆனால் அவை வலிந்த ஆக்கிரமிப்பு மற்றும் அழிப்பு என்ற வரையறைக்குள் வரவில்லை என்று சமூகச் செயற்பாட்டாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

கடந்த 2012ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 20ஆம் திகதி தம்புள்ள பகுதியில் இருந்த பள்ளிவாசல் ஒன்றில் முஸ்லிம்கள் தொழுகையில் ஈடுபட்டிருந்த போது, பாதுகாப்பு படையினரின் அனுசரணையுடன் சிங்கள் பௌத்த பிக்குகள் அங்கு அதிரடியக நுழைந்து அவர்களை அங்கிருந்து விரட்டியடித்தது உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பெரும் பிரச்சனையக வெடித்தது. அந்த சமயத்தில் அப்பகுதிக்குச் சென்று வந்த செய்தியாளர்கள் அந்த பள்ளிவாசல் என்பது முழுமையான கட்டுமானங்களுடன் இல்லாமல் தகரங்களைக் கொண்டு ஒரு தடுப்பு ஏற்படுத்தி ஒரு தற்காலிக அமைப்பைப் போன்றே இருந்தது என்றனர். ஆனாலும் அவ்விடம் ஒரு வழிப்பாட்டு தலமாக கருதப்பட்டமையால் அங்கு கடும்போக்கு பிக்குகள் நுழைந்து தொழுகையில் ஈடுபட்டிருந்தவர்களை விரட்டியடித்தது பெரும் பேசுபொருளாகியது.

உடனடியக இஸ்லாமிய நாடுகள் கடும் கண்டனத்தை தெரிவித்தன. இலங்கையில் முஸ்லிம்களிற்கு பாதுகாப்பு இல்லாத சூழல் ஏற்படுமாயின் தாங்கள் வழங்கும் ஆதரவு மற்றும் உதவிகளை நிறுத்த வேண்டிய கட்டாயம் ஏற்படும் என்று அந்த நாடுகள் இலங்கையை மிரட்டின. அரசும் அடிபணிந்தது. அதேவேளை அந்த பள்ளிவாசல் அவ்விடத்தில் சட்டவிரோதமாக கட்டப்பட்டுள்ளது என்று பௌத்த தரப்பும் அரசும் கூறியதை முஸ்லிம்கள் மறுத்தாலும், அவர்கள் தமது "பள்ளிவாசலில்" அத்துமீறி நுழைந்து அச்சுறுத்திய சம்பவம் தொடர்பில் நீதிமன்றம் செல்லவில்லை என்பதெல்லாம் வரலாறு.

ஆனால் தமிழ் (இந்து) மக்களின் வழிபாட்டு இடங்கள், கலாச்சார மையங்கள், பண்பாட்டு இடங்கள் மீதான தாக்குதல் நடக்கும் போது உலக நாடுகளும், அண்டை நாடான இந்தியாவும் மௌனத்தையே கடைபிடிக்கின்றன. தற்போது தாக்குதலுக்கு உள்ளாகி வரும் இடங்கள் சரித்திர ரீதியாக பிரபலமானவை. பல நூற்றாண்டுகள் பழமையானவை. அவை தலைமுறை தலைமுறையாக வழிபட்டு வந்த இடங்கள். ஆனால், தமிழ் மக்கள் என்று வரும் போது மாறுபட்ட அளவுகோல்கள் கடைபிடிக்கப்படுகின்றன என்பதே யதார்த்தமாக உள்ளது.

"வெடுக்குநாறி மலையில் ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் இடித்தழிக்கப்பட்டமை தொடர்பில் அரசு உரிய கவனம் செலுத்தும், பொலிஸாரும் உரிய நடவடிக்கை எடுப்பார்கள், குண்டர்களின் காடைத்தனமான செயற்பாட்டைத் தூக்கிப் பிடித்துக்கொண்டு இன ரீதியில் - மத ரீதியில் பிளவுகளை ஏற்படுத்த வேண்டாமென சகல தரப்பினரையும் கேட்டுக்கொள்கின்றேன்" என்று பௌத்தசாசன மத மற்றும் கலாசார விவகார அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க திருவாய் மலந்துள்ளார்.

வெடுக்குநாறி மலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலயம் இடித்தழிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் உரிய விசாரணைகளை முன்னெடுத்து, ஆலயத்தை மீள அமைத்துக் கொடுப்பதற்குரிய நடவடிக்கைகள் எடுக்குமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளதாக, இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா கூறுகிறார்.



ஒன்றிணைந்த தேசம், ஒரே மக்கள், ஒரே சட்டம் என்றெல்லம் பேசும் சிங்கள அரசு, சிறுபான்மையினரின் உணர்வுகளை புண்படுத்தும் வகையில், அவர்களின் வழிபாட்டு இடங்கள் மீதான தாக்குதலை முன்னெடுத்து அழித்தொழிக்கும் நடவடிக்கையில் திட்டமிட்டு ஈடுபடும் நிலையில், ஒன்றிணைந்து நாட்டை கட்டியெழுப்புவோம் என்பவை வெற்று கோஷங்களாகவே இருக்கும் என்பதே பொதுவான கருத்தாக உள்ளது.

# 'போர் குற்றம் தொடர்புடைய' இலங்கை அமைச்சர்களை அழைத்தமைக்கு தென் ஆப்ரிக்க அரசிற்கு கடும் கண்டனம்

**- சிவா பரமேஸ்வரன்**

**தெ**ன்னாப்பிரிக்காவில் உள்ள முன்னணி மனித உரிமைக் குழுக்கள், போர்க் குற்றவாளிகளுடன் தொடர்புடையதாகக் குற்றம் சாட்டப்பட்ட இரண்டு இலங்கை அமைச்சர்களை பிரிட்டோரியாவுக்கு ஆய்வுச் சுற்றுப்பயணத்திற்கு அழைத்ததற்காக தங்கள் அரசாங்கத்தைக் கடுமையாக விமர்சித்துள்ளன.

இலங்கையின் வெளியுறவு அமைச்சர் அலி சப்ரி மற்றும் சிறைச்சாலைகள், அரசியல் சாசன சீர்திருத்த துறைக்கான அமைச்சர் கலாநிதி வியேயதாஸ ராஜபக்ச ஆகிய இருவரையும் தென் அப்ரிகாவின் பன்னாட்டு உறவுகள் மற்றும் கூட்டுறவு துறைகளிற்கான அமைச்சர் கலாநிதி நலேடி பாண்டோர் அழைத்திருந்தார்.

இலங்கையில் இணக்கப்பட்டை மேம்படுத்துவதற்கு உண்மையை கண்டறிதல் மற்றும் இணக்கப்பாட்டிற்கான ஆணையம் ஒன்றை அமைப்பது தொடர்பில் "தென் ஆப்ரிக்க அனுபவத்திலிருந்து கற்றுக்கொள்ளுதல்" என்பதே இந்த பயணத்தின் நோக்கம் என்றும் நாட்டின் வெளியுறவு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அமைச்சரவையில் இருக்கும் இந்த இரண்டு அமைச்சர்களும் ராஜபக்சக்களுடன் மிகவும் நெருக்கமாக இருந்தவர்கள். மேலும் பன்னாட்டுச் சமூகத்தால் பாரிய மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றச்சாட்டுகளிற்கு ஆளாகியுள்ளவரும் பதவியிலிருந்து விலக்கப்பட்டவருமான கோத்தாபய ராஜபகச்வின் கீழும் பணியாற்றியவர்கள். மூன்று தசாப்தகளிற்கும் மேலாக நடைபெற்ற உள்நாட்டு யுத்தம் மகிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த சமயத்தில் கொடூரமான முறையில் முடிவிற்கு கொண்டுவரப்பட்ட போது "மிகவும் பலம் பொருந்திய" பாதுகாப்புச் செயலராக கோத்தாபய ராஜபக்ச இருந்தார். இறுதி யுத்தத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் கொல்லப்பட்டனர், அங்கவீனர்கள் ஆயினர் அல்லது படுமோசமாக காயமடைந்தனர். அந்த வலி மற்றும் வேதனையை தமிழ் மக்கள் இன்றும் அனுபவித்து வருகின்றனர்.

போர்க் குற்றங்கள் மற்றும் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் புரிந்ததான குற்றச்சாட்டுகள் தொடர்பில் போரினால் பாதிக்கப்பட்ட தமிழர்களும் சர்வதேச சமூகமும் நம்பகத்தன்மை கொண்ட பன்னாட்டு விசாரணை பொறிமுறை ஒன்று வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர். ஆனால் இலங்கை அரசோ சர்வதேச சமூகத்துடன் ஒத்துழைப்பதாக ஐ நா மனித உரிமைகள் பேரவையில் அளித்த வாக்குறுதியை மீளப்பெற்றது.

முன்னர் ஜனாதிபதியாக இருந்த மைத்திரிபால சிறிசேன அரசு சர்வதேச சமூகங்களுடன் ஒத்துழைக்க ஐ நா மனித உரிமைகள் பேரவையில் வாக்குறுதி அளித்தது. ஆனால் அதற்கு அடுத்து ஆட்சிக்கு வந்த கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசு ஐ நா அமைப்பிற்கு அளித்த உறுதிமொழியை நிராகரித்தது.

"இந்த அழைப்பிற்கான எண்ணம் உன்னதமாக இருந்தாலும், இலங்கையில் தொடரும் மனித உரிமை மீறல்கள், சிவில் சமூகங்கள் ஒடுக்கப்படுவது, 1983-2009ஆம் ஆண்டுவரை நடைபெற்ற உள்நாட்டு யுத்தத்தில் இழைக்கப்பட்ட பாரிய மனித உரிமை மீறல்கள் தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் நீதியின் முன் நிறுத்தப்படாமல் இருப்பது ஆகியவை காரணமாக இலங்கை அரசின் அமைச்சர்களிற்கு தென் ஆப்ரிக்க அரசு அழைப்பு விடுத்தது கவலையளிக்கிறது" என்று பவுண்டேஷன் ஃபார் ஹியூமன் ரைட்ஸ் அமைப்பு - Foundation for Human Rights (FHR) வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளது.





"இந்த பயணத்தில் போது அந்த இரு அமைச்சர்களும் மரியாதை நிமித்தமாக தென் ஆப்ரிக்க அதிபர் சிரில் ராமஃபோசாவை சந்தித்தனர் மற்றும் தென் ஆப்ரிகாவின் பன்னாட்டு உறவுகள் மற்றும் கூட்டுறவிற்கான அமைச்சர் நலேடி பாண்டோர், நீதி மற்றும் அரசியல் யாப்பு மற்றும் அரசியல் சாசன மேம்பாடு அமைச்சர் ரொனால்ட் லமோலா ஆகியோரை சந்தித்தனர். அதுமட்டுமன்றி தென் ஆப்ரிகாவின் முன்னாள் அதிபர் தாபோ எம்பெக்கி, நாட்டின் அரசியல் சாசன மேம்பாட்டிற்கான முன்னாள் அமைச்சரும், அதிபர் ராமஃபோசாவுடன் தென் ஆப்ரிகாவின் நிறவெறி கொள்கையை ஒழிக்க துணைபுரிந்து முதல் முறையாக ஜனநாயக ரீதியிலான தேர்தலை நடத்த முன்னின்று செயல்பட்டவர்களில் ஒருவரும் ரொயல்ஃப் மேயர் ஆகியோரையும் இலங்கை அமைச்சர்கள் சந்தித்தனர்" என்று இலங்கை வெளியுறவு அமைச்சக அறிக்கை கூறுகிறது.

இந்த சந்திப்புகளிற்கு அப்பாற்பட்டு தென் ஆப்ரிக்காவின் அரச குற்றவியல் விசாரணை அலுவலக அதிகாரிகள், தென் ஆப்ரிக்கா முழுவதும் இருக்கும் சட்டத்தரணிகள் சங்கத்தினர் ஆகியோருடன் "ஃப்ரீடம் பார்க்", "மாறுதலிற்கான ஊக்கப்படுத்தும் அமைப்பு" மற்றும் "நீதி மற்றும் இணக்கப்பட்டிற்கான மையம்" ஆகியோரையும் தமது அமைச்சர்கள் சந்தித்ததாக இலங்கை அரசின் செய்திக் குறிப்பு கூறுகிறது.

அப்படியான சில மனித உரிமை மீறல்கள் மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க் குற்றங்கள் போன்ற மோசமான குற்றச்செயல்களாக கருதப்படக் கூடும் என்று ஐ நா தொடர்ச்சியாக கூறி வருகிறது.

இறுதிக்கட்ட யுத்தம் இடம்பெற்ற 2009ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் மே வரையிலான காலப்பகுதியில் குறைந்தபட்சம் 40,000 முதல் 70,000 பேர் உயிரிழந்தனர் என்று ஐ நா கூறுகிறது. அந்த இறுதிகட்ட பகுதியில் இடம்பெயர்ந்த தமிழ் மக்கள் முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒரு சிறிய துண்டு நிலத்தில் சிக்குண்டிருந்தனர். அப்போது அந்த பகுதி கடும் எறிகணை மற்றும் வான்வீச்சு தாக்குதல்களிற்கு இலக்காயின.

உலகளாவிய அதிகார வரம்பு கொள்கையின் அடிப்படையில் (principle of universal jurisdiction) கீழ் பதவியிலிருந்து விலக்கப்பட்ட ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச மீது-இறுதிக்கட்ட யுத்தத்தின் போது இடம்பெற்ற மிக மோசமான பன்னாட்டுக் குற்றங்கள் மற்றும் பாரிய மனித உரிமை மீறல்கள் ஆகியவற்றில் அவரின் பங்கு தொடர்பில்- சிங்கப்பூரில் வழக்கு ஒன்று பதியப்பட்டுள்ளது என்பதையும் FHR தலைமையிலான மனித உரிமை அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளன.



அதே போன்று கோத்தாபய ராஜபக்ச மீது தனியான வேறொரு வழக்கும் 2019ஆம் ஆண்டு அமெரிக்காவிலும் ஒரு வழக்கு தொடுக்கப்பட்டது. அவர் நாட்டின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருந்தபோது தனக்கு நெருக்கமானவர்களை மிகுந்த அதிகார பலம் வாய்ந்த பதவிகளில் நியமித்தது தொடர்பில் அந்த வழக்கு தொடுக்கப்பட்டது. அப்படி பெரும்பாலான நியமனங்களில் அது உருவாக்கப்பட்டுள்ள சட்டம் மற்றும் மரபுகளை மீறிய செயலாகவே இருந்துள்ளது.

அவ்வகையில் நியமிக்கப்பட்டவர்கள்-அவர்களில் பெரும்பாலானவர்கள் அவரது முன்னாள் இராணுவ சகாக்கள்- சிலர் பாரிய மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதான குற்றச்சாட்டில் அமெரிக்கா மற்றும் கனடாவால் தடை விதிக்கப்பட்டுள்ளனர்.

தமது நாட்டிற்கு விஜயம் செய்துள்ள இந்த அமைச்சர்களின் சர்ச்சைக்குரிய பின்னணியைப் பார்க்கும் போது அவர்கள் தமது நாட்டிற்கு "நல்லிணக்கம் மற்றும் மாறுங்கால நீதி தொடர்பிலான ஆய்வு சுற்றுப்பயணம்" மேற்கொண்டுள்ளதன் நம்பகத்தன்மையை தென் ஆப்ரிக்க மனித உரிமை அமைப்புகள் கேள்வி எழுப்பியுள்ளன.

"வெளியுறவு அமைச்சர், அலி சப்ரி கோத்தாபய ராஜபக்சவின் தனிப்பட்ட வழக்கறிஞராக இருந்து பல ஊழல் வழக்குகளில் அவருக்காக ஆஜராகியிருந்தார். வெளியுறவு அமைச்சராக பொறுப்பேற்கும் முன்னர், அலி சப்ரி நீதி அமைச்சராக இருந்தார். அந்த சமயத்தில் கோத்தாபய ராஜபக்ச ஜனாதிபதியாக இருந்த காரணத்தால் அவர் அந்த பதவியில் இருந்தது தொடர்பில் அலுவலகப் பணியில் அது பாதிப்பை ஏற்படுத்தக் கூடும் என்று கவலைகள் எழுந்தன. அதே போன்று அவண்ட் கார்ட் மிதக்கும் ஆயுதக் கிடங்கு வழக்கில் கோத்தாபய ராஜபக்சவை கைது செய்யப்படாமல் இருப்பதை தடுக்க தான் சட்ட மாஅதிபரிடம் தலையிட்டதாக கலாநிதி விஜேயதாஸ ராஜபக்ச ஒப்புக்கொண்டுள்ளார்".

கடந்த 2015ஆம் ஆண்டு மைத்ரிபால சிறிசேன மற்றும் ரணில் விக்ரமசிங்க தலைமையிலான "நல்லாட்சி அரசாங்கம்" ஐ நா மனித உரிமைகள் பேரவையின் 30/1 தீர்மானத்தை இணைந்து முன்மொழிந்தனர். அதில் அரசு மாறுங்கால நான்கு நீதி பரிபாலனம் தொடர்பில் நான்கு வழிமுறைகளை நடைமுறைப்படுத்துவதாக உறுதியளித்தது. அவை காணாமல் போனவர்களை தேடுவதற்கான ஒரு பொறிமுறை, இழப்பீடுகளிற்கான ஒரு அலுவலகம், உண்மையைக் கண்டறியும் ஆணையம் அமைத்தல் மற்றும் நீதிபரிபாலன் வழிமுறை என்பவையாகும்.

இன்று வரை, அந்த நடைமுறைகளில், காணாமல் போன நபர்கள் தொடர்பான அலுவலகம் (OMP) என்ற ஒரு விஷயம் மட்டுமே செயலாக்கப்பட்டது. அதிலும் பார்க்க அந்த அலுவலகமே ஒரு ஏமாற்று வேலை என்று கூறி காணாமல் போனவர்களின் குடும்ப உறுப்பினர்களால் நிராகரிப்பட்டது. அதேவேளை காணாமல் போனவர்களைக் கண்டுபிடிப்பதற்காக ஒரு அலுவலகம் அமைக்கப்பட்டாலும் இன்றுவரை அந்த அலுவலகம் ஒரு நபரைக் கூட கண்டுபிடிக்கவில்லை, மேலும் வடக்கு கிழக்கில் இருந்த அந்த அலுவலகத்தின் பெரும்பாலான கிளைகள் மூடப்பட்டுள்ளன. முல்லைத்தீவின் கிழக்குப் பகுதியின் கோடியிலிருந்த மக்கள் ஒரு முறைப்பாட்டைச் செய்வதற்கோ அல்லது ஆதாரங்களை சமர்ப்பிப்பதற்கோ அல்லது அவர்களிடமிருந்து பதிலைக் கோரவோ யாழ்ப்பாணம் செல்ல வேண்டியிருந்த நிலையில், வடக்கில் OMPயின் பல அலுவலகங்கள் மூடப்பட்டன.

இந்தாண்டு மார்ச் மாதம் 24 ஆம் திகதி ஐ நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பிலான ஆறாவது அறிக்கை "இலங்கையில் கடந்த காலங்களில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களிற்கு பொறுப்புக் கூறலும்" மேலும் "மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்களை அரசின் உயர் பதவிகளில் நியமிப்பதோ அல்லது அவர்களுக்கு பதவி உயர்வு அளிப்பதையோ தவிர்க்க வேண்டும்" என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

"ஐ நான் தீர்மானத்தை இணைந்து முன்மொழிந்த இலங்கை அரசு அதற்கமைய நம்பகத்தன்மை வாய்ந்த மாறுங்கால நீதி பரிபாலன வழிமுறைகளை ஏற்படுத்துவதற்கு அளித்த வாக்குறுதியை நடைமுறைபடுத்த தவறிய விதம் அரசின் நம்பகத்தன்மை குறித்த கேள்வியை எழுப்புகிறது" என்று தென் ஆப்ரிக்க மனித உரிமைகள் அமைப்புகள் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளன.

இதேவேளை மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டவர்கள் பொறுப்புக்கூறலில் இருந்து தப்பிப்பது மற்றும் சிவில் சமூகத்தினர் மீதான தொடரும் ஒடுக்குமுறையை முடிவிற்கு கொண்டுவருவதற்கு தமது அரசு இலங்கை அரசுடன் ஈடுபட வேண்டும் என்றும் தென் ஆப்ரிக்க மனித உரிமைகள் கூட்டமைப்பு கோரியுள்ளது. அப்படிச் செய்வதன் மூலம் ஐ நாவின் பல அமைப்புகள் பரிந்துரைத்துள்ளபடி அர்த்தமுள்ள வகையில் மாறுங்கால நீதிபரிபாலன வழிமுறையை ஏற்படுத்துவதற்கு சாதகமான சூழலை உருவாக்க முடியும் எனவும் அந்த அமைப்புகள் கூறியுள்ளன.

"மாறுங்கால நீதிபரிபாலன வழிமுறைகளை ஏற்படுத்துவதில் சிவில் சமூக அமைப்புகள் முக்கியப் பங்காற்றுகின்றன. அவ்வகையில் இலங்கையுடனான ஈடுபாட்டில் நேர்மை, வெளிப்படைத்தன்மை, அனைவரையும் உள்வாங்குவது ஆகியவற்றை தென் ஆப்ப்ரிக்க அரசு வலியுறுத்த வேண்டும். அது இந்த பொறிமுறை வெற்றி பெறுவதற்கு மிகவும் முக்கியமானதாகும்".

FHR தலைமையிலான அமைப்புகள் போர் குற்றச்சாட்டுகளிற்கு ஆளான ராஜபக்சக்கள் மற்றும் முன்னாள், இந்நாள் படை அதிகாரிகள் ஆகியவர்களிற்கு நெருங்கிய தொடர்புள்ளவர்களை தமது நாட்டிற்கு அழைத்தது தொடர்பில் ஏமாற்றம் வெளியிட்டுள்ளன.

"கோத்தாபய ராஜபக்சவுடன் நெருக்கமாக இருக்கும் நம்பகத்தன்மையையும் நியாத்தன்மையும் அற்றவர்கள் போல் தோன்றும் இரு நபர்களிற்கு அழைப்பு விடுத்ததன் மூலம், மிகவும் ஆழமான குறைபாடுள்ள ஒரு வழிமுறையை தென் ஆப்ரிக்கா சட்டபூர்வமாக்குகிறது".

இலங்கை அமைச்சர்கள் இப்போது நாடு திரும்பிவிட்டனர்.

"தென் ஆப்ரிக்க நீதி அமைச்சர் மற்றும் வல்லுநர்களுடனான ஈடுபாடு உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை அவர்கள் ஏற்படுத்திய அனுபவம் குறித்த மதிப்பு வாய்ந்த பார்வையை எமக்கு அளித்தது" என்று இலங்கை வெளியுறவு அமைச்சக அறிக்கை கூறுகிறது.

(22 பக்கத் தொடர்ச்சி)

## தமிழ்த் தேசியத்தின் தந்தை செல்வநாயகம்!

கட்சி ஆதரவாளர்கள் சிலர் விரக்தியோடு (சிங்களம் மட்டும் சட்டத்தின் கீழ் சிங்கள மொழியில் தேர்வு எழுதாத தமிழ் அரச ஊழியர்கள் வேலையை இழக்கும் நெருக்கடியில் இருந்த காலம்) தந்தை செல்வநாயகம் அவர்களோடு உரையாடுவது உண்டு. அவற்றை எல்லாம் மிகவும் கவனமாகச் செவிமடுப்பார். வேறு யாராவது குறுக்கிட்டுச் "சொன்னது போதும் அய்யாவுக்கு எல்லாம் விளங்கும்" என்று சொன்னாலும் "இல்லை. அவரைப் பேசவிடுங்கள்" என்று பெருந்தன்மையோடு சொல்லிவிடுவார்.

அப்படியான சமயங்களில் தந்தை செல்வநாயகம் தான் தோன்றி வாதாடிய வழக்குகள் பற்றி அவ்வப்போது சொல்லி எங்களை ஆற்றுப்படுத்துவார். ஒரு வழக்கில் அவரது கட்சிக்காரர் அறம்புறமாக வாக்குமூலம் அளித்துவிட்டார். தந்தை செல்வநாயகத்தின் உதவி சட்டத்தரணி பி. நவரத்தினராசா கியூ. சி தனது தலையை மேசைக்குக் கீழே புதைத்துக் கொண்டார். சாட்சிக் கூண்டில் இருந்து இறங்கி வந்த வழக்காளி தந்தை செல்வநாயகம் அவர்களைப் பார்த்து "எப்படி அய்யா எனது சாட்சியம்" என்று கொஞ்சம் பெருமிதத்தோடு கேட்டார். தந்தை செல்வநாயகம் "மெத்த நல்லது. நீர் ஒரு கெட்டிக்காரன்" என்று சொல்லி அவரது முதுகில் தட்டிக் கொடுத்தார். எந்த நெருக்கடியிலும் தன்னம்பிக்கையை கை விட்டுவிடக் கூடாது என்பதற்கு எடுத்துக்காட்டாக தந்தை செல்வநாயகம் இந்த நிகழ்வைச் சொன்னார்.

முப்பதுகளில் நடைமுறைக்கு வந்த டொனமூர் அரசியல் யாப்பு அதுவரை காலமும் நடைமுறையில் இருந்து வந்த வகுப்புவாரிப் பிரதிநிதித்துவ முறையை ஒழித்து அனைவருக்கும் வாக்குரிமை (Universal suffrage) என்ற அடிப்படையில் சட்டசபைக்குத் தேர்தல் மூலம் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் முறையை நடைமுறைப் படுத்தியது. அதனை சேர் பொன்னம்பலம் இராமநாதன் கடுமையாக எதிர்த்தார். "டொனமூர் என்றால் இனித் தமிழர் இல்லை என்று பொருள்" (Donoughmore means Tamils No More) என்று குரல் எழுப்பினார். புதிய தேர்தல் முறையில் தமிழரின் பிரதிநிதித்துவப் பலம் பெருமளவு குறைந்தது. அமைச்சரவையிலும் (Board of Ministers) தமிழர்கள் ஓரங்கட்டப்பட்டு நூற்றுக்கு நூறு சிங்களவர்களைக் கொண்ட அமைச்சரவை உருவாகியது. டொனமூர் அரசியல் யாப்பின் பின்னரே பெரும்பான்மைச் சிங்களவர்கள் தாங்கள் பெரும்பான்மையாக இருப்பதால் அரசியல் அதிகாரம் தங்களது கையில் இருக்க வேண்டும் என எண்ணத் தொடங்கினார்கள். இந்த வரலாற்றையும் எம்மிடம் சொன்னவர் தந்தை செல்வநாயகம் அவர்கள்தான்.

தமிழ் அரசுக் கட்சியின் தொடக்க காலத்தில் தந்தை செல்வாநாயகத்தோடு தோளோடு தோள் கொடுத்தவர்கள் பலர் இருந்தாலும் மூன்று பேரைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும். ஒருவர் இரும்பு மனிதர் என்று எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்ட டாக்டர் இ.எம்,வி. நாகநாதன். இரண்டாமவர் கோப்பாய்க் கோமகன் திரு. கு. வன்னியசிங்கம் அவர்கள். மூன்றாமவர் இளம் சட்டத்தரணி வி. நவரத்தினம். இந்த மூவரும் தந்தை செல்வநாயகத்தின் வலது இடது கைகளாகச் செயல்பட்டார்கள்.

இவர்களில் திரு. வி. நவரத்தினம் மட்டும் 1967 இல் சிறிமாவோ - சாஸ்திரி உடன்பாட்டுச் சட்டம், அடையாள அட்டை அமுலாக்கச் சட்டம் (டட்லி சேனநாயக்க அரசில்) நாடாளுமன்றத்தில் கொண்டு வரப்பட்டபோது அவற்றைக் கடுமையாக எதிர்த்துப் பேசி வாக்களித்த காரணத்துக்காக அவர் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்டார். திரு. வன்னியசிங்கம் அவர்கள் செப்தெம்பர் 17, 1959 ஆம் ஆண்டு (அகவை 49) இயற்கை எய்திய போது அவரது இடத்தை நிரப்பியவர் திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள் ஆவார்.

அய்ம்பதுகளிலும் அறுபதுகளிலும் தமிழரசுக் கட்சியை வளர்ப்பதற்காக வழக்கறிஞர் தொழிலில் கைநிறையச் சம்பாதித்த பணத்தை தந்தை செல்வநாயகம் தண்ணீராகச் செலவழித்தார். அரசியலில் புகுந்தால் பெயர், புகழ், பணம் சம்பாதிக்கலாம் என்ற நியதி இருந்த காலகட்டத்தில் தந்தை செல்வநாயகம் அரசியலில் ஈடுபட்டுத் தனது வழக்கறிஞர் தொழிலில் உழைத்த பணத்தை இழந்தார்.

கொழும்பில் அய்ம்பது ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்த அவர் கடைசிவரை ஒரு வாடகை வீட்டில் குடியிருந்தார் என்ற செய்தி பலருக்கு வியப்பாக இருக்கலாம். ஆனால் அதுதான் உண்மை. அவர் நினைத்திருந்தால் கொழும்பில் ஒன்றல்ல ஒன்பது வீடுகள் அவரால் வாங்கியிருக்க முடியும். வாடகை வீட்டில் வசிப்பதன் மூலம், கொழும்பு தமிழர்களின் நிரந்தர இருப்பிடமாக மாறிவிடக் கூடாது என்ற செய்தியை அவர் தெரிவிக்க விரும்பினார்.

தமிழ் அரசுக் கட்சியின் கொள்கை, கோட்பாடுகளை மக்களிடம் எடுத்துச் செல்ல சுதந்திரன் என்ற வார ஏட்டை 1952 ஆம் ஆண்டு தந்தை செல்வநாயகம் தொடங்கினார். இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல் ஆக அது வெளிவந்தது. அதனை நடத்த பெரும்தொகைப் பணத்தை செலவழித்தார். தொடக்கம் முதல் இறுதிவரை அது நட்டத்தில் ஓடியது. அரசாங்கம் அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி பத்திரிகைக்குத் தடை விதித்ததோடு அலுவகத்தையும் மாதக் கணக்கில் மூடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தது.

கொழும்பு, தமிழர்களுக்கு அந்நியமான இடம். வடக்கும் கிழக்குமே தமிழர்களுக்கு உரித்தான வாழ்விடம். இது தந்தை செல்வநாயகம் அவர்களது அசைக்க முடியாத நம்பிக்கையாகும். அவர் கடைசிவரை கொழும்பில் வாடகை வீட்டில் இருந்ததற்கு அதுவே காரணமாகும். தனது பிள்ளைகள் தாங்கள் பிறந்த மண்ணின் மணத்தையும் மண்ணுக்குரிய பண்பாடுகளையும் மறக்கக் கூடாது என்பதற்காக பள்ளி விடுமுறை நாட்களில் யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது சொந்த ஊரான தெல்லிப்பளைக்கு அவர்களை அனுப்பி வைத்து விடுவார்.

தந்தை செல்வநாயகத்திடம் தான் பெரிய தலைவர் என்ற எண்ணமோ, புகழ் பெற்ற வழக்கறிஞர் என்ற பெருமையோ எள்ளத்தனையும் இருந்ததில்லை. காட்சிக்கு எளியவர் என்று சொல்வோமே? அதற்குத் தந்தை செல்வநாயகம் இலக்கணமாகவும் இலக்கியமாகவும் விளங்கினார். எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அதில் மெய்ப் பொருள் காண்பது அறிவு, சொல்பவர் உருவுகண்டு எள்ளாமை, ஒருவர் சொல்பவரை இடை மறித்தல் செய்யாது எல்லாவற்றையும் பொறுமையோடு செவி மடுக்கும் பண்பு அவரிடம் இயற்கையாகவே குடிகொண்டிருந்தது.

சிலர் சரமாரியாகக் கட்சியில் உள்ள குறைகளை அடுக்கிக் கொண்டு போவார்கள். அவர்களைப் பார்த்து தந்தை செல்வநாயகம் கேட்கும் கேள்வி "சரி நோயைச் சொல்லி விட்டீர்கள். அதற்குரிய மருந்தையும் சொல்லுங்கள்" என்பார். R. R. Barr-Kumarakulasinghe

நாடாளுமன்றத்துக்கு ஒழுங்காகப் போகாமலோ அல்லது தொகுதிகளுக்குப் போகாமல் தங்கள் சட்டத் தொழிலைப் பார்ப்பதில் காலத்தைப் போக்கும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பற்றி முறையிட்டால் அதற்கு தந்தை செல்வநாயகம் இறுக்கும் பதில் "ஆட்களை இணக்கமுடியாது. உள்ளதை வைத்துத்தான் செயற்பட வேண்டும்."

தந்தை செல்வநாயகம் அரசியல் மேடைகளிலும் சரி, நீதிமன்றங்களிலும் சரி அதிகம் பேசுவதில்லை. குறிப்பாக நீதிமன்றங்களில் தேவைக்கு அதிகமாக ஒருவார்த்தைதானும் பேசமாட்டார். "எவ்வளவு பணம் கொடுத்திருக்கிறோம் மனிதர் இவ்வளவு சுருக்கமாகப் பேசிவிட்டு உட்கார்ந்து விட்டாரே வழக்கு வென்றமாதிரித்தான்" என்று ஏங்கிய கட்சிக்காரர்கள் நிறையப் பேர் இருந்தார்கள்.

தந்தை செல்வநாயகம் அவருக்கு வாலாயமான சில தமிழ்ச் சொற்றொடர்களை பேசும்போது அடிக்கடி பயன்படுத்துவார். "அவர்கள் எங்களை அழிக்க நினைப்பது துலாம்பரமாகத் தெரிகிறது." "எங்கள் போராட்டத்தில் வெற்றிபெறுவது என்பது ஒரு வில்லங்கமான காரியம்." "சிங்கள மேலாண்மையை நாங்கள் எதிர்த்துப் போராட வேண்டும் இல்லாவிட்டால் அழிந்து போவோம்." "வாள் எடுத்தவன் வாளால் அழிவான்" என்பன சில சொற்றொடர்கள்.

தந்தை செல்வநாயகம் மதத்தால் கிறித்தவராக இருந்தாலும் தமிழ் பண்பாட்டைக் கட்டிக் காப்பதில் ஆர்வமுள்ளவராக இருந்தார். கர்நாடக இசை சரி, நாதசுர இசை சரி இரண்டிலும் அவருக்கு மிகுந்த ஈடுபாடு உண்டு. வெள்ளவத்தைப் பிள்ளையார் கோவில் திருவிழாக் காலங்களில் இடம்பெறும் நாதசுரக் கச்சேரியை மண்டபத்தின் ஒரு ஓரத்தில் உட்கார்ந்து கொண்டு ஆடாமல் அசையாமல் மணித்தியாலக் கணக்கில் கேட்டு மகிழ்வார்.

தமிழ்ப் பண்பாடு காப்பதில் அவருக்கு இருந்த ஈடுபாட்டுக்கு இன்னொரு எடுத்துக்காட்டு அவரது திருமணம். திருமணமாகி நாலாம் நாள் சடங்கை தடபுடலாக வைக்க அவரது மாமனார் திரு. ஆர்.ஆர். பார் - குமாரசிங்கம் விரும்பினார். "நல்லது, அதனைத் தமிழ்ப் பண்பாட்டுக்கு இசைவாக நடத்த வேண்டும்" என்பது மாப்பிள்ளை போட்ட நிபந்தனை. மாமனாரும் சரி என்று தலையாட்டி விட்டார். மாமனார் வீட்டுக்கு தனது மனைவியோடு சென்ற மாப்பிள்ளைக்கு அதிர்ச்சி காத்திருந்தது. மேற்கத்தைய பாணியில் மேசையில் பீங்கான் கோப்பை, கரண்டி, முள்ளுக் கரண்டி சகிதம் தனது மாமனார் விருந்து ஏற்பாடு செய்திருந்தார். அதை விரும்பாது தனது புது மனைவியையும் அழைத்துக் கொண்டு வீட்டுக்குத் திரும்பிச் சென்று விட்டார்.

தந்தை செல்வநாயகத்தின் இந்தக் கொள்கைப் பிடிப்பு அரசியலிலும் இருந்தது. சந்தர்ப்பவாதம், வளைந்து கொடுத்தல் அவரது அரசியல் அகராதியில் இல்லாத சொற்கள். முடிவு மட்டுமல்ல அதனை அடையும் வழியும் சரியாக இருக்க வேண்டும் என்பது அவரது கோட்பாடாகும்.

1972 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட ஸ்ரீலங்காவின் புதிய ஒற்றையாட்சி யாப்புக்கு எதிர்ப்புத் தெரிவிக்கு முகமாக தந்தை செல்வநாயகம் தனது நா. உறுப்பினர் பதவியை உதறித்தள்ளித் தமிழ்மக்கள் ஆதரவு யார் பக்கம் என்பதை எண்பிக்க இடைத் தேர்தல் நடாத்துமாறு ஆட்சியாளருக்கு அறை கூவல் விடுத்தார். மூன்று ஆண்டுகள் காலத்தைக் கடத்திய பின்னர் நடத்தப்பட்ட இடைத் தேர்தலில் தன்னோடு எதிர்த்துப் போட்டியிட்ட ஆளும் கட்சி வேட்பாளரை 16,470 அதிகப்படியான வாக்கு வித்தியாசத்தில் தோற்கடித்து வெற்றிவாகை சூடினார். இப்படி இடைத் தேர்தலில் தோற்கடிக்கப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளர் வி. பொன்னம்பலம் சில ஆண்டுகள் கழித்து தமிழழக் கோரிக்கையை ஏற்று அதனை முற்றாக ஆதரித்தார் என்பது தந்தை செல்வநாயகத்தின் அரசியல் ஆளுமைக்குக் கிடைத்த இரண்டாவது வெற்றியாகும்.

பெரும்பான்மை சமூகத்தைச் சேர்ந்த அவரது அரசியல்வாதிகளும் தந்தை செல்வநாயகத்தின் கொள்கை கோட்பாட்டை விரும்பாவிட்டாலும் அவரது நேர்மையில் ஒருபோதும் அய்யப்பட்டது கிடையாது. தமிழ் மக்கள் அவரை "ஈழத்துக் காந்தி" என்றும் "தமிழ்த் தேசியத்தின் தந்தை" என்றும் அன்போடும் உரிமையோடும் அழைத்தார்கள்.

தந்தை செல்வநாயகம் அரசியலுக்கு வந்திராது தான் உண்டு, தனது தொழில் உண்டு, குடும்பம் உண்டு என்று இருந்து பின்னர் தன்னைத் தேடிவந்த உயர் நீதிமன்ற நீதியரசர் பதவியை ஏற்று ஓய்வு பெற்றிருந்தால் தமிழினத்தின் அரசியல் வரலாறு நிச்சயமாக மாலுமி இல்லாத படகுபோலத் திசை மாறிப் போயிருக்கும். சுயநலத் தமிழ்த் தலைவர்களுக்குப் பணம், பதவி, பட்டங்கள் கொடுத்து முழுத் தமிழினத்தையுமே சிங்கள ஆட்சியாளர்கள் விலைக்கு வாங்கியிருப்பார்கள். அதன்பின் தமிழர்களை தாலாட்டுப்பாடித் தூங்க வைத்து கழுத்தை அறுத்திருந்திருப்பார்கள். தமிழினம் மீளா அடிமைத் தளையில் கட்டுண்டு அழிந்து போயிருக்கும்.

மலையளவு பொருளைத் தொலைத்து, சிறை சென்று, உடல் நலம் கெட்ட போதும் தமிழ்த் தேசியத்துக்கு நீர் வார்த்து, உரம் இட்டு தமிழ் மக்களை கரடு முரடான விடுதலைப் பாதையில் அழைத்துச் சென்றவர் தந்தை செல்வநாயகம் அவர்கள். அந்தப் பயணம் இன்றும் தொடர்கிறது. தமிழர்களின் தாயகமான வட - கிழக்கை உள்ளடக்கிய நிலப்பரப்பில் தமிழர்களுக்கு உரிய தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் கூட்டாச்சி அரசை நிறுவ வேண்டும் என்ற கோரிக்கை இன்று தமிழர் தரப்பால் அரசியல் வேறுபாடின்றி ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

தந்தை செல்வநாயகம் அவர்களது நினைவு, வான் உள்ளளவும், கார் உள்ளளவும், கடல் நீர் உள்ளளவும் என்றும் தமிழ்மக்களது நெஞ்சங்களில் குடியிருக்கும்!

### வழியெங்கும் வைரங்கள் - 10

***** ***** ***** ***** *****

கவிஞர் தியாரூ

ஞான வித்தே சிறகெதற்கு;
வானம் உன்றன் கைகளிலே!
ஞானச் சுடரே விளக்கெதற்கு;
ஞால வெளிச்சம் விழிகளிலே!

கோடை வெயிலில் குடையெதற்கு
குடையும் நிழலும் இமைகளிலே!
கூடைப் பூவே கனவெதற்கு;
காணும் யாவும் கைகளிலே!

பாட்டுக் குயிலே ஏடெதற்கு;
கவிதை ஏடு நின்மனமே!
தோட்டக் கிளியே கூடெதற்கு;
தழுவும் அன்பில் சுகம்சுகமே!

தென்றற் காற்றே திசையெதற்கு;
தேச மனைத்தும் உன்திசையே!
இன்பத் தேனே இசையெதற்கு;
இதயத் துடிப்பே இசைதானே!



# பெரியார் நினைவை போற்றும் வகையில் வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு விழா ஓராண்டு கொண்டாடப்படும் : முதல்வர் ஸ்டாலின்

வைக்கம் போராட்டம் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, மார்ச் 30ம் தேதி தொடங்கி ஓராண்டு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படும். பிற மாநிலங்களில் ஒடுக்கப்பட்டோர் நலனுக்காக பாடுபட்டு, குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தும் ஆளுமைகள் அல்லது நிறுவனங்களுக்கு ஆண்டுதோறும் 'வைக்கம் விருது' வழங்கப்படும் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.வைக்கம் போராட்டம் நூற்றாண்டு விழா குறித்து, சட்டப்பேரவையில் 110 விதியின்கீழ் முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: கேரளாவின் கோட்டயம் மாவட்டம் வைக்கத்தில் உள்ள மகாதேவர் கோயிலை சுற்றி அமைந்துள்ள தெருக்களில், ஒடுக்கப்பட்டவர்கள் நடப்பதற்கு இருந்த தடைகளை நீக்கக் கோரி நடந்ததுதான் வைக்கம் போராட்டம்.

1924 மார்ச் 30ம் தேதி கேரள தலைவர் டி.கே. மாதவனால் தொடங்கப்பட்டது.கேரளத் தலைவர்கள் அழைப்பின்பேரில், தமிழக காங்கிரஸ் கட்சி தலைவராக இருந்த பெரியார், வைக்கம் சென்று, அந்த போராட்டத்துக்கு தலைமை ஏற்றார். போராட்டம் 1925 நவ.23ம் தேதி முடிவுக்கு வந்தது. அம்மாதம் 29ம் தேதி வைக்கத்தில் நடந்த வெற்றி விழாவில், 'வைக்கம் வீரர்' என்று பெரியாரை பாராட்டினர்.கோயில் தெருவில் அனைவரும் நடக்கலாம் என்ற உரிமையை பெற்றுத்தந்த இந்த போராட்டம் நடந்து 100 ஆண்டுகள் ஆகின்றன. மக்களுக்காக எல்லைகளைக் கடந்து போராடி, வெற்றி கண்ட பெரியாரின் நினைவைப் போற்றும் வகையில், 'வைக்கம் போராட்டத்தின் நூற்றாண்டு விழா' நிகழ்ச்சிகளை சிறப்பாக நடத்த



தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.வைக்கம் போராட்டம் தொடங்கிய மார்ச் 30ம் தேதி நூற்றாண்டு விழாவை தொடங்கி ஓராண்டு முழுவதும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படும்.

ஏப்.1ம் தேதி கேரள அரசு ஏற்பாடு செய்துள்ள, வைக்கம் போராட்ட நூற்றாண்டு விழாவில் கேரள முதல்வர் பினராயி விஜயனுடன், நானும் சிறப்பு அழைப்பாளராக பங்கேற்று, வைக்கம் போராட்ட நினைவுத் தூணுக்கு மரியாதை செலுத்துகிறோம். தமிழக ஆய்வாளர் பழ.அதியமான் எழுதிய 'வைக்கம் போராட்டம்' என்ற தமிழ் நூலின் மலையாள மொழிபெயர்ப்பு வெளியிடப்படுகிறது. தமிழ்நாடு பாட நூல் கழகம் கேரளா டி.சி. பதிப்பகத்தின் கூட்டு வெளியீடான இந்த நூலின் தெலுங்கு, கன்னடம், ஆங்கில பதிப்புகளும் விரைவில் வெளியிடப்படும். நவ.29ம் தேதி தமிழக, கேரள முதல்வர்கள் மற்றும் பலர் பங்கேற்கும் சிறப்பான நிகழ்ச்சி தமிழக அரசால் நடத்தப்படும்.பெரியாரை நினைவுகூரும் வகையில், பிற மாநிலங்களில் ஒடுக்கப்பட்டவர்கள் நலனுக்காக பாடுபட்டு, குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தும் ஆளுமைகள் அல்லது நிறுவனங்களுக்கு ஆண்டுதோறும் 'வைக்கம் விருது' செப்.17ம் தேதி சமூக நீதி தினத்தை முன்னிட்டு வழங்கப்படும்.

வைக்கத்தில் உள்ள பெரியார் நினைவிடத்தை மறுசீரமைக்கவும், பெரியார் குறித்த நினைவுப்பொருட்கள் கூடுதலாக இடம்பெறவும் ரூ.8.14 கோடி ஒதுக்கப்படும்.பெரியார் கைது செய்யப்பட்டு சிறை வைக்கப்பட்டிருந்த அருவிக்குட்டி கிராமத்தில், புதிதாக பெரியார் நினைவிடம் உருவாக்க முயற்சி மேற்கொள்ளப்படும்.

வைக்கம் போராட்ட நூற்றாண்டு நினைவாக சிறப்பு அஞ்சல் தலை வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும்.முக்கிய பல்கலைக்கழகங்கள், கல்லூரிகளில் வைக்கம் போராட்டம் தொடர்பான கருத்தரங்குகள் நடத்தப்படும். பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு கட்டுரை, பேச்சுப் போட்டி நடத்தி பரிசுகள் வழங்கப்படும்.வைக்கம் போராட்ட நூற்றாண்டு குறித்து மாணவர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த 64 பக்க நூல் ஒன்று கொண்டுவரப்படும்.இவ்வாறு முதல்வர் தெரிவித்தார். இதை அதிமுக, காங்கிரஸ், பாமக, பாஜக, விசிக, மார்க்சிஸ்ட்கம்யூனிஸ்ட், இந்திய கம்யூனிஸ்ட், மமக, கொமதேக, தவாக என அனைத்து கட்சிகளும் வரவேற்றன. பாஜக சட்டப்பேரவை கட்சித் தலைவர் நயினார் நாகேந்திரன் பேசும் போது, ''முதல்வரின் அறிவிப்பை வரவேற்கிறேன். அதேநேரம் இன்று ராமநவமி. ராமர் பிறந்த தினம் என்பதையும் பதிவு செய்கிறேன்'' என்றார்.

# சென்னை மாநகராட்சி பட்ஜெட் தாக்கல் 'மக்களைத் தேடி மேயர்' திட்டம் அறிமுகம்



சென்னை மாநகராட்சியில் ரூ.4 ஆயிரத்து 466 கோடி மதிப்புக்கான பட்ஜெட் நேற்று தாக்கல் செய்யப்பட்டது. பொதுமக்களின் புகார்கள் மீது தீர்வுகாண 'மக்களைத் தேடி மேயர்' என்ற திட்டத்தை மேயர் ஆர்.பிரியா அறிவித்துள்ளார். சென்னை மாநகராட்சி மாமன்றக் கூட்டம் ஆர்.பிரியா தலைமையில், துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையர் ககன்தீப் சிங் பேடி ஆகியோர் முன்னிலையில், ரிப்பன் மாளிகை கூட்ட அரங்கில் நேற்று நடைபெற்றது.

அதில் மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (வரி விதிப்பு மற்றும் நிதி) சர்ப்ஜெயா தாஸ் பங்கேற்று மாநகராட்சி பட்ஜெட்டை தாக்கல் செய்து உரையாற்றியதாவது:மாநகராட்சியில் 2023 24 நிதியாண்டில் வருவாய் செலவினம் ரூ.4,466 கோடியே 29 லட்சமாக இருக்கும். வருவாய் பற்றாக்குறை ரூ.334 கோடியாக இருக்கும். சொத்து வரி வருவாய் ரூ.1,680 கோடி, தொழில் வரி வருவாய் ரூ.500 கோடியாக இருக்கும். பணியாளர் ஊதியம் மற்றும் ஓய்வூதியம் ரூ.1,939 கோடி, நிர்வாக செலவு ரூ.231 கோடி, பராமரிப்பு செலவினங்கள்ரூ.1,079 கோடி, கடனுக்கான வட்டி செலுத்துதல் ரூ.148 கோடியாக இருக்கும்.மழைநீர் வடிகால் பணிகளுக்கு ரூ.1,482கோடி, பேருந்து சாலை மேம்பாட்டுக்கு ரூ.881 கோடி, திடக்கழிவு மேலாண்மைக்கு ரூ.260 கோடி, சிறப்புத் திட்டங்களுக்கு ரூ.313 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.முன்னதாக மாமன்றத்தில் மேயர்.ஆர்.பிரியா அறிவித்ததாவது: பொதுமக்கள் அளிக்கும் கோரிக்கை மனுக்களின் மீது விரைந்து நடவடிக்கை எடுத்து குறைகளைக் களைய, மாதம் ஒருமுறை ஏதேனும் ஒரு வட்டார அலுவலகத்தில் மனுக்களை மேயர் நேரடியாக பெறும்வகையில் 'மக்களைத் தேடி மேயர்' திட்டம்செயல்படுத்தப்படும். கவுன்சிலர்களின் வார்டு மேம்பாட்டு நிதி ரூ.35 லட்சத்திலிருந்து ரூ.40 லட்சமாக உயர்த்தப்படும்.மாநகராட்சியுடன் புதிதாக இணைக்கப்பட்டுள்ள 139 பள்ளிக் கட்டிடங்கள் உட்படமாநகராட்சி கட்டிடங்கள் ரூ.45 கோடியில்சீரமைக்கப்படும்.

இசை ஆசிரியர்கள் உள்ள 20 பள்ளிகளுக்கு ரூ.5 லட்சத்தில்ஆர்மோனியம், தாளம் உள்ளிட்ட இசைக்கருவிகள் வாங்கப்படும்.2 லட்சத்து 50 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்படும். மாநகராட்சிபூங்காக்கள் அனைத்தும் ரூ.48 கோடியில் பராமரிக்கப்படும். தேர்வுகளில் 100 சதவீதம் தேர்ச்சி வழங்கிய ஆசிரியர்கள் கல்விச் சுற்றுலாவாக சென்னை ஐஐடி,பெங்களூர் ஐஐஎம், டெல்லி பல்கலைக்கழகம் ஆகியவற்றுக்கு அழைத்துச் செல்லப்படுவர்.மழைநீர் வடிகால்களில் ரூ.55 கோடியில்தூர்வாரும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

மயானங்கள் ரூ.14 கோடியில் சீரமைக்கப்படும். மக்கள் அதிகம் கூடும் மெரினாபோன்ற இடங்களில் ரூ.2 கோடியே 20 லட்சத்தில் 105 சிசிடிவி கேமராக்கள் நிறுவப்படும்.ரூ.1.35 கோடியில் நாய்கள், கால்நடைகளைப் பிடிக்க 11 வாகனங்கள் வாங்கப்படும். 10 ஆயிரம் தூய்மைப் பணியாளர்களுக்கு ரூ.3.25 கோடியில் சீருடைவழங்கப்படும் என்று அவர் அறிவித்தார். இந்த பட்ஜெட் மீதான விவாதம் இன்று காலை 10 மணிக்குத் தொடங்குகிறது. காங்கிரஸ் கவுன்சிலர்கள்: ராகுல்காந்தியின் எம்பி பதவி பறிக்கப்பட்டதைக் கண்டித்து எம்.எஸ். திரவியம் தலைமையில், காங்கிரஸ் கவுன்சிலர்கள் சி.ராஜசேகரன், டில்லிபாபு உள்ளிட்டோர் கருப்பு உடை அணிந்து மாமன்றக்கூட்டத்துக்கு வந்தனர். இன்று உள்ளிருப்பு போராட்டம் நடத்த உள்ளனர்.

# தமிழகத்தில் கரோனா பரவல் மீண்டும் அதிகரிப்பு: அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்



தமிழகத்தில் தினசரி கரோனா பாதிப்பு 100 ஐ கடந்துள்ளது. எனவே, கரோனா விதிமுறைகளை பொதுமக்கள் கட்டாயம் கடைபிடிக்க வேண்டும் என்று அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார். சென்னை ஓமந்தூரார் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 'மருத்துவத்தில் செயற்கை நுண்ணறிவு' குறித்த கருத்தரங்கை சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று தொடங்கி வைத்து பேசியதாவது:உலகம் முழுவதும் ஒமைக்ரான் உருமாற்ற வைரஸின் தாக்கம் மீண்டும் தொடங்கியுள்ளது.

சென்னை, மதுரை, கோவை, திருச்சி போன்ற பன்னாட்டு விமான நிலையங்களில் கடந்த மாதம் வரை வெளிநாடுகளில் இருந்து வரும் பயணிகளில் சுமார் 2 சதவீதம் பேருக்கு கரோனா பரிசோதனை செய்தபோது, சராசரியாக 23 நாட்களுக்கு ஒருமுறை ஒருவருக்கு நோய் தொற்று கண்டறியப்பட்டது. தற்போது, தினமும் 810 பேருக்கு தொற்று கண்டறியப்படுகிறது.தமிழகத்தில் கரோனா பாதிப்பு எண்ணிக்கை பூஜ்ஜியத்தை நெருங்கி வந்த நிலையில், தற்போது தினசரி பாதிப்பு 100ஐ கடந்துள்ளது.

ஆனால், ஒரே பகுதியில் பலரையும் பாதிக்கிற 'கிளஸ்டர்' வகை பரவல் இல்லை என்பது ஆறுதல். இது மிதமான பாதிப்பை ஏற்படுத்தும் தொற்றாக இருப்பதால், மக்கள் அச்சப்பட வேண்டாம். ஆனாலும், கரோனா விதிமுறைகளை கட்டாயம் கடைபிடிக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார். சென்னை பள்ளிக்கரணையில் ஒரு நிகழ்ச்சியில் பங்கேற்ற அமைச்சர் மா.சுப்பிரமணியன், செய்தியாளர்களிடம் கூறியபோது,

''வாரத்துக்கு ஒரு மாத்திரை உட்கொள்ள வேண்டிய நிலையில் ஒரே நாளில் 60, 70 என்று உட்கொண்டதால், உயிரிழப்பு ஏற்பட்டதை சமீபத்தில் பார்த்தோம். அதே போல, உடல் கட்டமைப்பை காட்ட வேண்டும் என தவறான மருந்து எடுத்துக் கொள்வது, அளவுக்கு அதிகமாக பயிற்சி செய்வதும் விபரீதமான முடிவுகளை ஏற்படுத்தும். எனவே, மருந்து, மாத்திரையோ, உடற்பயிற்சியோ எதுவாக இருந்தாலும், பரிந்துரையின்பேரில் அளவோடு இருப்பது அவசியம்'' என்றார்.

# கடந்தவையும் கடப்பவையும் (52)

அக்கம் பக்கம் பார்த்தபடி கடந்தாலும் - மிக
இக்கட்டான சூழ்நிலையில் கல்வி தந்த பாடசாலை

'வல்வை மகளிர்' அதை நன்றியோடு ஒருதடவை - அதன்
எல்லையைக் கடக்கும் முன்பும் பார்த்துவிட்டு

'இன்று பொலிகண்டிவரை போனாற் போதும்'
என்ற எண்ணமது மேலிடவே ஓடுகிறோம்

எதிர் கொள்ளும் பாதையது புதியதல்ல - ஆனாலும்
எதிரிலே பார்ப்பவற்றில் புதியனவே அதிகமங்கு

போர்க்காலச் சூழலிலே ஆரும் அவ்விடத்தைப்
பார்க்காத சூழலொன்றும் இருந்ததங்கு - போருக்கு

முன்னிருந்த காலமெல்லாம் குதூகலம் தான்
சின்னவராய் இருந்த போதும் புதுவரவைப் பார்ப்பதற்கு - மிக

ஆவலாய் வெளிக்கிட்டு வருவதுவும் - கைநிறைய
கலர்கலராய் இனிப்புகளை அள்ளுவதும்

புதிதாகப் பிறந்தவளை மெதுவாக அணைப்பதுவும் - தங்கையவள்
விரைவாக வீடுவரவேணும் என ஆணையிட்டுச் செல்வதுவும்

நேற்று நடந்ததுபோல் நினைவினிலே வந்துபோச்சு - மகப்
பேற்றுக்கு மட்டுமே அதிக கூட்டம் - அன்று

இன்றோ மற்றைய சேவைகளும் மகத்தாக நடக்கிறதாம்
அன்றிதனை 'தருமாஸ்பத்திரி' என்று ஒதிக்கியதும்

தரக்குறைவாய் எண்ணியதும் உண்மையே - ஆனாலும்
மகப்பேற்றிற்கு முதலிடமாம் சிறப்பான பராமரிப்பால் - முன்னரெல்லாம்

சின்னதாய் தலையிடி வந்தாலும் நாடுவதோ
தன்னந்தனியிடத்தில் தனியாகச் செயற்பட்ட மருத்துவரை - உண்மையில்

அவர்களின் முகத்தைப் பார்க்கும் போதும்
அவர்களின் குரல்தனைக் கேட்கும் போதும்

வருத்தவகை எதுவெனிலும் விரைவிலது குணமடையும் - இன்றைக்கும்
இருப்பவர் வைத்தியர் முருகானந்தன் - அன்றைக்கு

பருத்தித்துறை பத்மநாதன் டொக்கரிடம் போவதானால்
பெருவிருப்பம் கொள்வார்கள் பிள்ளைகளும்

போர்க்காலம் வந்த போதே பொது வைத்தியசாலைகளின்
நேர்த்தியும் மகத்துவமும் மக்களுக்குப்புரிந்தன - தான்

இரத்தக் காடாக மாறிய வேளையிலும் - மக்களுக்கு
மெத்தப் பெருமுதவி செய்த இடம்

'மந்திகை' வைத்தியசாலை என்பதையும் - இங்கு
முந்தி விழுந்து சொல்லியே ஆகவேணும்

கோட்டையது கிட்டவாக இருந்ததுவும் - அமைதிக்கானோர்
வேட்டையாடிச் சிதைத்ததுவும் காரணமே - மக்கள்

தைரியமாய் போக மறுத்தமைக்கும் - யாழ்ப்பாண
வைத்தியசாலை சிறப்பாக இயங்காது இருந்தமைக்கும் - ஆனாலும்

உருக்குலைந்த உடற்பாகங்களோடு வந்தவர்க்கும் - இனி
உயிர் வராது என்பது தெரிந்த போதும்

உருக்குலைந்த உடலங்களை அள்ளிவந்து கொடுத்துவிட்டு
இருக்குமோ தெரியாது வாய்ப்பெதுவும் உயிர்ப்பதற்கு - என

தள்ளி நின்று கதறிய மக்களிக்காய் - அன்று
தன்னந்தனியவே மொத்தவூர் மக்களையும் காத்ததுவும்

'மந்திகை' என்ற அந்த மகத்தான மருத்துவமனை - இதை
எந்தக்காலமும் மறக்கக்கூடாது என்பதுவும் உண்மையே - ஊறணி

இது கடற்கரைப் பக்கம் இருந்ததுவும் - கடலில் திரிவோரின்
முழு கண்காணிப்பில் இருந்ததுவும் - அதிலும்

அடிக்கடி குண்டுகளுக்கு இலக்கானதுவும் - இதன்
செயற்பாடும் சிறப்புற நடவாமைக்குக் காரணங்கள் - இன்று

புதுப்பொலிவுடன் பென்னாம்பெரிய எழுத்தொடு
பார்த்தபொழுது என்னவென்று சொல்லுவது? - ஆனாலும்

சொல்லத்தான் வேண்டும்......

(தொடரும்)

-- உமா மோகன் -- மொன்றியால் - கனடா --




SUBRA
SUBRA MORTGAGE SOLUTIONS
MORTGAGE FINANCIAL
✦ RESIDENTIAL ✦ COMMERCIAL ✦ INDUSTRIAL
✦ VACANT LAND ✦ CONSTRUCTION
Know the basic things on Mortgage to find a better way for your Future!
CONTACT US TODAY
NESAN
416-908-5656
1st & 2nd Mortgages | Purchase | Refinance | Renewal | Switches | Equity lind of Credit
Pre-approvals | Self-employed | Multi-rental properties | New immigrants
Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721
1585 Markham Rd, Unit #406, Toronto, M1B 2W1
www.subra.com
WE DEAL WITH ALL BANKS
Brokerage #10330
Powered By
MORTGAGE ALLIANCE
Scotiabank
radius financial
EQUITABLE BANK
RMG mortgages
TD Canada Trust
RFA
FIRST NATIONAL FINANCIAL LP
HOME TRUST
MCAP

மொன்றியல் நகரில்
உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவிததல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

Lanka Salon & Spa லங்கா சலூன்
Haircut | Hair Styling | Shaving
- Men's Hair Cut
- Beard Lineup
- Kid's Hair Cut
- Hair Oil Massage
- Baby Shave
- Hair Colouring
- Facial
BARBER SHOP
• 905-808-9930 5 MCMURCHY AVE N, UNIT 12 BRAMPTON, ON L6X 2R6
• 905-783-1895 3470 PLATINUM DRIVE, UNIT 35 MISSISSAUGA, ON L5M 2S4

உதயம் 1408 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday March 31, 2023

# ஸ்காபுறோவில் சிறப்பாக இயங்கிவரும் FRONTLINE COMMUNITY CENTRE நடத்திய HONORING OUR HEROES

திருமதி விஜயா குலா அவர்களை நிறைவேற்றுப் பணிப்பாளராகக் கொண்டு ஸ்காபுறோ நகரில் கடந்த எட்டு வருடங்களாக சிறப்பாக இயங்கிவரும் சேவை நிறுவனமான **FRONTLINE COMMUNITY CENTRE** நடத்திய இரண்டு நாள் வெற்றிகரமான விழா **HONORING OUR HEROES** கடந்த சனி ஞாயிறு ஆகிய தினங்களான 25ம் 26ம் திகதிகளில் **Markham Fairgrounds** உள்ளக அரங்கில் சிறப்பாக நடைபெற்றது.

(உள்ளே 15ம் பக்கத்தில் தொடர்ச்சி)






# ஒன்ராறியோ மாகாண அரசின் 2023ஆம் ஆண்டு வரவுசெலவுத் திட்டமானது வலுவான ஒன்ராறியோவை உருவாக்கும்



## ஸ்காபரோ - றூஜ் பார்க் மாநில சட்டமன்ற உறுப்பினர் விஜய் தணிகாசலம் நம்பிக்கை

மார்ச் 23 அன்று, ஒன்ராறியோ அரசாங்கம் “வலுவான ஒன்ராறியோவை உருவாக்குதல்“ எனும் அடிப்படையில் ஒன்ராறியோவின் 2023ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட்டத்தினை வெளியிட்டது. இத்திட்டமானது ஒன்ராறியோவில் உட்கட்டமைப்புகளை உருவாக்குதல், முக்கியமான முதலீடுகளை ஒன்ராறியோவை நோக்கி ஈர்த்தல், சேவைகளை மேம்படுத்துதல் போன்றவற்றின் மூலம் மாநிலத்தின் பொருளாதாரத்தை வளர்க்கும் நோக்கில் வெளியிட்டுள்ளது. இவ்வரவுசெலவுத் திட்டமானது ஒன்ராறியோ மக்களுக்கும் வணிகங்களுக்கும் முன்னுரிமைகளை வழங்கும் அதேவேளையில், ஒன்ராறியோவின் பற்றாக்குறையை நீக்குவதற்கு வழியமைக்கும்.

(உள்ளே 14ம் பக்கத்தில் தொடர்ச்சி)

# கனடா— கந்தர்மடம் மக்கள் ஒன்றியம்" நிர்வாகத்தினர் நடத்திய வருடாந்த ஒன்றுகூடல்



கனடாவில் நீண்ட காலமாக சிறப்பாக இயங்கிவரும்“ கந்தர்மடம் மக்கள் ஒன்றியம்“ நிர்வாகத்தினர் நடத்திய வருடாந்த ஒன்றுகூடல். கடந்த 25ம் திகதி சனிக்கிழமையன்று மாலை ஸ்காபுறோ பாபா விழா மண்டபத்தில் நடைபெற்றது. இங்கே காணப்படும் படம் அங்கு எடுக்கப்பெற்றதாகும்

(உள்ளே விரிவான செய்தி 15ம் பக்கத்தில்)

# சிகரம் இசைப் பயிற்சி நிறுவனம் நடத்திய செல்வி பைரவியின் KEYBOARD TALENT SHOW நிகழ்வு



சிகரம் இசைப் பயிற்சி நிறுவனத்தின் நிறுவனரும் இசைக் கலைஞரும் இசைத்துறை குருவுமாகிய தேசா குகன் அவர்களின் மாணவி செல்வி பைரவி ஜெயச்சந்திரன் அவர்களின் **KEYBOARD TALENT SHOW** நிகழ்வு கடந்த 25-03-2023 அன்று ஸ்காபுறோவில் அமைந்துள்ள தமிழிசைக் கலாமன்றத்தின் கலா மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்வின் பிரதம விருந்தினராக பவதாரணியின் பாரதி கலைக்கூடத்தின் நிறுவுனரும் இசை ஆசிரியரும் திரைப்பட நடிகருமான மதிவாசன் அவர்கள் அழைக்கப்பெற்றிருந்தார். இங்கே உள்ள படத்தில் மதிவாசன் அவர்கள் மேடையில் கௌரவிக்கப்பெறுவதைக் காணலாம்.

(உள்ளே 15ம் பக்கத்தில் தொடர்ச்சி)

# தமிழ்த் தேசியத்தின் தந்தை செல்வநாயகம்! நக்கீரன்— கனடா

**(தந்தை செல்வநாயகம் அவர்களது 125 ஆவது பிறந்த நாள்)**

தமிழர்களது விடுதலைப் போராட்டத்திற்கு நீண்ட வரலாறு உண்டு. இருபத்தேழு ஆண்டுகள் (1956 - 1983) அமைதிவழிப் போராட்டம். மேலும் 26 ஆண்டுகள் (1983 - 2009) ஆயுதப் போராட்டம். இப்போது கடந்த 13 ஆண்டுகளுக்கு மேலாக மீண்டும் அமைதிவழிப் போராட்டம். அதாவது மீண்டும் தொடக்கப் புள்ளியில் வந்து நிற்கிறோம். அமைதி வழிப் போராட்டத்துக்கு தலைமை தாங்கியவர் தந்தை செல்வநாயகம். 1948 இல் நாட்டின் பிரதமராக இருந்த டிஎஸ் சேனநாயக்க அவர்களால் கொண்டு வரப்பட்ட 18 ஆம் இலக்க இலங்கைக் குடியுரிமைச் சட்டம் இலங்கை சுதந்திரம் பெற்று 285 நாட்களுக்குள் (ஓகஸ்ட் 20, 1948) நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. நாடாளுமன்றத்தில் அதனைத் தீவிரமாக எதிர்த்துப் பேசியவர் தந்தை செல்வநாயகம். எதிர்த்துப் பேசியதோடு நில்லாமல் எதிர்த்து வாக்களிக்கவும் செய்தார்

(உள்ளே 22ம் பக்கத்தில் தொடர்ச்சி)

புலம்பெயர் உறவுகளே! தாயகம் செல்லுகையில் இங்கு தங்கிப் பாருங்கள்..
தமிழர் நிர்வாகத்தில் இயங்கும் தரமான நட்சத்திர விடுதி
MaRadha HOTEL

COLOMBO - SRI LANKA
SALES@MARADHA.LK
+94112550136